T. B. No. 943

3641

922-945

[illegible]

அரங்கசாமி நாயுடு (கா. க.)


Q23:417x
N26.
67691

3

# NĀYANMĀR CHARITRAM

BY

C. T. RANGASWAMI NAIDU

*(Tamil Pandit)*

25 AUG 1925
MADRAS

Published by

VINAYAGAM & CO.,

CHOOLAI, MADRAS.

1926

Copy Right]

[Price As 8.

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட

மாதம் 19 வருடம்

செப்பனிட்டு முடித்த

மாதம் 19 வருடம்

ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.


943

# நாயன்மார் சரித்திரம்

(படங்களோடு கூடியது)

---


தமிழ்ப் பண்டிதர்

கா. தி. அரங்கசாமி நாயுடு எழுதியது.



25 AUG 1926
MADRAS

3641
922.945



சென்னை - சூளை

விநாயகம் அண்டு கம்பெனியாரால்

வெளியிடப்பட்டது.

1926


காபிரைட்]

[விலை அணா 8.

67691

O23:417:x
N26

25 AUG 1926

# முன்னுரை

உலகத்தின் மாந்தர்களுக்குப் பொருள் இன்றியமையாததாகும். அப்பொருள், செல்வப்பொருள் கல்விப்பொருள் என இருவகையாம். செல்வப்பொருளுக்குத் தாயத்தார், கள்வர், வலியர், அரசர் முதலியவர்களாற் கேடுண்டாம். கல்விப் பொருளுக்கு அஃதில்லை. செல்வப் பொருள் பிறருக்குக் கொடுக்கக் குறையும்; கல்விப் பொருள் பிறருக்குக் கொடுக்க வளரும். ஆதலின், செல்வப் பொருளினுங் கல்விப் பொருளே சிறப்புடையதாகும். இதனை யுணர்த்தவே,

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவர்க்கு
மாடல்ல மற்ற யவை"

எனத் திருவள்ளுவ தேவரும்,

"கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி"

என ஔவையாரும் அருளிச் செய்தார்கள். ஆகையால், தந்தை மைந்தர்க்குத் தேடி வைத்தற்குரிய பொருள் கல்விப் பொருளேயாகும். அதுவே தந்தை மைந்தர்களுக் காற்றும் உதவியாகும்.

ஆனல், பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கையில் நாம் மிகவுங்கருத்துடன் செய்யக்கூடியது ஒன்றுண்டு. அது, பிள்ளைகளைக் கடவுளிடத்தன்பும், நல்லொழுக்கமும் உடையவர்களாகச் செய்தலே. பிள்ளைகளுக்கு அவ்விரண்டும் இலவாயின் அவர்கள், "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்," என்னுங் கருத்துடையவர்களாய்த் தீநெறியில் சென்றுவிடுவார்கள். அவர்கள் கல்வியறிவினாற் பெறுதற்குரிய பயனையும் பெறார்கள். ஆதலின், பிள்ளைகளுக்கு மற்றைப் புத்தகங்களோடு கடவு ளன்பையும், நல்லொழுக்கத்தையும் உண்டாக்குதற்குரிய புத்தகங்களையும் பாட புத்-

தகங்களாக அமைத்துக் கற்பித்தல் வேண்டும்.

அங்ஙனம் பிள்ளைகளுக்கு அவ்விரண்டையும் உண்டாக்குதற்கேற்ற புத்தகங்களுள், அவ்வித நல்லியல்பினின் றொழுகிய பெரியோர்களின் சரிதைகளடங்கிய புத்தகங்களே மிகச் சிறந்தனவாகும்.

ம-ா-ா-ஸ்ரீ, கா. தி. அரங்கசாமி நாயுடு அவர்கள் எழுதிய நாயன்மார்கள் சரித்திரம் என்னும் புத்தகம் அவ்வகைப் புத்தகங்களுள் ஒன்றும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இப்புத்தகத்தை நான் படித்தபோது இந்நாயுடு அவர்கள் அக்கருத்துக்கொண்டே இதனை எழுதியிருக்கின்றார் என்பது எனக்கு நன்கு விளங்கியது.

இங்ஙன மாணவர்களுக்கு நன்மை செய்தற்குரிய நோக்கத்துடன் எழுதப்படும் புத்தகங்களே பாடபுத்தகங்களாக அமைத்தற் குரியனவாம்.

இந்நாயுடு அவர்கள் அத்தகைய நோக்கத்துடனே இப்புத்தகத்தை எழுதியிருக்கின்றனராதலின், இது, மாணவர்களுக்குப் பாடபுத்தகமாக அமைத்திற்குரியதாம் என்பதில் யாதுந் தடையில்லை.

இதன் பாஷை நடையும், மாணவர்கள் விரும்பிக் கற்கும்படி செவ்விதினமைந்திருக்கின்றது.

இந்நாயுடு அவர்கள் இங்ஙனமே பல புத்தகங்களை எழுதி மாணவர்களுக்கு நலம்புரிவார் என யான் பெரிது நம்புகின்றேன்.

இங்ஙனம்

சென்னை
30-6-26

கா. ர. கோவிந்தராஜ முதலியார்
பச்சையப்பன் காலேஜ் ஸ்கூல்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்.

# முகவுரை

சேக்கிழார் நாயனார் இயற்றிய திருத்தொண்டர் புராணத்துள், மாணவர்களின் அறிவுக்கு உரங்கொடுக்கக்கூடிய நல்லொழுக்கம், கடவுள் பக்தி, இடைவிடா முயற்சி முதலிய பல அரிய விஷயங்களை மேற்கொண்ட பதினைந்து நாயன்மார்களின் சரித்திரங்களை மட்டும் இப்புத்தகத்தில் எளிய உரை நடையில் எழுதியுள்ளேனாகையால், இஃது எவ்வகையினும் மாணவர்களின் பிற்கால வாழ்க்கைக்குப் பெரிதும் பயன் தரக்கூடியதாகும் என்பது என் கருத்து.

கா. தி. அ.

# பொருளடக்கம்


விஷயம் பக்கம்

1. கண்ணப்ப நாயனார்:—
- காளத்திமலையைக் கண்டது .... 1
- திருவருட்பார்வையின் மனநெகிழ்ச்சி 3
- இறைச்சியை உண்பித்தது .... 6
- சிவகோசரியாரின் துயரம் .... 8
- திண்ணனாரின் அற்புதம் .... 12
- சிவபிரானுடைய காட்சி .... 15

2 சண்டேசுர நாயனார்:—
- பசுநிரை மேய்த்தல் .... 17
- சிவார்ச்சனையின் சிறப்பு .... 20
- எச்சதத்தன் கோபங்கொண்டது .... 22
- எச்சதத்தனுடைய மரணம் .... 24
- விசாரசருமர் அருள்பெற்றது .... 25

3. எறிபத்த நாயனார்:—
- யானையின் தூர்ச்செய்கை .... 27
- கோபத்தால் நேர்ந்த கொலை .... 29
- அரசனுடைய போர்க்கோலம் .... 31
- அளவிறந்த அன்பு .... 33
- திருவருட்பேறு .... 35

4. அமர்நீதி நாயனார்:—
- சிவபெருமான் பிரமசாரியானது .... 37
- அமர்நீதி நாயனாரின் அன்பின் சோதனை 39
- பொன்பொருள்களைத் தராசிலிட்டது 42
- நாயனார் தாமே தராசிலேறியது .... 43

விஷயம் பக்கம்


5. சிறுத்தொண்ட நாயனார்:—

மாற்றரசர்களை வென்றது .... 46
வைரவரின் வரவு .... 48
சீராளன் சிதையுண்டது .... 51
வைரவருடைய அற்புதம் .... 54
சீராளன் உயிர்பெற்று வருதல் .... 59

6. நமிநந்தியடிக ணாயனார்:—

நீரைக்கொண்டு விளக்கேற்றியது .... 61
சிவகணங்களைத் தரிசித்தது .... 63

7. காரைக்காலம்மையார்:—

மாம்பழங்கிடைத்த அதிசயம் .... 66
புனர். விவாகம் .... 70
பேய்வடிவம் பெற்றது .... 72
திருக்கைலாய மடைந்தது .... 73

8. மூர்த்தி நாயனார்:—

பத்தியின் உறுதிப்பாடு .... 76
நாயனார் அரசரானது .... 78

9. மெய்ப்பொரு ணாயனார்:—

வஞ்சகம் .... 83
நாயனாரைக் குத்திக்கொன்றது .... 84
உபகாரம் வீண்போகாது .... 88

10. சேரமான் பெருமாணாயனார்:—

அரசகோலங்கொண்டது .... 90
பத்தியின் சிறப்பு .... 92
பாணபத்திரர் செல்வம்பெற்றது .... 95
மார்பிலே உடைவாளை நாட்டியது .... 97




விஷயம் பக்கம்


11. திருநீலகண்ட நாயனார்:—

ஆணையின் உறுதி .... 100
திருவோடு காணா தொழிந்தது .... 101
நாயனார் பிரமாணத்திற்குடன்படல் .... 104
நாயனாரும் நாயகியாரும் முதுமை நீங்கப்பெற்றது .... 109

12. திருநாளைப்போவார் நாயனார்:—

நந்திதேவரை விலகச்செய்தது .... 111
அக்கினியில் மூழ்கி எழுந்தது .... 113

13. அப்பூதியடிக ணாயனார்:—

திருநாவுக்கரசு நாயனாரைச்சந்தித்தல் 116
பாம்பு கடித்திறந்த குழந்தை .... 119
சிறுவன் உயிர்பெற்றது .... 121

14. இளையான்குடி மாற நாயனார்:—

வறுமையின் கொடுமை .... 124
பரமசிவன் சைவவேடங் கொண்டது 125
சோதிவடிவின் காட்சி .... 127

15. தண்டியடிக ணாயனார்:—

திருக்குளம் கல்லல் .... 130
நாயனார் கண்காணப் பெற்றது .... 132
சமணர்களின் அழிவு .... 134

16. அரும்பத வுரை .... .... 136
17. செய்யுள் விளக்கம் .... .... 142



நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப,.........[பக்கம் 16.]

# நாயன்மார் சரித்திரம்

## கண்ணப்ப நாயனார்

### காளத்திமலையைக் கண்டது

பூவலர் சோலை சூழ்ந்த பொத்தப்பி நாட்டிலே, உடுப்பூர் என்னும் ஊரிலே, வேடர்களுக்கு அரசனும், முற்பிறவியில் நற்றவத்தைச் செய்தவனுமாகிய நாகன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் தத்தை என்னும் மனைவியுடன் இல்லறம் நடாத்தி வரும் நாளில், அவ்விருவரும் மகப்பேறின்மையால் மிகவும் வருத்தமடைந்து, குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகவேளின் சந்நிதானத்தில் சேவற் கோழிகளையும், மயில்களையும் விட்டு, அப் பெருமானை மனமொழி மெய்களால் வணங்கி வந்தனர். அக் கடவுளின் திருவருளால் தத்தையானவள் கருப்பவதியாகி, ஓர் புத்திரனைப் பெற்றாள். அந்த அருந்தவப் புதல்வனை நாகன் தன் கையி லேந்தியபோது, திண்ணெனவா யிருந்தபடியால் அக்குமாரனுக்குத் திண்ணன் என்று பெயரிட்டான். அந்தத் திண்ணனார் அதிக செல்வாக்குடன் வளர்ந்து, உரிய பருவத்திலே வில்வித்தையின் திறத்தைக் கற்கத் தொடங்கி, அதில் அதிக சமார்த்தியமுடையவரானார். நாகன் வயோதிகனானதால், வேட்டையாடும் முயற்சியில் இளைத்தவனாகித் தன்னதிகாரத்தைச் சகலரும் அறிய அதிக மகிழ்ச்சியுடன் திண்ணனாருக்கு ஒப்புவித்தான்.

அரசுரிமையைப் பெற்ற திண்ணனார், வேட்டைக் கோலங்கொண்டு தம் இனத்தார்களுடன் வனத்திற்குப் போய் வேட்டையாடினார். அப்பொழுது, ஒரு பன்றியானது வேடர் கட்டிய வலைகள் அறும்படி எழுந்து, மிகுந்த வேகமாய் ஓடியது. அதைக் கண்ட திண்ணனார், அந்த ஏனத்தைக் கொல்ல நினைந்து, அதிக விரைவாய் அதைத் தொடர்ந்து சென்றார். நாணன், காடன் என்ற இரண்டு மறவர் மாத்திரம் திண்ணனாரைப் பிரியாது பின் சென்றனர். அந்தக் கேழல் நெடுந்தூரம் ஓடி, இளைப்பினால் மலைச்சாரலையடுத்துள்ள சோலையையடைந்து, ஆங்கோர் மரத்தின் நிழலிலே நின்றது. திண்ணனார் விரைவில் அதனையணுகி, உடைவாளை யுருவி, அந்த ஏனம் இரு துண்டாகும்படி குத்தினார்.

பிறகு, நாணனும் காடனும், இறந்துபோன அப்பன்றியைக் கண்டு, திண்ணனாரைப் புகழ்ந்து வணங்கி, "வேடர் பிரானே! நாம் பல காதங்கள் கடந்து, நடந்து வந்தபடியால் அதிகமாய் இளைத்தோம். பசியும் நம்மை வருத்துகின்றது. நாம் இந்த இருளியின் இறைச்சியை நெருப்பிலே காய்ச்சித் தின்று, தண்ணீர் குடித்துப் பிறகு வேட்டைக் காட்டுக்கு மெதுவாய்ப் போகலாம்" என்றார்கள். அதற்குத் திண்ணனார், "இவ்வனத்தில் தண்ணீர் எங்கே கிடைக்கும்?" என, நாணன், "அந்தத் தேக்க மரத்துக்கு அப்புறம் சென்றால், மலைப்பக்கத்தில் பொன்முகலி என்னும் நதியோன்றோடுகின்றது." என்றான்.

அதைக் கேட்டுத் திண்ணனார், "அப்படியானால் இந்த வராகத்தினுடலை எடுத்துக்கொண்டு வாருங்கள்.



நாம் அங்கே போகலாம்" என்று சொல்லி, அப்பால் நடந்து அரைக்காதவழி தூரஞ் சென்றதும், அங்கிருக்கிற திருக்காளத்தி மலையைக் கண்டு, நாணனை நோக்கி, "நாம் அதோ தெரியும் மலைக்குப் போகலாம்" என்று சொல்ல, நாணன், "அந்த மலையிலே குடுமித் தேவர் எழுந்தருளி யிருக்கின்றனர். நாம் அங்குச் செல்வோமாயின் அவரை வணங்கலாம்" என்றான்.

திண்ணனார் அம்மலையைச் சமீபித்துச் செல்லச் செல்ல, அவர்மேல் ஏற்பட்ட பெரியதோர் பாரம் குறைந்து வருவதைப் போன்ற உணர்ச்சியைக் கொண்டு அதி விரைவாகச் சென்றார். அப்படிச் சென்றவர், பொன்முகலி யாற்றை அடைந்து, அதன் கரையிலிருக்கும் மர நிழலில் பன்றியின் உடலை இடுவித்துக் காடனை நோக்கி, "தீக்கடைகோல் செய்து நெருப்பை உண்டாக்கு; இதற்குள் நாங்கள் இந்த மலைமே லேறி, அங்கிருக்கும் கடவுளைத் தரிசனம் செய்துகொண்டு வருகிறோம்." என்று சொல்லி, நாணனோடும் அந்தப் பொன்முகலி நதியைக் கடந்து, மலைச்சாரலையடைந்து, நாணன் முன்னே ஏற அவர், பின்னால் அளவுகடந்த மன மகிழ்ச்சியுடன் மலைமேலேறிச் சிவபிரான் அங்கு எழுந்தருளி யிருத்தலைக் கண்டார். கண்டமாத்திரத்தில் அவர், சர்வ பூரணரான அந்தப் பரமசிவத்தின் திருவருட் பார்வையைப் பெற்றார்.

### திருவருட் பார்வையின் மன நெகிழ்ச்சி

இரும்பானது தரிசன வேதியினாலே ரூபம் நீங்கிப் பொன்மய மானாற்போலத், திண்ணனாருக்கு முன்னுள்ள குணங்கள் மாறிப் பரமசிவனிடத்தில் வைத்த

அன்புருவமானார். நெடுங்காலம் பிரிந்திருந்த தன் அருமைக் குழவியைக் கண்ட மாதாவைப் போலத் திண்ணனார் விரைந்து சென்று, அக்கடவுளைத் தழுவிக் கொண்டு, மோந்து முத்த மிட்டார். நெடுநேரம் வரையிலும் அவர் பெருமூச் செறிந்து, மெய் மறந்து, இரண்டு கண்களினின்றும் நீர் வடிய வெயிலிடைப் பட்ட மெழுகுபோல மனங்கசிந் துருக, "ஆ! இப்பெருமானுடைய தரிசனம் எனக்குக் கிடைத்தது என்ன ஆர்சரியம்" என்று பலமுறையுஞ் சொல்லி ஆனந்தங் கொண்டார். "அந்தோ! சிங்கம், புலி, யானை, கரடி முதலிய துட்ட மிருகங்கள் சஞ்சரிக்கின்ற இக் காட்டிலே, நீர் தனியாய் யாதொரு துணையுமின்றி இருப்பது என்?" என்று சொல்லித் துக்கித்துத் தம்முடைய கையிலிருந்த வில் கீழே விழுந்ததையும் அறியாதவராகிப் பரவசமடைந்தார்; பின் ஒருவாறு தெளிந்து, "இப்பரமனுடைய முடியிலே நீரைப் பெய்து, பச்சிலையையும் மலரையும் இட்டவர் யாரோ?" என்றார்.

இதைச் சமீபத்தினின்றும் கேட்டுக்கொண்டிருந்த நாணன், "கானவர் வேந்தே! நான் ஒருகாலத்தில் உமது தந்தையுடன் வேட்டையாடிக்கொண்டு இம் மலையினிடம் வந்தபொழுது, ஒரு பூசுரன் இக்கடவுளின் சிரசில் நீரை வார்த்து, இலையையும் பூவையும் சூட்டி, உணவை யூட்டி, சில வார்த்தைகள் பேசினதையும் நான் பார்த்திருக்கிறேன். இன்றைக்கும் அப்பிராமணன் இப்படிச் செய்தான்போலும்" என்றான்.

அது கேட்டுத் திண்ணனார் பெரு மகிழ்ச்சி கொண்டு, "அவ்விதம் செய்தலே அப் பெருமானுக்குப் பிரீதிபோலும்" என்று நிச்சயித்துக்கொண்



டார். பின்பு, "அந்தோ! இவர் உண்பதற்கு இறைச்சி கொண்டுவந்து கொடுப்பார் யாருமில்லை யல்லவா? இவர் இவ்விடத்தில் தனியாயிருப்பதால், இறைச்சி கொண்டு வர நான் எவ்விதம் போவது? இவரைப் பிரியவேண்டி யல்லவோ ஏற்படுகின்றது? இதற்கென் செய்வது? எப்படியும் இவருக்கு இறைச்சி கொண்டு வந்தே தீரவேண்டும்" என்று சொல்லிய வண்ணம் அவ்விடத்தினின்றும் நீங்கிச் சிறிது தூரம் போவார். கன்றைவிட்டுப் பிரிகின்ற தலையீற்றுப் பசுவைப்போல மறுபடியும் திரும்பி வந்து அப்பெருமானைத் தழுவிக் கொள்ளுவார். மீளச் சிறிதுதூரம் போய் மிதமற்ற ஆசையோடு கடவுளைத் திரும்பிப் பார்த்து நிற்பார். "எம்பிரானே! இதோ ஒரு நொடியில் நீர் உண்பதற்கு மிருதுவாகிய நல்ல இறைச்சியை நானே பரிசோதித்துக் கொண்டு வருகிறேன். ஆனால், நீர் யாதொரு துணையுமின்றி இவ்விடத்தில் தனியா யிருக்கிறபடியால், நான் உம்மைப் பிரிந்து போக மனம் துணியவில்லை. என்ன செய்வேன்? உமக்குப் பசி மிகுந்திருப்பதால் நான் கட்டாயம் உம்மைப் பிரியவேண்டியிருக்கிறது. ஐயோ! இந்தச் சங்கடத்திற் கென்செய்வேன்!" என்று சொல்லிக்கொண்டு, கண்ணீர் இடைவிடாது பொழிய ஒருவாறு மனந் துணிந்து, அக்கோயிலைக் கடந்து, மலையினின்றும் இறங்கி, நாணன் பின்னேவர பொன்முகலி யாற்றைக் கடந்து, காடன் இருக்கும் சோலையினிடத்திற்கு வந்தார்.

காடன் இவரைக் கண்டதும் எதிர் சென்று வணங்கி, "குன்றவ ரரசே! தங்கள் கட்டளையின்படி அனல் சித்தப்படுத்தி வைத்திருக்கிறேன். பன்றி

யின் அவயவங்களெல்லாம் உம்முடைய அடையாளப் படியே இருக்கின்றன. நாம் திரும்பி வீடுபோய்ச் சேருவதற்குப் பொழுதில்லை. நீர் இன்னமும் தாமதித்திருப்பானேன்?" என, நாணன் அவனைப் பார்த்து, "இவர் மலையின் மேலுள்ள குடுமித் தேவரைக் கண்டு, அவரைத் தழுவிக்கொண்டு, மரப் பொந்தினைப் பற்றி விடாத வல்லுடும் பென்ன அவரை நீங்க மாட்டாதவராய் நின்று தனித்தார். இப்போது, அவர் அக்கடவுள் உண்பதற்கு இறைச்சி கொண்டு போக வந்தனர்; வேடர்குலத் தலைமையை அறவே விட்டார்; அந்தக் கடவுளின் வசமாயினர். இனி நாம் செய்வது யாது?" என்றான்.

## இறைச்சியை உண்பித்தது

காடன் அது கேட்டுத் திண்ணனாரைப் பார்த்து, "கானவர் பெருமானே! நீர் செய்தது யாது? உமக்கு என்ன பைத்தியம் கொண்டுவிட்டது?" என்று வினவ, திண்ணனார் அவன் கேள்வியைச் செவி கொள்ளாமல், பன்றியை நெருப்பிலே வதக்கி, அதனுடைய இனிய தசைகளை அம்பினாலே வெவ்வேறாகக் கிழித்தார். பிறகு, அத் தசைகளை ஒவ்வொன்றாக அம்பிலே கோத்து, அனலிலே காய்ச்சிப் பதமாக வெந்தவுடன் அவற்றின் சுவையை நன்கு அறியும்வண்ணம் ஒவ்வொன்றாகத் தம்முடைய வாயிலே இட்டுப் பற்களினாலே மெல்ல மெல்லப் பலமுறை அதுக்கிப் பார்த்து, மிக இனியனவாகிய இறைச்சிகளெல்லாவற்றையும் தேக்கிலையினாலே தைக்கப்பட்ட கல்லையிலே வைத்து, ருசியற்ற மற்ற இறைச்சிகளை எல்லாம் புறத்திலே உமிழ்ந்தார்.



இந்த விபரீதத்தைக் கண்ட நாணன், காடன் இருவரும், "இவர் பைத்தியங் கொண்டார்போலும். பெறுதற்கரிய இந்த வனத்தின் இறைச்சியைக் காய்ச்சிப் பற்களினால் அதுக்கி, உண்ணாமல் வீணாக உமிழுகின்றார். சிலவற்றைப் புறத்திலே எறிந்துவிடுகின்றார். அவர், மிகப் பசியுடையவராய் இளைத்திருந்தும் அதனை உண்கின்றாரில்லை. நமக்கும் தருவதைக் காணோம். இவர் உண்மையாய்க் கடவுள் பைத்தியங் கொண்டுவிட்டனர். நாம் இதைத் தீர்க்கத் தக்க உபாயம் யாதும் கண்டிலோம். இவர் தந்தையை இங்கழைத்து வருவதைத் தவிர நாம் செய்யத்தக்கது யாதொன்று?" என்று பேசிக் கொண்டவர்களாய் அவ்விடத்தைவிட்டகன்று, வேட்டைக் காட்டிலிருந்த மற்ற வனசரர்களையும் கூட்டிக்கொண்டு சென்றார்கள்.

இவ்விருவர் சொன்னதையும் அறியாதவராகிய திண்ணனார், கல்லையிலே வைத்த இறைச்சியை எடுத்துக்கொண்டு, பகவானுக்குத் திருமஞ்சனம் செய்ய வேண்டி ஆற்றின் நீரை வாயினால் முகந்து, சில புட்பங்களைக் கொய்து தமது தலை மயிரிலே செருகி, ஒரு கரத்தில் வில்லையும் அம்பையும், மற்றொரு கரத்தில் இறைச்சிக் கல்லையையும் எடுத்துக்கொண்டு செல்வாராயினர். "ஐயோ! நான் தனியாய் விட்டுவந்த எம் பெருமான், பசியினால் இளைத்தாரோ!" என்று திண்ணனார் நினைந்து, தன் குஞ்சுக்கு இரையைக் கொண்டு தாழா தோடுகின்ற பறவைபோல அதிவிரைவாய் ஓடியவண்ணம் காளத்தி நாதனை யடைந்தார். உடனே பகவானுடைய திருமுடிமேல் அலங்கரித்திருந்த பூக்களை, அவர் தம்முடைய காற்செருப்பாலே

மாற்றி, தம்முடைய வாயில் கொண்டுவந்த நீரைத் தம்முடைய மனத்தில் உள்ள அன்பை உமிழ்வாரைப் போல அந்தக் கடவுளின் திருமுடிமேல் உமிழ்ந்து திருமஞ்சன மாட்டி, தம்முடைய தலையி லிருந்த பூக்களை எடுத்துத் திருமுடிமேல் சாத்தினார். பிறகு, தேக்கிலைக் கல்லையில் கொண்டுவந்த கேழலின் இறைச்சியைத் திருமுன்னே வைத்து, "எம்பிறைவனே! மிகவும் கொழுமையாகிய இறைச்சியைத் தெரிந் தெடுத்து, அம்பிலே கோத்து, நெருப்பிலே பதமாகக் காய்ச்சிப் பற்களினால் அதுக்கி, நாவினால் சுவை பார்த்துப் படைத்தேன். இவ் விறைச்சி மிகவும் நன்று பிருப்பதால் அமுது செய்தருளும்" என்று சொல்லி உண்பித்தார்.

## சிவகோசரியாரின் துயரம்

பின்பு, ஆதித்தன் மறைந்தான். எங்கும் இருள் சூழ்ந்து கொண்டது. அப்போது திண்ணனார், அவ் விரவில் காட்டு மிருகங்கள் சிவபிரானைத் துன்பஞ் செய்தல் கூடு மென்று பயந்து, அம்பு தொடுக்கப் பட்ட வில்லைக் கையி லேந்தியவண்ணம், மறந்தும் இமை கொட்டாமல் விழித்துக்கொண்டு சுவாமியி னருகில் நின்றார். இவ்விதம் அவ் விரவைக் கழித்து, வைகறையில் பெருமானுக்கு இறைச்சி கொண்டு வருவதற்காக வனத்திற்கு வேட்டையாடச் சென்றார்.

இப்படி யிருக்க, அருள், அடக்கம், தவம், சிவ பக்தி முதலிய அருமைக் குணங்கள் வாய்ந்தவரும், தினந்தோறும் திருக்காளத்தி யப்பரைச் சைவாகம விதிப்படி அருச்சிப்பவரு மாகிய சிவகோசரியார், அன்று காலையில் பூசைக் குகந்த புட்பம், திருமஞ்சனம் முதலியவைகளுடன் திருச்சந்நிதிக்குப் போனார். அங்கே, வெந்த இறைச்சியும், எலும்பும், கிடக்கக் கண்டு மெய் நடுங்கி, அப்புறம் ஓடி, "தேவர் பிரானே! தேவரீருடைய சந்நிதானத்தில் இவ்வித அநுசிதத்தைச் செய்தவர் யாரோ? பழிக்கஞ்சாத துஷ்டராகிய வேட்டுவப் புலையர்களே இப்படிச் செய்தனர் போலும். தேவரீருடைய திருவுளமும் அதற்கிசைந் திருந்தவா றென்னே!" என்று சொல்லிப் பதை பதைத்துக் கீழே விழுந்து புரண்டார். பின்பு சுவாமிக்கு அருச்சனை யாகவேண்டிய காலம் கடந்து போவதைக் கண்டு, அங்கே கிடக்கும் இறைச்சியையும், எலும்பையும், கல்லையையும் திருவலகினால் மாற்றி, சம்புரோக்ஷணஞ் செய்து, மீளப் பொன்முகலியாற்றில் முழுகி வந்து, வேத மந்திரங்களினால் சந்நிதானத்தைச் சுத்தி செய்து, சுவாமிக்குத் திருமஞ்சனமாட்டி, பத்திர புஷ்பங்களால் அருச்சித்தார். பிறகு, அவ் வந்தண சிரேஷ்டர், பகவான் முன் நின்று, வேத வாக்கியங்களினால் அவரைப் பாடி ஆடி ஆனந்தக் கண்ணீர் சொரிய, அக்கினியில் பட்ட மெழுகு போல மனங்கசிந் திளகி நமஸ்கரித்து, அவ்விடத்தினின்றும் நீங்கினார்.

அதன் பின்னர், மலைச்சாரலிலே வேட்டையாடுதற்குச் சென்ற திண்ணனார், பன்றி, மான், கலை, மரை, கடமை என்னும் மிருகங்களைக் கொன்று, அவற்றினிறைச்சியை முன்போலப் பதப்படுத்தினர். பிறகு, வாயில் திருமஞ்சனமும், தலையில் புஷ்பமுங் கொண்டு, சுவாமியின் சந்நிதானத்தை யடைந்து, முன்போலப் பூசை செய்து, இறைச்சியைத் திருமுன்னே வைத்து,

"எம்பெருமானே! இந்த இறைச்சி மிகவும் மேன்மையானது. இவை ஐந்து மிருகங்களின் இறைச்சி; இவற்றையும் நான் சுவைத்துப் பார்த்துத் தேனுங் கலந்திருக்கின்றேன். நேற்று நீர் அருந்தியதைக் காட்டிலும் இவை மிகவும் சுவைக்கும்" என்று சொல்லி உண்பித்து, அவரைப் பிரியாமல் அவரருகிலேயே நின்றுகொண்டிருந்தனர்.

முதனாட் போன நாணனும் காடனும், திண்ணனாருடைய செய்கைகளை நாகனுக்குச் சொல்ல, அவன் ஊணும் உறக்கமுமின்றி வருந்தி, திண்ணனாரிடம் வந்து, அவரைப் பற்பல திறத்தினாலே வசியப்படுத்த முயன்றும் பயனடையாமையால், சிந்தை நொந்து தன்னிருப்பிடமே திரும்பினான்.

சிவபிரானோடு ஒன்றுபட்டு, அவ்விறைவன் பணியில் வழுவாது நிற்கும் திண்ணனார், பகலில் மிருகங்களைக் கொன்று, அவற்றினிறைச்சியைக் காளத்தியப்பனுக்கு ஊட்டியும், இரவில் நித்திரையின்றி அவருக்குக் காவலாக இருந்தும் வந்தார். சிவகோசரியாரோ, பிரதி தினமும் வந்து, இறைச்சி முதலியவற்றைக் கண்டு வருந்தி, அவற்றை விலக்கி, சைவாகம விதிப்படி பரமனைப் பூசித்து வந்ததுமன்றி, இவ்வநுசிதம் நிகழாமல் கிருபை செய்யவேண்டுமென்றும் பிரார்த்தித்து வந்தார்.

இப்படியிருக்க, ஐந்தாம் நாள் இரவில் காளத்திநாதர், சிவகோசரியாருடைய மனத்துயரை யகற்றும் பொருட்டு, அவருடைய சொப்பனத்தில் தோன்றி, "அன்பனே! என்னை அருச்சித்து, இறைச்சியை ஊட்டுபவன் வேடுவன் என்று நீ நினைக்காதே. அவன்



அன்புருவம் பெற்றவன். என்னை யறியும் அறிவொன்றையே உடையவன். அவன் செய்கைகளெல்லாம் எனக் கிதமானவைகளே. என்னுடைய முடியின்மேல் உன்னாலே சாத்தப்பட்ட மலர்களை நீக்கும்படி அவன் வைக்கின்ற செருப்பின் பிரயோகம், என் குமாரனாகிய சுப்பிரமணியனுடைய பாத ஸ்பரிசத்தைப் பார்க்கிலும் எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தருகின்றது. அவன் வாயினின்றும் என்மேல் உமிழுகின்ற நீர், அன்புமயமாகிய அவன் சரீரத்தினின்றும் ஒழுகுகின்றபடியால், கங்கை, யமுனை முதலாகிய புண்ணிய தீர்த்தங்களைப் பார்க்கிலும் மிகவும் பரிசுத்தமானது. அவன் தலை மயிரினின்றும் எனக்குச் சாத்துகின்ற புஷ்பங்கள், அவனுடைய மெய்யன்பினின்றும் விரிந்து விழுதலால், பிரமாதி தேவர்கள் எனக்குச் சமர்ப்பிக்கும் புஷ்பங்களினும் மிகவும் சிரேஷ்டமானவை. அவன் எனக்குப் படைக்கும் இறைச்சி, அன்பினால் உருகிய மனத்தோடும் அவன் பதப்படுத்திச் சுவை பார்த்து எனக்கு ஊட்டுவிப்பதால், வேத விதிப்படி யாகஞ் செய்து எனக்குத் தரும் அவியிலும் அவ்விறைச்சி எனக்கு அதிக மதுரமாயிருக்கின்றது. அவன் என்னுடைய சந்நிதானத்தில் அன்பினோடு சொல்லும் சொற்களோ, மகா முனிவர்கள் மகிழ்ந்து கூறும் வேத பாராயணத்தைக் காட்டிலும் எனக்கு இனியனவாயிருக்கின்றன. நீ நாளைய தினம் எனக்குப் பின்னால், ஒளித்திருந்து பார்ப்பாயானால், அவனுடைய செய்கைகளை உனக்குக் காட்டுவேன்" என்று சொல்லி மறைந்தருளினார்.

சிவகோசரியார் சொப்பன வத்தையை நீங்கிச்

சாக்கிராவத்தையை யடைந்து, பரமசிவன் அருளிய திருவாக்கை நினைந்து, "மூடத்தன்மை பொருந்திய இழிவான கானவர் வமிசத்தில் பிறந்த அவருக்கு, அருந்தவ முனிவராலும், தேவர்களாலும் அடையக் கூடாத அவ்வளவு பேரன்பு உண்டானது அருமையினும் அருமையே! அப்பேரன்பர் செய்த செய்கைகளை, நாயிலும் கடையனாகிய பாவியேன் அநுசிதம் என்று நினைத்தது என்ன கொடுமை!" என்று தம்மைத் தாமே நிந்தித்துக்கொண்டார். பிறகு, அந்த மறை வல்லவர், வைகறையிலே போய், பொன்முகலியாற்றிலே மூழ்கி, மலைமேலேறி, பெருமானை விதிப்படி யருச்சித்து, அவருக்குப் பின்னால் ஒளித்துக் கொண்டிருந்தார்.

## திண்ணனாரின் அற்புதம்

திண்ணனார் வழக்கம் போல் வனத்தில் வேட்டையாடி, இறைச்சியும், திருமஞ்சனமும், புஷ்பங்களும் முன்போல அமைத்துக்கொண்டு விரைவில் திரும்பினார். வரும் வழியில் அவர், பல துர்ச்சகுனங்களைக் கண்டு, "உதிரங் காட்டும் இச்சகுனங்களால் யாது சம்பவிக்குமோ? அந்தோ! என் கண்ணின் மணிபோன்ற காளத்தி யப்பனுக்கு என்ன அபாயம் சம்பவித்ததோ! யாதுமறியேனே" என்று உள்ளங் கலங்கி அதிவிரைவாக நடந்தார்.

அடியார்களுடைய உள்ளத்தில் உறையும் அருட்கடலாகிய பரமசிவன், திண்ணனாருடைய அன்பு முழுதையும் சிவகோசரியாருக்குக் காட்டும் பொருட்டுத் திருவுளங்கொண்டு, தம்முடைய வலக்கண்ணினின்றும் குருதி சொரியப் பண்ணினார். திண்ணனார்



இதைத் தூரத்திலே கண்டு விரைந்தோடி வந்தார்.

"வந்தவர் குருதி கண்டார் மயங்கினார் வாயி னன்னீர்
சிந்திடக் கையி லூனுஞ் சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமங் குஞ்சியின் றலைந்து சோரப் [தார்."
பைந்தழை யலங்கன் மார்பர் நிலத்திடைப் பதைத்து வீழ்ந்

திண்ணனார் வந்தவுடனே, பெருமானின் வலக் கண்ணில் இரத்தஞ் சொரிதலைக் கண்டார். காண்டலும் வாயி லுள்ள திருமஞ்சனம் ஒழுக, கையி லிருந்த இறைச்சி சிதற, அம்பும் வில்லும் வீழ, தலை மயிரில் செருகி யிருந்த புஷ்பங்கள் அலைந்து சோர மெய் மறந்து கீழே விழுந்தார். மறுபடியும் எழுந்து, இரத்தத்தைப் பல முறை கையினாலே துடைத்தார். அது நில்லாமை கண்டு பெரு மூச் செறிந்து, இன்னது செய்வ தென்றும் தோன்றாது திரும்ப விழுந்தார். பின் ஒருவாறு தெளிந்து எழுந்து, "இப்படிச் செய்தவர் யாவர்?" என்று நாற்புறமும் சுற்றிப் பார்த்தார். பிறகு, அவர் வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டு, "எம் மிறைவனுக்கு இந்தத் தீங்கு சம்பவித்தது எனக்கு விரோதிகளாகிய மறவர்களாலோ? அல்லது இக்காட்டில் சஞ்சரிக்கின்ற துஷ்ட மிருகங்களாலோ? யாது மறியக் கூடவில்லையே" என்று சொல்லி, அம் மலைச்சரிவில் நெடுந்தூர மளவும் ஓடித் தேடினார். வேடர்களையேனும் விலங்குகளையேனும் அவர் காணாதவராகி மீண்டும் வந்து, அதிக துயரத்தினால் பெருமானைத் தழுவிக் கொண்டு கண்ணீர் விட்டு அழுதார்.

"என் உயிரினும் மேன்மையானவரும், அன்பினால் அடைந்தவரைப் பிரிய மாட்டாதவருமான இம்

முழுமுதற் கடவுளுக்கு இத் துன்பம் சம்பவித்தது யாக்காரணத்தாலோ? இதைத் தீர்ப்பதற்கு மருந்தொன்றையும் அறியேனே. இதற்கென்ன செய்வேன்? இந்த உதிரத்தை நிற்கச் செய்யும் உபாயம் யாது? வேடர்கள் வேட்டையாடுவதில் உண்டான காயங்களை ஆற்றுவதற்கு உபயோகிக்கும் பச்சிலை மருந்துகளைத் தேடிக் கொணர்வேன்" என்று திண்ணனார் சொல்லிக்கொண்டே மலையடிவாரத்திற்கு அதிக விரைவாய் ஓடினார்.

தன் இனத்தைப் பிரிந்து வந்த மான் போலத் திண்ணனார், சுவாமியைப் பிரிந்து வந்ததால் வெருட்கொண்டு, வனமெங்கணும் திரிந்தலைந்து, பலவகைப் பச்சிலைகளைப் பிடுங்கிக்கொண்டு விரைவாக வந்து, அப் பச்சிலைகளின் சாற்றைப் பெருமான் கண்ணில் வார்த்தார். அப்போதும் அக்கண்ணில் இரத்தம் நில்லாமையைக் கண்டு, மெய் சோர்ந்து "இனி யாது செய்வேன்" என்று ஆலோசிக்கலாயினர்.

ஊனுக்கு ஊனிடல்வேண்டும் என்னும் பழமொழி யொன்று அவர் ஞாபகத்திற்கு வந்தது. உடனே அவருக்கு ஆனந்தம் பொங்கியது. "இனி என்னுடைய கண்ணை அம்பினாலே இடந்து அப்பினால், எம்பெருமான் கண்ணினின்றொழுகும் இரத்தம் தடைபடும்" என்று அவர் எண்ணினவராய் மிகுந்த மனக்களிப்புடன் பெருமான் முன் நின்று, அம்பினால் தம்முடைய கண்ணைத் தோண்டிச் சுவாமியினுடைய கண்ணிலே அப்பினார். உடனே இரத்தம் வடிதல் தடைப்பட்டதைக் கண்டு, திண்ணனார் அடங்குதற்கரிய சந்தோஷ சாகரத்தி லாழ்ந்து குதித்துப் பாய்ந்தார்;



தம்முடைய பருத்த தோள்களைத் தட்டி ஆரவாரித்தார்; கைகளைக் கொட்டிக் கூத்தாடினார். அதிகமான ஆனந்தத்தினாலே உன்மத்தரைப் போலாயினார்.

### சிவபிரானுடைய காட்சி

இவ்வித சந்தோஷ சாகரத்தில் திண்ணனார் மூழ்கி யிருக்கையில், இன்னும் இவருடைய பேரன்பைச் சிவகோசரியாருக்குக் காட்ட வேண்டுமென்று திருவுளங் கொண்ட காளத்தி நாதர், தம்முடைய இடக் கண்ணிலும் குருதி சோரச் செய்தார். அது திண்ணனாருடைய அளவு கடந்த சந்தோஷத்தை ஒரு நொடியில் கவளீகரித்தது. அக்கினி குண்டத்தில் விழுந்து நெடுங்காலம் துன்புற்ற ஒருவன், அதனை நீங்கிச் சுவர்க்கத்தை யடைந்து, பின்னும் அவ்வக்கினி குண்டத்திலே வீழ்ந்தவனைப்போல, திண்ணனார் அதிக துயரத்தை யடைந்தார். சற்று நேரத்திற் கெல்லாம் அவருக் கோர் நினைவு தோன்றி, "ஓ! இதற்கு நான் ஏன் அஞ்ச வேண்டும்? இதற்கு மருந்தை யறிந்திருக்கிறேனே! இன்னும் ஒரு கண் எனக் கிருக்கிறதல்லவா? அதைத் தோண்டி அப்பி, இக் குருதியைத் தடை செய்வேன்" என்று துணிந்தார்.

பின்பு திண்ணனார், பெருமானுடைய கண் இன்னவிடத்தி லிருக்கிறதென்று அறியும் பொருட்டுத் தம்முடைய ஒரு செருப்புக் காலை அவர் கண்ணினருகிலே ஊன்றி, அதிக விருப்புடன் தம்முடைய கண்ணைத் தோண்டும்படி அம்பை வைத்தார்.

அப்போது, தயாநிதியும் பக்த வத்சலனுமான பரமசிவன், திண்ணனாரின் செய்கையைச் சகிக்கலாற்றாதவராகி, வேதாகமங்கள் தோன்றிய தம்முடைய

அருமைத் திருவாயைத் திறந்து, "நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப, என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப" என்றருளிச்செய்து, கண்ணைத் தோண்டவிருக்கும் அவருடைய கையைப் பிடித்துக்கொண்டார். பிரமாதி தேவர்கள் இதனைக் கண்டு, வேத கோஷத்தோடும் சிவபிரான் மீது கற்பகப் பூமாரி சொரிந்தனர். சிவகோசரியார் இவ்வாச்சரியமனைத்தையுங் கண்டு பகவானை ஸ்தோத்திரஞ் செய்தார். அன்று முதல் பகவான் திருவாய் மலர்ந்தருளியபடியே திண்ணனுக்குக் கண்ணப்பர் என்ற பெயரே வழங்குவதாயிற்று.

"அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

என்றபடி, அன்பின் மேலீட்டால் ஆறு நாட்களில் அப்புனிதராகிய கண்ணப்பர், அன்பே உருவமாக மாறிச் சிவபிரானுடைய அருளுக்குப் பாத்திரராகி, அவருடன் பிரியா நேசம் பெற்று, அவருடைய வலப்பக்கத்திலிருக்கும் பாக்கியத்தைப் பெற்றார்.

## சண்டேசுர நாயனார்

### பசுநிரை மேய்த்தல்

காவேரி நதியின் நீர்வளம் பொருந்திய சோழவள நாட்டில், திருச்சேய்ஞலூர் என்னுமொரு நகரமுண்டு. அது, சிறப்புப் பொருந்திய மண்ணியாற்றின் தென் கரையில் இருந்தது. ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள், தேவர்களின் துன்பம் நீங்கக் கிரவுஞ்ச கிரியையும், தாருகாசுரனையும் கொன்ற பாவம் நீங்கச் சிவபெருமானைப் பூசித்த இடமாதலால், அந்நகரத்திற்குச் சேய்ஞலூர் என்னும் பெயர் விளங்கியது.

அந்நகரில், அன்புடையவர்களும், வைதிக நெறியையுடையவர்களும், வேதங்களை யோதி உணர்ந்தவர்களும், சிறந்த ஒழுக்கத்தை உடையவர்களுமாகிய மறையவர்கள் வசித்து வந்தார்கள். அவ்வேதியருள், காசிப கோத்திரத்திலே எச்சதத்தன் என்பவன் ஒருவனிருந்தான். அவன், கிடைத்தற்கரிய மாணிக்கத்தையும் பிறருக்குக் கொடுத்துப் பின் விஷத்தையுங் கொடுக்கும் பாம்புபோல, நல்வினை தீவினை யென்னும் இரண்டினையும் செய்யவல்ல ஒரே வடிவு கொண்டவன். அவனுக்குப் பவித்திரை என்னும் பெயர் வாய்ந்த மனைவி இருந்தனள்.

மற்றவ மறையோன் திருமனைவி
வாய்ந்த மரபின் வந்துதித்தாள்
சுற்றம் விரும்பு மில்வாழ்க்கைத்
தொழிலா லுலகிற் றுணைப்புதல்வற்
பெற்று விளங்குந் தவஞ்செய்தாள்
பெரும்பே றெல்லைப் பயன்பெறுவாள்
பற்றை யெறியும் பற்றுவரச்
சார்பா யுள்ள பவித்திரையாள்

அவள் நல்ல மரபில் பிறந்தவள். கற்றறிந்தார் விரும்பத்தக்க இல்வாழ்க்கையைக் குறைவின்றி நடத்துகின்ற நற்செய்கையை யுடையவள். உலகத்தில் தனக்குத் துணையான நற்புத்திரரைப் பெறுதற்குரிய சிறந்த தவத்தைச் செய்தவள். பெறவேண்டிய வீடுபேற்றின் முடிவாகிய பயனைப் பெறத் தக்கவள். உலகப் பற்றை நீக்குதற்குக் கருவியாகிய சிவநேசம் வருதற்குச் சார்பான குணத்தினை யுடையவள்.

அம்மாதினிடமாகச் சிறந்த வேதவொழுக்கங் குறைவின்றி விளங்கவும், பிராமணர்களுடைய குலம் விருத்தியடையவும், சைவ சமயம் வளர்ந்தோங்கவும், பெரியோர்களின் தபோமகிமை நிறைந்து விளங்கவும், விசாரசருமர் என்னும் புத்திரர் திருவவதாரஞ் செய்தார்.

அவ் விசாரசருமர் ஐந்து வயதிலேயே வேதங்களையும், வேதாங்கங்களையும், சைவ ஆகமங்களையும் கற்க ஆரம்பித்தார். பூர்வ ஜன்மத்து அறிவுத் தொடர்ச்சியினால், கற்பிப்பார் இன்றித் தாமே அவற்றை அறியும் அறிவு அவருக்கு உண்டாயிற்று. தந்தை தாயர்கள் அவருக்கு ஏழு வயதிலேயே உபநயனச் சடங்கு செய்தார்கள். தகுந்த ஆசாரியர்களைக் கொண்டு அவருக்கு வேதம் ஓதுவிக்கின்ற முறைமையைக் கற்பிக்கச் செய்தனர். ஆசாரியர்கள், வேதங்களையும், பிற கலைகளையும் ஓதுவித்தற்கு முன்னமே, அவ்விசாரசருமருக்குத் தாமே அறிந்துகொள்ளும்படி அமைந்திருக்கின்ற புத்தியின் திறத்தைக் கண்டு ஆச்சரியத்தை யடைந்தார்கள்.

அவ்விள வயதிலேயே, விசாரசருமர் சான்



றோர்க்கு உரிய குணத்தைப் பெற்றார். வேதாகம முதலிய நூல்கள் எல்லாவற்றாலும் துணியப்படும் மெய்ப்பொருள் பரமசிவனே என்று சந்தேகமறத் துணிந்து கொண்டார். அதனால் அவருக்குச் சிவபெருமானிடத்தே மெய்யன்பு நாளுக்குநாள் வளர்வதாயிற்று.

ஒரு நாள், அவர் தம்மோடு வேதமோதுகின்ற பிராமணச் சிறுவர்களுடனே அவ்வூரி லுள்ளவர்களுடைய பசு மந்தையோடு கூடப் போனார். அப்பொழுது, ஒரு கன்றுபோட்ட பசுவானது, மேய்ப்பானாகிய இடையனைக் கொம்பால் முட்டப் போயிற்று. அவ்விடையன் சிறிதும் பாவத்துக்கு அஞ்சாமல், அப்பசுவைக் கோலினால் அடித்தான். விசாரசருமர் அது கண்டு மனம் பதைத்து, அவன் சமீபத்திற் சென்று, அவன்மேல் கோபங்கொண்டார்; பின்னும் அடியாதபடி அவனைத் தடுத்து நின்றார். பசுக்கள் சிவலோகத்திலிருந்து பூமியில் வந்தவை யென்றும், அவைகளின் உறுப்புக்களிலே தேவர்களும், முனிவர்களும், தீர்த்தங்களும் இருத்தலை அவனுக் கெடுத்தோதினார். பசுக்கள் தரும் பஞ்சகவ்வியங்கள் சிவபிரானுக்கு அபிஷேகத் திரவிய மாதலையும், சிவ சின்னமாகிய விபூதிக்கு மூலம் அவற்றின் சாணமாதலையும் அவர் சிந்தித்து, அந்தப் பசுக்களைத் தாமே மேய்க்கும்படி விரும்பினார். அதனால் அவர் அவ்விடையனை நோக்கி, "இந்தப்பசு நிரையை இனி நீ மேய்க்கவேண்டிய தில்லை. நானே மேய்ப்பேன்" என்றார். இடையன் அவர் சொன்னதைக் கேட்டுப் பயந்து, அவரை வணங்கி அவ்விடத்தினின்றும் நீங்கிப் போயினான்.

பின், தெய்வத் தன்மை பொருந்திய பிராமணச் சிறுவராகிய விசாரசருமர், பசுக்களை அவ்வவற்றிற்குரிய பிராமணர்களின் சம்மதிபெற்று, மேய்ப்பாராயினர். பசு மேய்க்குங் கோலையும், அலைகயிற்றையும் அவர் கையில் எடுத்துக்கொண்டு, குடுமி முடியவிழ்ந்து அலையவும், மான் தோலோடு விளங்கும் பூணூல் அவருடைய சிறிய மார்பினிடத்தில் அசையவும் அப்பசுக்களின் பின் ஓடுவார். பசும்புல் தரையில் பசுக்களை மேய்க்கவேண்டிய காலங்களில் அவர் மேய்ப்பார். மேய்க்கக்கூடாத இடத்திலிருக்கிற புல்லினைப் பறித்து, அப்பசுக்கள் உண்ணும்படி அவர் கொடுப்பார். மண்ணியாற்றங் கரையில் இருக்கின்ற காடுகளில் பசுக்களை யோட்டி மேயவிட்டு, வேற்று மிருகங்களால் அவைகளுக்கு அச்சமுண்டாகாமல் எதிர் நின்று காத்து வருவார்.

இப்படியே தினந்தோறும் அவர் வயலோரங்களிலும், புல் நிறைந்திருக்கும் கரையோரங்களிலும் பசுக்களை வேண்டுமட்டும் மேயவிட்டும், தண்ணீரூட்டியும் வருவார். வெயி லெறிக்கும்பொழுது அவர் பசுக்களை நிழலிருக்கும் இடங்களிலே செலுத்திக் காப்பாற்றுவார். அவர், ஒவ்வொருநாளும் சூரியன் மறைவதற்கு முன் சமித்துக்கள் ஒடித்துக்கொண்டு, அப்பசுக்களைப் பிராமணர்களின் வீடுகளில் விட்டுத் தாமும் வீட்டுக்குப் போவார்.

## சிவார்ச்சனையின் சிறப்பு

இப்படி இருக்கையில், பசுக்களெல்லாம் அழகோடு மிகப் பெருகி, போசன பானங்களில் குறைவில்லாமையால் மகிழ்ச்சியடைந்தன. அதனால்



அவைகள் மடிசுரந்து பாலை மிகப் பொழிந்தன. பிராமணர்கள் நித்திய ஓமாகுதியின்பொருட்டு விட்டிருக்கின்ற தங்கள் பசுக்கள், விசாரசருமர் மேய்க்கத் தொடங்கியபின் முன்னிலும் அதிகமாகக் கறக்கக் காண்கையால், மிகுந்த சந்தோஷத்தை அடைந்தார்கள். பசுக்கள் எல்லாவகை யுபசரிப்பினாலும் அளவிறந்த களிப்பை அடைந்தன. அவைகளின் கன்றுகள் வீட்டிலேயே கட்டப்பட்டுத் தம்மைப் பிரிந்திருந்தாலும், சிறிதும் வருத்தமுறாதவைகளாகி, மிகுந்த அன்போடு தங்களை மேய்க்கின்ற விசாரசருமரிடம் அன்பைச் செலுத்திவந்தன. அவர் சற்றாயினும் பிரிவாராகில் அப்பசுக்கள் அப்பிரிவாற்றாமல் தாய் போல உருகி, அவர் சமீபத்திலே சென்று, கனைத்து மடிசுரந்து, ஒருவர் கறக்காமல் தாமே பால்பொழியும்.

விசாரசருமர், தம்மை யடைந்த பசுக்கள் தாமே பாலைச் சொரியக் கண்டு, களிப்படைந்து, "இது சிவபெருமானது திருமஞ்சனத்திற்குத் தகுதி யுடையதாகும்" என்று நினைந்தார். அதனால், அவருக்குச் சிவார்ச்சனையி னிடத்தே பேராசை தலைப்பட்டது. உடனே, அவர் மண்ணியாற்றின் கரையிலிருக்கின்ற ஒரு மணல் திட்டையிலே, திருவாத்தி மரத்தின் கீழே மணலினால் ஒரு சிவலிங்கத்தைச் சமைத்தார். அக்கடவுளுக்குத் திருக்கோயிலையும், உயர்ந்த கோபுரத்தையும், மதிலையும் அம்மணலினாலேயே வகுத்தார். திருவாத்திப்பூ முதலிய புஷ்பங்களும், பத்திரங்களும் பறித்துத் திருப்பூங் கூடையிலிட்டுக் கொண்டுவந்து வைத்தார். புதிய குடங்களைத் தேடிக் கொண்டுவந்து, கறவைப் பசுக்கள் ஒவ்வொன்றினிடத்திலும் சென்று

தொட்டவுடனே அவைகள் சுரந்து மதுரமாகிய பாலைச் சொரிந்தன. பாலினாலே நிறைவுற்ற அக்குடங்களை, அவர் ஆலயத்திலே வைத்துப் பத்திர புஷ்பங்களால் சுவாமியை அருச்சித்துப் பாலினால் அபிஷேகஞ் செய்தார்.

பரமசிவன் அவ்விலிங்கத்தினின்று, விசாரசருமர் அன்போடு செய்யும் அருச்சனையை ஏற்றுக்கொண்டனர். விசாரசருமர், சிவபூசைக்கு அங்கமாகிய திருமஞ்சன முதலிய பொருள்களுள், பெறமுடியாதவைகளை மானசமாகப் பெற்றதுபோல் கொண்டு, விதிப்படி அருச்சித்து வணங்கி வந்தார். பசுக்கள், அபிஷேகத்தின்பொருட்டு விசாரசருமர் கொண்டுவரும் குடங்கள் நிறையப் பாலைச் சொரிந்தும், பிராமணர்களுக்குங் குறைவின்றிப் பாலைக்கொடுத்தும் வந்தன.

## எச்சதத்தன் கோபங்கொண்டது

இப்படி அநேகநாளாகப் பார்ப்பவர்களுக்கு விளையாட்டுப்போலத் தோன்றுகின்ற சிவபூசையை விசாரசருமர் செய்து வந்தார். அதைக் கண்ட ஒருவன் அவருடைய உண்மையை அறியாதவனாகி, அவர் செயலை அவ்வூர் பிராமணர்களுக்குத் தெரிவித்தான். இதைக் கேட்ட பிராமணர்கள் ஒன்றுகூடி, "ஆ! என்னே இச்சிறுவன் செயல்! இடையனுக்குப் பசு மேய்க்கத் தெரியாதென்றும், அப்பசுக்களின் கருத்தின்படியே தான் மேய்ப்பதாகவும் சொல்லி நம்மை வஞ்சித்தான். நம்முடைய பசுக்களின் பாலைக் கறந்து, தன்னிஷ்டப்படியே செலவு செய்கிறான். இதுவுமன்றி, அவன் பொய் வேடங்கொண்டு நம்மை ஏமாற்றி வருகின்றான். ஆதலால், அவனுடைய நடத்



தையைப்பற்றி அவன் தந்தையாகிய எச்சதத்தனுக்கு அறிவிக்கவேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டு, அவனை அழைத்துவர சில வேலாளர்களை அனுப்பினார்கள்.

வேலாளர்கள், எச்சதத்தனுடைய திருமாளிகைக்குப்போய் அவனை அழைத்துக்கொண்டு வந்தார்கள். பிராமணர்கள் அவனைக் கண்டு, "ஐயா! எங்கள் ஹோமாகுதியின்பொருட்டுப் பால் கறக்கும் பசுக்களையெல்லாம் உம்முடைய புத்திரனாகிய விசாரசருமன், அன்புடனே மேய்ப்பவன்போலக் கொண்டுபோய்ப் பாலைக்கறந்து வீணில் மணலிலே சொரிந்து விளையாடுகின்றான். இது தகுதியோ?" என்றார்கள்.

எச்சதத்தன் அதைக் கேட்டுப் பயந்து, "சிறு பிள்ளையாகிய விசாரசருமன் செய்கின்ற இந்தச் செய்கையை இதற்குமுன் நான் சிறிதாயினும் அறிந்திலேன். அக்குற்றத்தை நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். இனி, அவன் அப்படிச் செய்வானாயின் அக்குற்றம் என்மேலதாகும்" என்று சொல்லி, அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

மறுநாட் காலையில் விசாரசருமர் வழக்கம்போல் பசுக்களை மேய்க்கச் சென்றார். பிராமணர்கள் சொன்ன விருத்தாந்தத்தைச் சோதிக்கருதிய எச்சதத்தன், விசாரசருமர் அறியாதபடி அவர் பின்னே சென்றான். விசாரசருமர், பசுக்களை மண்ணியாற்றின் மணற்றிட்டையிலே ஓட்டிக்கொண்டு போனதைக் கண்டான் எச்சதத்தன். உடனே அவன் அருகிலிருந்த ஒரு குராமரத்தில் ஏறி, அங்கு நிகழ்வதை அறியும்படி ஒளித்திருந்தான்.

### எச்சதத்தனுடைய மரணம்

சிவபெருமானிடத்திலே அன்பைச் செலுத்துகின்ற விசாரசருமர், மண்ணியாற்றில் ஸ்நானஞ்செய்து வழக்கம்போல மணலினாலே திருக்கோயிலுஞ் சிவலிங்கமும் செய்து, பத்திர புஷ்பங்கள் பறித்துக்கொண்டு வந்து வைத்தார். பிறகு, பசுக்கள் மடியினின்றும் பொழிந்த பால் நிறைந்த குடங்களைக் கொண்டுவந்து தாபித்தார். பூசைக்கு வேண்டிய பிறவற்றையும் அமைத்தார். சிவலிங்கத்துக்குப் பத்திர புஷ்பங்களைச் சாத்திப் பாற் குடங்களை எடுத்து அபிஷேகம் செய்தார்.

குராமரத்தில் ஏறியிருந்த எச்சதத்தன், விசாரசருமர் செய்த யாவும் கண்டிருந்து கோபங்கொண்டான். சீக்கிரம் அம்மரத்தைவிட்டு அவன் இறங்கிப் போய்த் தன் கையிலிருந்த தண்டினால், விசாரசருமருடைய முதுகின்மேல் அடித்துக் கொடிய சொற்களைச் சொன்னான். விசாரசருமருடைய மனம் பூசையிலேயே முழுவதும் பதிந்து கிடந்தபடியால், எச்சதத்தன் அடித்தலாலுண்டாகிய வருத்தம் அவருக்குத் தோன்றவில்லை. இதைக் கண்ட எச்சதத்தன் மேன்மேலும் அதிக கோபங்கொண்டு விசாரசருமரைப் பலமுறை யடிக்க, அவர் அவ்வடியாலாகிய வருத்தம் தோன்றப் பெறாதவராகிச் சிவபிரானின் திருத்தொண்டில் தவறா திருந்தனர்.

"உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து"

என்றபடி, ஐம்பொறிகளையும் அடக்கி அரன் பூசையில்



ஆழ்ந்திருக்கும் விசாரசருமருடைய அன்பின் பெருக்கை எச்சதத்தன் அறிந்தவனல்ல. அவன் முன்னிலும் அதிக கோபங்கொண்டு, அங்கு வைத்திருக்கின்ற திருமஞ்சனப் பாற்குடத்தைக் காலினால் உதைத்துக் கவிழ்த்தான்.

விசாரசருமர் அதைக் கண்டு, அது செய்தவன் தன் பிதா என்பதை அறிந்தும், அவன் செய்தது அதிபாதகமாகிய சிவாபராதமாதலால், அவன் காலைத் துணிக்கக் கருதினார். உடனே தமக்கு முன் கிடந்த ஒரு கோலை எடுத்தார். அஃது அவர் கருத்தின்படி மழுவாயுத மாயிற்று. அதனால், எச்சதத்தனுடைய கால்களை அவர் வெட்டினார். எச்சதத்தன் உடனே பூமியின்மேல் விழுந்து இறந்தான்.

### விசாரசருமர் அருள்பெற்றது

விசாரசருமர், சிவபூசைக்கு வந்த அவ்விடரை நீக்கினபின்னர் முன்போல அருச்சனை செய்யத் தொடங்கினார். அப்போது, அவருடைய பக்திக்கு வியந்த சிவபெருமான், உமாதேவியாரோடும் இடபாரூடராய்த் தோன்றியருளினார். முதிர்ந்த அன்பினையுடைய விசாரசருமர், பரமனைத் தரிசித்துக் கைகூப்பித் தொழுது, மனத்தில் களிப்புற்று, அப்பெருமானது தாமரை மலர்போன்ற திருவடிகளில் விழுந்து சாஷ்டாங்கமாக வணங்கினார். பரமசிவன் அவரைத் தம்முடைய திருக்கரங்களினால் எடுத்துக் கிருபா நோக்கஞ்செய்து, "அன்ப! நீ நம்பொருட்டு உன்னைப் பெற்ற பிதாவை வெட்டினாய். இனி உனக்கு நாமே பிதா" என்று அருளிச்செய்து, அவரை

அணைத்து, நிறைந்த கருணையினால் உடலைத் தடவி மகிழ்ந்தருளினார்.

சிவபிரானுடைய திருக்கரத்தினாலே தீண்டப்பட்ட விசாரசருமருடைய திருமேனி சிவமயமாகி, மிகுந்த பிரகாசத்தோடு விளங்கிற்று. பரமசிவன் அவரை நோக்கி, "நாம் நம்முடைய தொண்டர்களுக்கெல்லாம் உன்னைத் தலைவனாக்கினோம். நாம் ஏற்றுக்கொண்ட அமுதும் பரிவட்டமும் புஷ்பமும் உனக்கே கிடைக்கும்படி சண்டேசுர பதத்தைத் தந்தோம்" என்று திருவாய்மலர்ந்தருளித் தம்முடைய சடையில் தரித்திருந்த கொன்றைமாலையை எடுத்து அவருக்குச் சூட்டியருளினார்.

விசாரசருமர், தேவர்கள் ஆரவாரிக்கவும், புஷ்பமாரி பொழியவும், சிவகணங்கள் பாடியாடிக் களிகூரவும், வேதங்கள் கோஷிக்கவும், அநேக வாத்தியங்கள் முழங்கவும், சைவசமயம் நிலைபெறும்படி பரமசிவனைக் கும்பிட்டு, அவரால் அளிக்கப்பட்ட சண்டேசுர பதத்தை அடைந்தார். அன்றுமுதல் அவருக்குச் சண்டேசுர நாயனார் என்னும் பெயர் விளங்கிவருகின்றது. எச்சதத்தர் சிவத்துரோகஞ் செய்தும், சண்டேசுர நாயனாராலே தண்டிக்கப்பட்டமையால் அக்குற்றம் நீங்கிச் சுற்றத்துடன் சிவலோகத்தை அடைந்தார்.

# எறிபத்த நாயனார்

## யானையின் துர்ச்செய்கை

கொங்கதேசத்திலே சோழ வமிசத்து இராஜதானியாகிய கருவூர் என்னும் பட்டணமொன்றிருந்தது. தேவர்கள் மிகுந்த சந்தோஷத்தை யடைந்து சூழ்ந்து வாசஞ் செய்கின்ற தேவேந்திரனுடைய அமராவதிக்குச் சமமாயிருந்தது அந்நகரம். மேகக் கூட்டங்கள் அந்நகரின் பெரிய மதில்களின்மேல் சதா தவழ்ந்துகொண்டிருந்தன. அங்கிருக்கும் மாளிகைகளின் வரிசைகள் விண்ணுலகத்தை யளாவியிருக்கும். அப்புரமெங்கும் இரத்தின மாலைகள் ஒவ்வொரு வீட்டின் வாயில்களில் தொங்கிக்கொண்டிருக்கும். சோலைகளில் பலவித புட்பங்களினுண்டான வாசனை நாற்புறமும் வீசிக்கொண்டிருக்கும். மதத்தைப் பொழிகின்ற யானைகள் நீர்த்துறைகளில் விளையாடும். களிப்பினையுடைய மயில்கள், தங்கள் தோகைகளை விரித்து, முல்லை நிலங்களில் ஆடிக்கொண்டிருக்கும்.

இவ்வித சிறப்பினையுடைய அந்நகரில், சிவபிரான் எழுந்தருளியிருக்கும் ஆனிலை என்னும் ஆலயம் ஒன்றுண்டு. பரமசிவனை வழிபடுகின்றவரும், சிவனடியார்களுக்குத் தொண்டு செய்கின்றவரும், அவ்வடியார்களுக்கு ஆபத்து வந்த காலத்தில் வெளிப்பட்டு அவ்வாபத்துக்குக் காரணராயிருந்தவர்களை மழுவினால் வெட்டுகின்றவருமாகிய எறிபத்த நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார்

அவர் காலத்திலே, சிவகாமியாண்டார் என்கின்ற

ஒரு பெரியவர் இருந்தார். அவர் தினந்தோறும் மலர்களைப் பறித்து, அம்மலர்களால் கட்டப்பட்ட திருப்பள்ளித் தாமங்களைச் சிவபிரானுக்குச் சாத்தி, நிறைந்த பேரன்போடும் நடக்கின்றவர். அவர் ஒரு நாள் முன்போல வைகறையிலே எழுந்துபோய், ஸ்நானஞ்செய்து, வாயை வஸ்திரத்தினாலே கட்டி, திருநந்தவனத்துக்குப் போய், கையினாலே ஆராய்ந்து. மணம் வீசுகின்ற நல்ல அரும்புகள் மலரும் சமயத்திலேயே கொய்தார். கொய்த புட்பங்களை அவர் அழகிய திருப்பூக்கூடையில் நிறைத்துக்கொண்டு, கையிலே தண்டை ஏந்தி, சுவாமிக்குத் திருப்பள்ளித் தாமங் கட்டிச் சாத்தும் பொருட்டு, அந்தச் சிவாலயத்தை நோக்கிச் சீக்கிரம் நடந்தார்.

அப்போது, அந்நகரி லிருக்கின்ற அரசராகிய புகழ்ச்சோழ நாயனாருடைய பட்டவர்த்தன யானையானது, மகா நவமியின் முதனாளாகிய அத்தினத்தில், காவேரியிலே முழுகி, மிக அலங்கரிக்கப்பட்டுக் குத்துக்கோற்காரர் முன்னே ஓட, உயர்ந்த மலைபோல வந்துகொண் டிருந்தது. அது, தன் எதிரில் வருபவர்களை நாற்புறத்திலும் விலகியோடிப் போகச் செய்து, தன்மே லேறிய பாகர்களோடும் ஒரு வீதியிலே விரைவாகச் சென்றது. அவ்வீதியில் தனக்கு முன் சிவகாமியாண்டார் போய்க்கொண் டிருப்பதை அந்த யானை கண்டு, பின்னே தொடர்ந் தோடிப்போய், அவர் கையில் பிடித்திருக்கும் ஒப்பற்ற வலிய தண்டில் தொங்கிக்கொண் டிருந்த மலர்கள் நிறைந்த புஷ்பக் குடலையைப் பிடித்துப் பறித்துப் பூமியில் சிந்திவிட்டது.



அந்த யானையின்மேல் ஏறியிருந்த பாகர்கள் அச் செய்கையைக் கண்டு, விசையாகப் போகின்ற யானையைச் சண்டமாருதத்தை வசப்படுத்திக் கொண்டு போகிறவர்கள்போல அதிக விரைவாய் அதைச் செலுத்திக்கொண்டு போனார்கள். சிவகாமியாண்டார் பதைபதைத்துக் கோபித்து, அந்த யானையைத் தண்டினால் அடிக்கும்படி அதற்குப் பின்னே போனார். அந்த யானையோ, அவர் சமீபிக்கவொட்டாத மகா கதிகொண்டு சென்றது.

### கோபத்தால் நேர்ந்த கொலை

சிவகாமியாண்டார் வயோதிக ரானபடியால், அந்த யானையைத் தொடர்ந்து செல்லக்கூடாதவராய்த் தவறி விழுந்து, தமது கைகளைத் தரையில் மோதி யடித்தார். பிறகு, எழுந்து நின்று, அதிக துக்கங்கொண்டு, "தேவரீருக்குச் சாத்தும்படி கொண்டுவந்த பூவை, யானை சிந்தலாகுமோ? சிவதா! சிவதா!" என்று சொல்லி ஓலமிட்டார். இதை அவ்வழியாக எதிரே வந்துகொண் டிருந்த எறிபத்த நாயனார் கேட்டு, மிகக் கோபித்து, மழுவை எடுத்துக்கொண்டு ஓடிவந்தார். வந்தவர் சிவகாமியாண்டாரைச் சமீபித்து வணங்கி, "உமக்கு இந்தத் துன்பத்தைச் செய்த யானை எங்கே போய்விட்டது?" என்று கேட்டனர். அவர், "நமது சிவபெருமானுக்குச் சாத்தும்பொருட்டுக் கொண்டுவந்த மலர்களை, அந்த யானை எனது கையிலிருந்த பூக்குடலையோடு பிடுங்கிப் பூமியில் இறைத்து, இந்தத் தெருவழியாகவே போகின்றது" என்றார்.

அது கேட்டு, எறிபத்தநாயனார் மிகுந்த கோபங்கொண்டு, "இனி இந்தயானையானது எப்படி உயிர்தப்

வீப் பிழைத்துக்கொள்ளும்!" என்று கையிற்பிடித்த கூரிய மழுப்படையுடன் அதி சீக்கிரம் ஓடிப்போய், யானையைச் சமீபித்து, மழுவை வீசி அதன்மேல் பாய்ந்தார். எரிகின்ற நெருப்புப் பொறியைக் கக்குகின்ற கண்களையுடைய யானையானது, தன்மேல் ஏறிச் செலுத்துகின்ற பாகர்களைத் தாங்கிக்கொண்டு, எறிபத்தநாயனார்மேல் கோபித்துத் திரும்பிற்று. எறிபத்தநாயனார் அதற்குச் சற்றும் அஞ்சாமல், அதை எதிர்த்து, அதனுடைய பெரிய துதிக்கையானது அற்று விழும்படியாகத் தமது கையிலுள்ள மழுவாயுதத்தினால் வெட்டித் தள்ளினார்.

"கையினைத் துணித்த போது கடலெனக் கதறி வீழ்ந்து
மைவரை யனைய வேழம் புரண்டிட மருங்கு வந்த
வெய்யகோற் பாகர் மூவர் மிசைகொண்டா ரிருவ ராக
ஐவரைக் கொன்று நின்றா ரருவரை யனைய தோளார்"

அப்பொழுது, யானை மிகக்கதறிக் கீழேவிழுந்து புரண்டது. பின்பு, எறிபத்தநாயனார் அதற்கு முன்னேநிற்கும் குத்துக்கோற்காரர் மூவரும், அதன்மேல் ஏறியிருந்த பாகர்கள் இருவரும் ஆகிய ஐவரைக் கொன்று நின்றார்.

கொலையுண்ட அந்த ஐவரை ஒழிந்த மற்றவர்கள் விரைந்துசென்று, புகழ்ச்சோழநாயனாருடைய வாயிற் காவலாளரை நோக்கி, "பட்டவர்த்தன யானையையும், பாகர்கள் சிலரையும், சிலர் கொன்று விட்டார்கள். இதை நமது அரசனுக்கு விண்ணப்பஞ் செய்யுங்கள்" என்று சொன்னார்கள். உடனே வாயிற் காவலாளர்கள் அரசரிடத்திலே போய், அவரை வணங்கி, பாகர்கள் சொல்லிய சமாச்சாரத்தைத் தெரிவித்தார்கள்.



## அரசனுடைய போர்க்கோலம்

புகழ்ச்சோழ நாயனார், வாயிற்காப்பாளர் சொன்னதைக் கேட்டவுடனே அளவிறந்த கோபங் கொண்டு, இளமை பொருந்திய ஆண்சிங்கம் போல அரண்மனையினின்றும் வெளிப்பட்டார். சேனைத்தலைவர்களும், புகழ்ச்சோழ நயனார் போர்செய்யக் கருதிச் செல்லுகின்ற நிலைமையைப் பார்த்துவந்து, தங்களுடைய ஆக்ஞையின் கீழ்ப்பட்டிருக்கும் திரண்ட சேனைகளை விரைவில் போர்க்கோலங் கொண்டு வரும்படியாக முன்னே பறை சாற்றினார்கள். ஆகாயத்தின் பார்த்த இடங்களெல்லாம் அழகிய வஸ்திரக்கொடிகள் பறந்தன. சூத்திரங்களமைந்திருக்கின்ற தேர்களும், குதிரைகளும், யானைகளும் கூடின. வில், வேல், வாள், தண்டம், பிண்டிபாலங்கள், மிகுந்த வலிபொருந்திய இருப்புலக்கைகள், சக்கரம், மழுவாயுதம், சூலம் இவை முதலாயுள்ள அநேக ஆயுதங்களைக் கையிற் பிடித்துக்கொண்டு, கால்களில் அழகிய வீரகண்டையைத் தரித்த எண்ணிறந்த போர்வீரர்கள் எவ்விடத்தினின்றும் எழுந்தார்கள்.

புகழ்ச்சோழ நாயனாருக்கு முன்னும் பின்னும் பலவகை வாத்தியங்கள் முழங்கின. பிரகாசம் பொருந்திய ஆயுதங்கள் ஒன்றோடொன்று தாக்குதலால் உண்டாகிய முழக்கமும், குதிரைகளின் கழுத்தில் அணிந்த கிண்கிணிமாலையின் முழக்கமும், யானைகள் பிளிறுகின்ற முழக்கமும், தேரோடுதலால் உண்டாகின்ற முழக்கமும் ஒன்றாகச் சேர்ந்து சமுத்திர கோஷம் போல முழங்கின. ரத கஜ துரக பதாதி என்னும் நால்வகை யுறுப்பாகப் பரவி யெழுகின்ற சேனைகளுக்

கிடையில் புகழ்ச்சோழ நாயனார் ஒரு அழகிய குதிரையின்மேல் ஏறிக்கொண்டு விரைந்துசென்று, யானையும், பாகரும் இறந்த போர்க்களத்தை அடைந்தார்.

அங்கே நின்ற சிவவேடந் தரித்த எறிபத்த நாயனாரை அரசன் கண்டு, யானையைக் கொன்றவர் அவர் என்பதை அறியாதவராகி, "யானையைக் கொன்றவர் யாவர்?" என்று கேட்டார்; பாகர்கள் அரசனை வணங்கி நின்று, "அரசரேறே! மழுவைத் தரித்துக் கொண்டு இவ்விடத்தில் நிற்கின்றவரே யானையைக் கொன்றவர்" என்றார்கள்.

அப்பொழுது, புகழ்ச்சோழ நாயனார், "இவர் சிவபத்தராகையால் அந்த யானை குற்றஞ் செய்தாலன்றி அதைக் கொல்லார். அது யாதோ குற்றஞ் செய்ததுபோலும்" என்று யோசித்துத் தம்முடைய சேனைகளை அங்கு வரவொட்டாமல் நிறுத்தித் குதிரையினின்றும் இறங்கி, "இந்த அடியவர் யானைக்கு எதிரே சென்றபொழுது, அஃது இவரை அபாயத்திற்குள்ளாக்காமலிருந்தது என் பூர்வ ஜன்மத் தவப்பயனாகும். இப்பெரியார், இவ்வளவு கோபங் கொள்ளும்படி என்னபிழை சம்பவித்ததோ" என்று சொல்லிப் பயந்து, எறிபத்த நாயனாருக்கு எதிரே சென்று, அவரை வணங்கி நின்று, "சுவாமி! இந்த யானை, தேவரீருக்குத் தீங்கு செய்தது என்பதை அடியேன் அறியேன்.

"இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்றபடி, இந்த யானை செய்த குற்றத்தின் பொருட்டுத் தேவரீர் இந்த யானையைப் பாகரோடுகொன்றது



மாத்திரம் போதுமா? போதாதாயின், அதனையும் தேவரீர் அருளிச்செய்ய வேண்டும்" என்று கேட்டனர்.

## அளவிறந்த அன்பு

எறிபத்த நாயனார், புகழ்ச்சோழ மன்னனைப் பார்த்து, "சோழர் பெருமானே! சிவகாமியாண்டார் பரமசிவனுக்குச் சாத்தும்படி கொண்டுவந்த மலர்களை இந்த யானை பறித்துச் சிந்தினதினால் நான் இதைக் கொன்றேன். இந்த யானை, மலர்களைக் கீழே சிந்தித் தீங்கு செய்தபோது, முன்னே வந்துகொண்டிருந்த குத்துக்கோற்காரர்களும், மேலேறிச் செலுத்திவந்த பாகர்களும் அதனை விலக்காதிருந்த குற்றத்தினால், அவர்களும் என்னால் வெட்டுண்டு இறந்தார்கள். இதுவே இங்கு உண்மையில் நடந்த விருத்தாந்தம்" என்றார்.

பருத்த மலைபோலும் பெரிய தோள்களையுடைய புகழ்ச்சோழ நாயனார் அதைக் கேட்டுப் பயந்து, எறிபத்த நாயனாருடைய திருவடிகளை முறையாக வணங்கி, "சிவனடியாருக்குச் செய்த அபராதத்திற்கு இந்த யானையையும், பாகரையும், குத்துக்கோற்காரரையும் கொன்றது மாத்திரம் போதாது; அடியேனையும் கொல்லவேண்டும். பெரும் பாவியாகிய சிறியேனைத் தேவரீருடைய திருக்கரத்திலிருக்கின்ற மங்கலம் பொருந்திய மழுவாயுதத்தினாலே கொல்வது நீதியன்று. அதற்கு இதுவே தகுதியான ஆயுதம்" என்று சொல்லித் தமது இடையிற் கட்டியுள்ள உடைவாளை உறையினின்றும் உருவி, அவர் கையில் கொடுக்க நீட்டினார்.

நெருப்பைப்போலப் பிரகாசிக்கின்ற மன்னனுடைய உடைவாளை எறிபத்த நாயனார் கண்டு, அம்மன்னனுடைய அளவிறந்த அன்பைக் குறித்து ஆச்சரியமடைந்து, நீட்டிய வாளை வாங்காமல் சிறிது பொழுது தாழ்த்துநின்றார். பின்பு, மன்னன் கையிலே வாள் இருந்தால் தம்மைத் தாமே மாய்த்துக் கொள்ளக் கூடுமென்று எறிபத்த நாயனார் அஞ்சி, அதைத் தமது கையிலே வாங்கினார். புகழ்ச்சோழ நாயனார் அதிக சந்தோஷத்தையடைந்து, எறிபத்த நாயனாரை வணங்கி நின்று, "இந்தச் சிவ பத்தர் அடியேனை வாளினாலே கொன்று, என் குற்றத்தைத் தீர்க்கும்படி பெற்றேன்" என்றார்.

எறிபத்த நாயனார் அது கேட்டு, மிகவும் அஞ்சி, "இவ்வரசனுடைய அன்பின் பெருக்கு இருந்தவாறு என்னே! தமது பட்டத்து யானையும், பாகர்களும் மடிந்து போகவும், அதற்குச் சிறிதும் சினப்படாமல் தமது கையிலுள்ள உடைவாளைக் கொடுத்துத் தம்மையும் கொல்லவேண்டுமென்று கேட்கிற இவ்வரசனுக்குத் தீங்கு நினைத்தேனே. இதற்கென்ன பரிகாரம் தேடிக் கொள்ளலாம்? முன்னே என் உயிரைக் கொன்று முடிப்பதே அப்பிழைக்குத் தகுந்த தீர்ப்பு" என்று நினைத்து, அந்த வாளைத் தம்முடைய கழுத்திலே சேர்த்து அறுக்கத் தொடங்கினார். அது கண்டு புகழ்ச்சோழ நாயனார் பயந்து, நடு நடுங்கி, அதி விரைவில் எறிபத்த நாயனாருடைய கையையும் வாளையும் பிடித்துக்கொள்ள, அவர் தம்முடைய எண்ணம் நிறைவேறாமையால் வருந்தி நின்றார்.



## திருவருட் பேறு

அப்பொழுது, அளவிறந்த அன்பினாலே அவ்விருவருக்கும் உண்டாகிய இத் துக்கத்தை நீக்கும் பொருட்டுப் பரமசிவனுடைய திருவருளினாலே, "யாவரும் தொழுதற்குத் தகுதியாகி, அன்பிற் சிறந்தவர்களே! உங்களுடைய திருத்தொண்டின் பெருமையை உலகத்திலே வெளிப்படுத்தும்பொருட்டு இன்றைக்கு யானை புஷ்பத்தைச் சிதறும்படி பரமசிவன் அருள் செய்தார்" என்ற ஒரு அசரீரி வாக்கு ஆகாயத்திலே எழுந்தது. அப்பொழுது, இறந்து கிடந்த ஐந்து பாகர்களோடும் யானையும் உயிர் பெற்றெழுந்தது.

அது கண்ட எறிபத்த நாயனார், தமது கழுத்தை அறுத்துக்கொள்ளும்படியாகச் சேர்த்த உடைவாளை விட்டுப் புகழ்ச்சோழ நாயனாருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினார். புகழ்ச்சோழ நாயனாரும் அந்த வாளைத் தூரத்திற் போகும்படி எறிந்துவிட்டு, அந்த எறிபத்த நாயனாரது திருவடிகளைத் துதித்துப் பூமியில் விழுந்து வணங்கினார். அதைக் கண்ட தேவர்கள் குளிர்ந்த புஷ்பமாரி பொழிந்தார்கள்.

எறிபத்த நாயனாரும், புகழ்ச்சோழ நாயனாரும், ஒருவரை யொருவர் வணங்கி எழுந்து நின்று, ஆகாயத்திலிருந் துண்டாகிய அசரீரி வாக்கைத் துதித்தனர். பரமசிவனுடைய திருவருளினாலே அழகிய புஷ்பக் குடலையில் திருப்பள்ளித் தாமத்துக்குரிய மலர்கள் முன்போல நிறைந்தன. சிவகாமியாண்டார் அதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். பாகர்கள், பட்டவர்த்தன யானையை நடத்திக்கொண்டு புகழ்ச்சோழ நாயனார்முன் வந்தார்கள். எறிபத்த நாயனார், புகழ்ச்

சோழ நாயனாரை அஞ்சலி செய்து வணங்கி, "அடியேன் மகிழும்படி நீர் இந்த யானையின் மேல் ஏறிச் செல்லவேண்டும்" என்றார். புகழ்ச்சோழ நாயனார் அவரைத் தொழுது, அவர் கட்டளையிட்ட வண்ணம் யானையின்மேலேறிக்கொண்டு, சேனைகளோடும் தமது அரண்மனையை அடைந்தார். சிவகாமியாண்டார் திருப்பூங்கூடையை வாங்கிக்கொண்டு, பரமசிவனுக்குத் திருமாலை கட்டிச் சாத்தும்படி சென்றார்.

எறிபத்த நாயனார், இப்படியே அடியார்களுக்கு இடையூறுகள் வந்த காலங்களிலே முற்பட்டு, அவைகளை நீக்கி, நாள்தோறும் நல்ல தவநெறியை மேற்கொண்டிருந்து, பிறகு திருக்கைலாயகிரியில் இருக்கின்ற சிவகணங்களுக்குத் தலைவரானார்.

## அமர்நீதி நாயனார்

### சிவபெருமான் பிரமசாரியானது

சோழநாட்டில் சந்தனம், அகில், பாதிரி, மந்தாரம், கோங்கு, நாரத்தை முதலிய தருக்களடர்ந்த சோலைகளையுடைய திருப்பழையாறை என்றொரு நகரமிருந்தது. அந்நகரத்தில் அமர்நீதி நாயனார் என்னும் பெயருடைய வைசியர் ஒருவர் இருந்தார். அவர் பொன், முத்து, நவரத்தினம், வஸ்திராபரணங்கள் முதலியவற்றை வியாபாரஞ் செய்து பெருஞ் செல்வமுடையவராயிருந்தார். அவர் சதாகாலமும் சிவபெருமானையே சிந்திப்பவராயும், சிவனடியார்களைத் திருவமுது செய்வித்து, அவரவர் குறிப்பறிந்து கந்தை, கீள், கோவணம் என்பனவைகளைக் கொடுப்பவராயுமிருந்தார்.

அவர், திருநல்லூர் என்னும் சிவக்ஷேத்திரத்தில் மிகுந்த சிறப்போடு நடக்கின்ற திருவிழாவை, விருப்பத்தோடு போய்த் தரிசனஞ் செய்யவரும் சிவனடியார்கள் திருவமுது செய்யும்பொருட்டு ஒரு திருமடம் கட்டுவித்தார். அவர், தம்முடைய சுற்றத்தார்களுடன் அவ்விடத்திற் போய்ச் சேர்ந்து, சிவபெருமானுடைய மகோற்சவ தரிசனஞ் செய்து, சிவனடியார்களைத் திருவமுது செய்வித்து வந்தார்.

இப்படியிருக்க, ஒரு நாள் திருநல்லூரில் வீற்றிருக்கும் காளகண்டராகிய சிவபெருமான், அமர்நீதி நாயனாருக்குத் திருவருள் புரியும்பொருட்டுப் பிராமண வருணத்துப் பிரமசாரி வடிவங் கொண்டார். அவருடைய திருமுடியின்மேல் குடுமியும், நெற்றியில்

திரிபுண்டரமும், திருமேனியில் முப்புரிநூலும், திருக் கரத்தின் விரலில் பவித்திரமும் விளங்கின. இரண்டு கௌபீனங்களையும், விபூதிப்பையையும் கட்டியிருக்கின்ற ஒரு தண்டைக் கையிலே பிடித்துக்கொண்டு, அமர்நீதி நாயனாருடைய திருமடத்திற்கு எழுந்தருளி வந்தார்.

அமர்நீதி நாயனார், பிரமசாரியின் திருவுருவத்தைக் கண்டவுடனே முகமலர்ச்சி கொண்டு, அவருக்கெதிரே வந்து தொழுது, "சுவாமி! தாங்கள் இங்கு எழுந்தருள அடியேன் பூர்வத்தில் செய்த தவம் யாதோ? இன்றே நான் புனிதனானேன்" என்றார். சிவபிரானாகிய பிரமசாரி அவரை நோக்கி, "அன்ப! நீர், அடியார்களுக்குத் திருவமுதைச் சிறப்பாக உண்பித்து, அவர்களுக்குக் கந்தைகளும், கீள், கௌபீனங்களும் கொடுப்பதைக் கேள்வியுற்று, உம்மைப் பார்க்க விரும்பி வந்தோம்" என்றார்.

அமர்நீதி நாயனார் அதுகேட்டு, "இந்தத் திருமடத்திலே நான்கு வேதங்களையுமுணர்ந்த பிராம்மணோத்தமர்களால் திருவமுது பாகம் செய்யப்பட்டு வருகிறது. ஆதலால், தேவரீர் இங்கே திருவமுது செய்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

"வணங்கு மன்பரை நோக்கியம் மறையவ னிசைந்தே
அணங்கு நீர்ப்பொன்னி யாடிநான் வரமழை வரினும்
உணங்கு கோவணம் வைத்துநீ தாருமென் றொருவெண்
குணங்கொள் கோவணந் தண்டினி லவிழ்த்தது கொடுப்பார்".

பிரமசாரி, அமர்நீதி நாயனாரின் வேண்டுகோளுக் கிசைந்து, "நாம் காவேரியாற்றில் ஸ்நானம் பண்ணிக் கொண்டு வருவோம். வழியில் மழை வரினும் தரிக்-



துக்கொள்ளும்பொருட்டு உலர்ந்திருக்கின்ற இந்தக் கௌபீனத்தை நீர் பத்திரப்படுத்தி வைத்திருந்து தாரும்" என்று சொல்லிப் பலாசத் தண்டில் கட்டியிருந்த இரண்டு கௌபீனங்களில் ஒரு வெண்ணிறத்தையுடைய கோவணத்தை அத்தண்டினின்றும் அவிழ்த்து, "உயர்வாகிய இந்தக் கௌபீனத்தின் பெருமை இப்படிப்பட்டதென்று நான் உமக்குச் சொல்ல வேண்டியதில்லை" என்று சொல்லி, அவர் கையிற் கொடுத்துவிட்டுக் காவேரிக்குச் சென்றார். அமர்நீதி நாயனார், அந்தக் கௌபீனத்தை ஒரு தகுந்த இடத்திலே சேமித்து வைத்தார்.

போன வேதியர் வைத்தகோ வணத்தினைப் போக்கிப்
பான லந்துறைப் பொன்னிநீர் படிந்துவந் தாரோ
தான மஞ்சடைக் கங்கைநீர் தோய்ந்துவந் தாரோ
வான நீர்மழை பொழிந்திட நனைந்துவந் தணைந்தார்.

நீராடுதற்குச் சென்ற பிரமசாரி, அமர்நீதி நாயனார் பத்திரப்படுத்தி வைத்திருந்த கோவணத்தினைத் தமது மாய்கையால் அவ்விடத்தினின்றும் மறைந்து போகும்படி செய்தார். பிறகு, அவர் ஸ்நானஞ் செய்துகொண்டு, மழையினால் நனைந்து திருமடத்தை அடைந்தார். அமர்நீதி நாயனார், அவரை எதிர்கொண்டழைத்து வந்து, "சுவாமி! சமையலாயிற்று" என்று வணங்கி நின்றார்.

## அமர்நீதி நாயனாரின் அன்பின் சோதனை

சிவபெருமானாகிய அந்தப் பிரமசாரி, அமர்நீதி நாயனாரது அன்பெனும் நீரில் மூழ்கத் திருவுள்ளங் கொண்டு, "அன்ப! குளிர்ச்சியாகிய நீரில் மூழ்கியதனால் உண்டாகிய சீதத்தை நான் நீக்கிக்கொள்ள —

வேண்டும். தண்டிலே கட்டப்பட்டிருக்கின்ற கௌபீனமோ ஈரமாயிருக்கின்றது. உம்மிடத்தில் கொடுத்துப்போன உலர்ந்த கௌபீனத்தைக் கொண்டு வாரும்" என்றார்.

சிவபிரான் செய்த வஞ்சகத்தையறியாத அமர்நீதி நாயனார், களங்கமற்ற மனத்துடன் உள்ளே சென்று பார்த்தார். அந்தக் கௌபீனம், வைத்த இடத்தில் காணப்படவில்லை. அவர் மனந் திகைத்துத் தேடத் தொடங்கினார். எங்கும் காணப்படாமையால் பெருந் துக்கத்தை அடைந்தார். இதுவரையிலும் நேரிடாத இவ்வித பொல்லாங்கு சம்பவித்ததே என்று மன வருத்தமுற்றார். அவர் வேறொரு கௌபீனத்தை எடுத்துக்கொண்டு பிரமசாரியின் முன் சென்று, "சுவாமி! தேவரீர் தந்த கௌபீனத்தை வைத்த இடத்திலும் பிற இடங்களிலும் தேடிக் கண்டிலேன். அது போன விதம் இன்னதென்று அறியேன். ஆதலால், வேறொரு நல்ல கௌபீனம் கொண்டுவந்தேன். இது வேறோர் வஸ்திரத்தினின்றும் கிழிக்கப்பட்டதல்ல; நூதனமாய் நெய்யப்பட்ட கோவணம். நனைந்த தமது கௌபீனத்தைக் களைந்து இந்தக் கௌபீனத்தைச் சாத்தி, அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்" என்றார்.

அதைக் கேட்ட பிரமசாரி மிகக் கோபித்து, "அன்ப! உம்முடைய தரும நிலைமை மிகவும் நன்றாயிருக்கின்றது! நான் கௌபீனத்தை உம்மிடம் கொடுத்து ஒரு நாளாவது கழியவில்லை. அவ்வளவு சீக்கிரத்தில் அதை நீர் அபகரித்துக்கொண்டு, அதற்குப் பதிலாக வேறொன்றைத் தருவது என்ன விந்தை!



இது வஞ்சகமன்றோ? இதற்கோ நீர் தருமம் செய்வதாகப் பறைசாற்றித் திரிவது? இவ்வர்த்தகம் மிகவும் நன்றாயிருக்கின்றது. நீர், சிவனடியார்களுக்கு நல்ல கௌபீனம் கொடுப்பதாக ஊரிலே பரவச்செய்து, என்னுடைய கௌபீனத்தைக் கவர்தல் தகுமோ?" என்றார்.

அமர்நீதி நாயனார், பயந்து, முகம்வாடி, நடுநடுங்கி, "சுவாமி! அடியேன் இக்குற்றத்தை அறிந்து செய்தவனல்ல. ஆதலால், அடியேன் செய்த பெரும் பிழையைப் பொறுத்தருள வேண்டும். தேவரீருக்குச் செய்யவேண்டிய மற்றப் பணிவிடைகளெல்லாம் குறைவின்றிச் செய்கின்றேன். இந்தக் கௌபீனத்துடன் வேறு பொன்களையும், பட்டாடைகளையும், இரத்தினங்களையும் தருகிறேன். அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று அவர் திருவடிகளில் பல முறை விழுந்து வணங்கினார்.

பிறகு, பிரமசாரியார் கோபந் தணிந்தவர்போலத் தோன்றி, அமர்நீதி நாயனாரைப் பார்த்து, "பொன்களும், பட்டாடைகளும், இரத்தினங்களும் எனக்கு ஏன்? நான் தரித்துக்கொள்வதற்கு வேண்டிய கௌபீனத்துக்குச் சமமான நிறையுள்ள கௌபீனமொன்றைத் தந்தால் போதும்" என்றார். அது கேட்ட அமர்நீதி நாயனார் மன மகிழ்ந்து, "எதனுடைய நிறைக்குச் சமமாகிய கௌபீனத்தைத் தரல் வேண்டும்?" என்று கேட்டனர். பிரமசாரியார், "நீர் இழந்த எனது கௌபீனத்தின் நிறைக்குச் சமமான நிறையை யுடைய கௌபீனம் இதுவேயாகும்" என்று சொல்

வித் தமது தண்டிலே கட்டப்பட்டிருந்த கௌபீனத்தை அவிழ்த்துத் தந்தார்.

### பொன் பொருள்களைத் தராசி லிட்டது

"மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தற
னாகுல நீர பிற."

என்றபடி, மாசற்ற மனத்தையுடைய அமர்நீதி நாயனார் ஒரு தராசைக் கொண்டுவந்து நாட்டினார். பிரமசாரியார் தண்டிலிருந்தும் அவிழ்த்த அந்தக் கௌபீனத்தை ஒரு தட்டிலே வைத்தார். அமர்நீதி நாயனார் தம்முடைய கையிலிருந்த நெய்யப்பட்ட கௌபீனத்தை மற்றத் தட்டிலே வைத்தார். அது சிவபெருமானுடைய கௌபீனத்திற்கு நிறையில் ஒத்து நில்லாமல் மேலெழுந்தது. அதைக் கண்டு அமர்நீதி நாயனார், அடியார்களுக்குக் கொடுக்க வைத்திருந்த கோவணங்களெல்லாவற்றையும் கொண்டுவந்து ஒவ்வொன்றாக இட, பின்னும் அத்தட்டு மேலுக்கு எழும்பியது.

அமர்நீதி நாயனார் அதைப் பார்த்து, "ஆ! இஃது என்ன ஆச்சரியம்! உலகத்தில் இதுவரையில் நடவாத ஒரு விந்தையாயிருக்கிறது. இந்த மகான் வைத்த ஒரு கௌபீனத்திற்கு, நான் வைத்த கௌபீனங்கள் நிறைக்கு ஒத்திருக்கவில்லையே" என்று வியப்படைந்தார். பின்னும், அவர் பட்டாடைகளும் பிறவாகிய பல வஸ்திரங்களையும் அத்தட்டில் ஒன்றின்மேல் ஒன்றாக இட்டார். இடுந்தோறும் அத்தட்டு உயர்ந்துகொண்டே வந்தது; கௌபீனத் தட்டுக் கீழே தாழ்ந்தது.

அமர்நீதி நாயனார் அதைக் கண்டு மிக அஞ்சி, பிரமசாரியாரை வணங்கி, "சுவாமி! நான் வைத்த வஸ்



திரப் பொதிகளையும், நூற் கட்டுக்களையும் குவித்தும் தராசின் தட்டு உயர்கின்றது. ஆதலால், அடியேனுடைய மற்றத் திரவியங்களையும் இத்தட்டிலே இடுதற்கு அனுமதி தந்தருளவேண்டும்" என்றார். அதற்குப் பிரமசாரியார், "இப்பொழுது உம்முடைய வார்த்தைக்கு எதிராக நாம் வேறொன்றைச் சொல்லுவதனால் பயன் என்ன? எவ்விதத்திலும் அந்தத் தட்டு நிறை நிற்கும்படி உமது திரவியங்களையாவது இட்டு, நிறை ஒத்திருக்கச் செய்யலாம். நம்முடைய கௌபீனத்திற்கு ஒத்த நிறையில் உமது பொருள் நிற்க வேண்டும்" என்றார்.

அமர்நீதி நாயனார், நவரத்தினங்களையும் பொன் வெள்ளி முதலிய உலோகங்களையும் சுமை சுமையாக எடுத்துவந்து தராசில் இட்டார். அப்படி இட்டும் தட்டு எழுந்தபடியே மேலே நின்றது. சர்வ வல்லமையுள்ள சிவபெருமானால் விரும்பப்பட்ட கௌபீனத்திற்குச் சமமாக எதுதான் நிற்கும்? அமர்நீதி நாயனாருடைய திரவியங்களெல்லாமல்லாமல், எல்லா வுலகங்களையும் எடுத்து வைத்தாலும் அவைகள் நிறை ஒத்து நிற்குமோ? நிற்கமாட்டா.

### நாயனார் தாமே தராசிலேறியது

இவ்வாறு தமது பொருள்கள் அனைத்தும் இட்டும், நிறை ஒவ்வாது நிற்கும் நிலைமையைப் பார்த்த அமர்நீதி நாயனார், பிரமசாரியரை வணங்கி, "எமது தலைவ! என்னுடைய திரவியங்களில் ஒன்றும் விடாமல் இந்தத் தட்டிலே இட்டேன். நானும், என் மனைவியும், புத்திரனும் மாத்திரம் மீதியாக நிற்கின்றோம்.

தேவரீருக்குப் பிரீதியாகில், இனி அடியேங்களும் இத் தட்டில் ஏறுதற்கு அனுமதி தந்தருள வேண்டும்" என்று வணங்கினார்.

உண்மையாகிய அடிமைத்திறஞ் செய்த அமர்நீதி நாயனாரின் அன்பின் நிலையைக் கண்ட பிரமசாரியார், அடியாரின் வார்த்தைக்கு உடன்பட்டார். அமர்நீதி நாயனார் அகமகிழ்ந்து, பிரமசாரியாரை வணங்கி, தம்முடைய மனைவியாரோடும் புத்திரரோடும் தராசை வலஞ்செய்து, "உண்மையான அன்போடு சிவபெருமானது மெய்யடியார்களுக்கு இதுவரையில் யாஞ் செய்த அடிமைத் திறத்தில் நாம் சிறிதாம் தவறு இருந்தோ மென்பது சத்தியமானால், இப்பெரிய துலையானது சமமாய் நிற்கக்கடவது" என்று சொல்லித் திருநல்லூரில் வீற்றிருக்கின்ற பரமசிவனை வணங்கி, மகிழ்ச்சியோடு தட்டிலே ஏறினார்.

பரமசிவனுடைய கௌபீனமும், பத்தியிலே சிறிதும் குறைவில்லாத அமர்நீதி நாயனாருடைய அடிமைத் திறமும் பெருமையில் ஒத்திருந்தபடியால், துலாக்கோலின் இரண்டு தட்டுக்களும் ஒத்து நின்றன.

அவ்வற்புதத்தைக் கண்டவர்களெல்லாம் அமர்நீதி நாயனாரை வணங்கி ஸ்தோத்திரஞ் செய்தார்கள். தேவர்கள், ஆகாயத்தினின்றும் கற்பக விருக்ஷங்களின் புஷ்பங்களை மழைபோலப் பொழிந்தார்கள். சிவபெருமான், தாம் கொண்டுவந்த பிரமசாரி வடிவத்தை ஒழித்து, ஆகாய வீதியில் பார்வதி தேவியாரோடும் இடபாரூடராய்த் தோன்றினார். அமர்நீதி நாயனார், தராசில் நின்றவண்ணமாக அவரை ஸ்தோத்திரஞ் செய்தார். பரமசிவன், தராசில் நின்று வணங்கும்



அம்மூவர் மேலும் திருவருள் நோக்கஞ் செய்து, "நீங்கள் மூவரும் நம்முடைய அருளைப் பெற்று, நம்முடைய சந்நிதானத்திலே நம்மை வணங்கிக்கொண்டிருங்கள்" என்று அருளிச்செய்து, மறைந்தருளினார்.

அமர்நீதி நாயனாரும், அவர் மனைவியாரும், புத்திரரும் கைலாசபதியின் திருவருளினால், அந்தத் தராசு தானே தேவ விமானமாகி மேலே செல்ல, அம்முதற் பெருங்கடவுளுடன் சிவலோகத்தை அடைந்தார்கள்.

## சிறுத்தொண்ட நாயனார்

### மாற்றரசர்களை வென்றது

சோழமண்டலத்திலே, திருச்செங்காட்டங்குடி என்னும் பட்டினமொன்றிருந்தது. அதில், மாமாத்திரர் குலத்திலே அவதரித்த பரஞ்சோதியார் என்னும் பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் ஆயுள் வேதங்களிலும், வடமொழிக் கலைகளிலும் சிறந்தவர். படைத் தொழில்களிலும், யானை யேற்றம், குதிரை யேற்றங்களிலும் அவர் மிகவும் தேர்ந்தவர். அவர், வேத முதலிய கலைகளை யாராய்ந்து, அவற்றிலுள்ள இரகசியங்களை நன்றாய் உணர்ந்தவர். பரமசிவனே மெய்க்கடவுள் என்றும், அவருடைய திருவடிகளை யடைதலே முத்தி நெறி என்றும் அவர் தெரிந்து, அல்லும் பகலும் அப்பெருமானையே தியானித்து வந்தார். சிவனடியார்களுக்கு எக்காலமும் தொண்டு செய்து வருவதே அவருக்கு முக்கிய காரியமாயிருந்தது.

இப்படியிருக்க, அப்பட்டினத் தரசனுக்கு மாறுபட்ட பல அரசர்களிருந்தார்கள். பரஞ்சோதியார் அவ்வரசனுடைய ஏவலைக்கொண்டு, பகை மன்னர்களைப் போரில் வென்று, அவர்களுடைய தேசங்களையும் கைப்பற்றினார். அவருடைய போராற்றலைக் கண்ட அரசன் மிகவும் மகிழ்ந்து, அவரை நன்கு மதித்திருந்தான்.

ஒருமுறை, பரஞ்சோதியார், வடதேசத்தைச் சேர்ந்த வாதாவி என்னும் நகரத்தின்மேல் படையெடுத்துச் சென்று, அந்தேசத்தைக் கைப்பற்றிப்



பலவகை இரத்தினங்களையும், நிதிக் குவியல்களையும், யானைக் கூட்டங்களையும், குதிரைக் கூட்டங்களையும் அரசன்முன் கொண்டுவந்தார். அதுகண்ட அரசன் ஆனந்தமடைந்து, அவருடைய திறமையைப் புகழ்ந்து பேசினான்.

அப்போது, அங்கிருந்த மந்திரிகள் அரசனைப் பார்த்து, "ஏந்தலே! பரமசிவனுக்குத் திருத்தொண்டு செய்வதில் இவ்வுலகத்திலே இவருக்கு நிகராவார் எவருமிலர்" என்றார்கள். அதைக் கேட்ட அரசன், நடுங்கித் திகைத்து, இரண்டு கண்களினின்றும் நீர் வடிய, "அந்தோ! நான் பிழை செய்தவனானேன். இவர் பரமசிவனுடைய திருத்தொண்டர் என்பதை உணராது, இவரைக் கொடிய போர் முனையில் விட்டிருந்தேன். அதனால் செயற்கரிய அரும்பாவத்தைச் செய்தேன்" என்று வருந்திப் பரஞ்சோதியாரைப் பார்த்து, "எம்பெருமானே! நான் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும். தேவரீருடைய உண்மை நிலையை அறியாது, தகாத காரியங்களைச் செய்யத் தூண்டினேன்" என்று சொல்லி, அவரைப் பணிந்து நின்றான்.

பரஞ்சோதியார், அரசன் தம்மைப் பணிவதற்கு முன், தாம் அவனைப் பணிந்து, "அரசரேறே! என் கடமையை நான் செலுத்திக்கொண்டு வந்தேன். இதில் நிகழ்ந்த குற்றம் யாது? எதற்காக நீர் வருந்துகின்றீர்?" என்று கேட்டனர். அடியவரிடத்தில் அன்பு பூண்டொழுகும் அம்மன்னன், பரஞ்சோதியாருக்கு வேண்டிய நிதிக் குவியல்களைக் கொடுத்து, "அடியேன், தேவரீருடைய உண்மை நிலைமையை

அறியா திருந்தது என் மதியீனமேயன்றி வேறில்லை. இனி நான் கருத்துக் கிசைந்து, எனக்குப் பணி செய்தலை ஒழித்து நீர் சிவபிரானுக்கும் அவரடியவர்களுக்கும் திருத்தொண்டு செய்யக்கடவீர்" என்று வேண்டிக் கொண்டு, அவருக்கு விடைகொடுத் தனுப்பினான்.

பரஞ்சோதியார், அரசனுடைய அனுமதியின் படியே விடை பெற்றுக்கொண்டு, தம்முடைய திருப்பதிக்குச் சென்றார். அவர், கணபதீச்சரத்தில் எழுந்தருளி யிருக்கும் சிவபிரானைத் தொழுது, திருத்தொண்டுகளை வழுவாது செய்வாராயினார். அவர், திருவெண்காட்டு நங்கையார் என்னும் கற்பரசியாரோடு இல்லறவழி நின்று, ஒவ்வொரு நாளும் சிவனடியார்களை முன்னே திருவமுது செய்வித்துப் பின் தாம் உண்பார். சிவனடியார்களை மிகுந்த அன்பினோடும் அவர் வழிபட்டு, அவர்களுக் கெதிரில் மிகச் சிறியராய்த் தம்மைக் காட்டி வந்தமையால் அவருக்குச் சிறுத்தொண்டர் என்னும் பெயர் வழங்கிவந்தது. அவர் வணங்கிவரும் சிவபெருமானுடைய திருவருளினாலே அவருடைய பத்தினியாகிய திருவெண்காட்டு நங்கையாருக்குச் சீராளன் என்னும் ஒரு மைந்தன் பிறந்தான். சிறுத்தொண்டர், அப்பிள்ளையைக் கண்ணெனு மேனியும், பொழுதொரு வண்ணமாக அன்புடன் வளர்த்து, ஐந்து வயதிலேயே அச்சிறுவனைப் பள்ளியி லமர்த்தினார்.

## வைரவரின் வரவு

நாயனார், சிவனடியார்களுக்கு அமுதூட்டும் திருத்தொண்டைக் குறைவற நடத்திக்கொண்டு வரும் நாளில், அவருடைய மெய்யன்பை அறிதற்குச் சிவ



பெருமான் திருவுளங் கொண்டார். எல்லாம்வல்ல அப்பெருமான், வைரவத் திருவேடந் தாங்கி, வெள்ளிமால் வரையைவிட்டுத் திருச்செங்காட்டங்குடியை அடைந்தார். அங்கே அவ்விறைவர், சிறுத்தொண்ட நாயனாருடைய வீட்டு வாயிலிற் சென்று, "தொண்டர்களுக்கு அமுதூட்டும் சிறுத்தொண்டர் இவ்வீட்டில் இருக்கின்றாரோ?" என்று வினவினார்.

அவ்வில்லத்தி லிருந்த சந்தன நங்கை என்னும் தாதி அப்பெருமான் முன் வந்து, அவரை வணங்கி, "தபோநிதி! சிவனடியார்களைத் தேட அவர் புறத்தே சென்றனர். தேவரீர் வீட்டிற்குள் எழுந்தருளலாம்" என்றாள். அதுகேட்ட வைரவர் அம்மாதைப் பார்த்து, "நாம் பெண்கள் இருக்குமிடத்தில் தனியே புகோம்" என்றனர்.

அது கேட்ட திருவெண்காட்டு நங்கை, "இவ்வடியவர் போய்விடுவார் போலும்" என்று பயந்து, விரைவில் வெளியே வந்து, "சுவாமி! அடியேனுடைய நாயகர் எப்போதும் சிவனடியார்களைத் திருவமுது செய்விப்பவர். இன்றைக்கு ஒருவரையும் காணாமையால் தேடிப் போயினார். தேவரீருடைய திருவேடத்தை அவர் காணுவாராயின் மிகவும் மகிழ்வார். அவர் போய் நெடுநேர மானதால் இப்பொழுதே வந்துவிடுவார். தாங்கள் அதுவரையிலும் இவ்வீட்டில் எழுந்தருளி யிருக்கலாம்" என்று பிரார்த்தித்தாள்.

வைரவர் அம்மங்கையாரைப் பார்த்து, "நாம் இருப்பது உத்தர தேசம், சிறுத்தொண்டரைக் காண வேண்டுமென்ற விருப்பத்தால் இங்கு வந்தோம். அவர் இங்கில்லாதபோது நாம் இவ்வீட்டில் இருக்க

மாட்டோம். நாம் கணபதீச்சரத்தில் உள்ள திருவாத்தி மரத்தின்கீழ் இருப்போம். உமது கணவர் வந்தவுடனே அவருக்கு நாம் வந்து போனதைத் தெரிவியுங்கள்'' என்று சொல்லி, அவ்விடத்தினின்றும் வெளிப்போந்து, கணபதீச்சரத்தை யடைந்து, திருவாத்தியின்கீழ் இருந்தருளினார்.

சிறுத்தொண்ட நாயனார், சிவனடியார்களைத் தேடித்தேடி அலைந்தும் எங்குங் காணாது, வீட்டுக்குத் திரும்பி வந்து, தமது மனைவியாரைப் பார்த்து, "இன்று சிவனடியார்களைக் காணப் பெற்றிலேன். இதற்கு என்ன செய்வது?'' என்று சொல்லித் துக்கித்தார். அதுகேட்ட அப்புனிதவதி, "உத்தரதேசவாசியாகிய ஒரு வைரவர், சற்றுநேரத்திற்குமுன் உம்மைத் தேடி இங்கு வந்தார். நாங்கள் அவரை இங்கு எழுந்தருளி யிருக்கும்படி வேண்டிக்கொண்டும் அவர் கேளாது, கணபதீச்சரத்திற்குப் போய் அங்குள்ள திருவாத்தியின்கீழ் இருப்பதாகச் சொல்லிப் போயினார்'' என்றாள்.

அதுகேட்ட சிறுத்தொண்ட நாயனார் மிகுந்த விருப்பத்தோடு விரைந்து சென்று, அவ்வைரவரைக் கண்டு வணங்கி நின்றார். அவர், சிறுத்தொண்ட நாயனாரை ஆசீர்வதித்து, "நீர்தாமோ சிறுத்தொண்டர்?'' என்றார். நாயனார் அவரை மறுபடியும் வணங்கி, "மாதவரே! சிவனடியார்கள் கருணையுடன் அடியேனுக்குச் சிறுத்தொண்டன் என்னும் பெயரிட்டது உண்மையே. நான் வழக்கம்போலத் திருவமுது செய்விப்பதற்குச் சிவனடியார்களை இன்று தேடியும் எங்கும் கண்டிலேன். அதனால் மிகவும் வருத்தத்துக்



குள்ளானேன். அடியேன் செய்த புண்ணிய விசேஷத்தினால் இப்போது தேவரீரைக் காணப் பெற்றேன். ஆதலால், தேவரீர் அடியேனுடைய வீட்டுக்கு எழுந்தருளித் திருவமுது செய்யவேண்டும்'' என்று விண்ணப்பஞ் செய்தார்.

வைரவர் அதுகேட்டு, "அன்ப! நாம் இருப்பது உத்தரதேசம். உம்மைக் கண்டு போகலாமென்று இங்கு வந்தோம். நம்மை உமது வீட்டில் அமுது செய்விக்க உம்மால் முடியாது'', என்றார்.

சீராளன் கிதையுண்டது

சிவனடியார்களுக்குத் திருவமுது செய்விப்பதையே பெருநெறியாகக் கொண்டொழுகும் சிறுத்தொண்ட நாயனார் அவ்வடியவரை வணங்கி, "மகாத்துமா! தேவரீர் திருவமுது செய்தருளும் இயல்பு எத்தகைய தென்று அருளிச்செய்ய வேண்டுகின்றேன். தங்கள் விருப்பத்தின்படியே அதி சீக்கிரத்தில் பாகம் பண்ணுவிப்போம். சிவனடியார் விரும்பினவற்றைத் தேடுவதில் அரியவையும் உளவோ?'' என்றார்.

அதுகேட்ட வைரவர், நாயனாரைப் பார்த்து, "நாம் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பசுவைக் கொன்று சமைத் துண்பது வழக்கம். அதற்குரிய நாள் இந்நாளேயாம். அவ்விதம் எமக்கு உண்பித்தல் உம்மால் ஆகக்கூடிய தல்ல'' என்றார். சிறுத்தொண்ட நாயனார் அதுகேட்டவுடன் முகமலர்ந்து, "ஐயா! அடியேன் அநேக பசுக்களை யுடையேன். அதைப்பற்றித் தாங்கள் சந்தேகங் கொள்ளவேண்டியதில்லை. தேவரீருக்குத் தேவையான பசு எதுவோ

57691

அதைத் தெரிவிப்பீராகில், அடியேன் விரைந்து சென்று, அப்பசுவைப் பாகஞ் செய்வித்து, அதிசீக்கிரத்தில் வருவேன்" என்றார்.

அதற்கு வைரவர், "நாம் உண்பது நரபசு. அஃது ஐந்து வயதினையுடையதாயும், அவயவப் பழுது இல்லாததாயும், ஒரு குடிக்கு ஒன்றேயாயும் இருக்க வேண்டும். இவ்வியல்பினையுடைய சிறுவனைச் சிறிதும் துயரின்றி மனமகிழ்ச்சியோடு தாய் பிடித்துக் கொள்ளத் தந்தை அரிதல்வேண்டும். இப்படிச் சமைக்கப்பட்ட கறியே நாம் உண்பதற்கு யோக்கியமாகும். அதைச் செய்ய உம்மால் முடியுமோ?" என்றார். சிறுத்தொண்ட நாயனார் மிகுந்த சந்தோஷத்துடன் வைரவரைப் பார்த்து, "அவ்வித நியமமுறைத் தாங்கள் திருவமுது செய்வீராகில், அடியேனுக்கு அப்படிச் செய்து படைப்பது அரிதன்று" என்று சொல்லி, அவரை வணங்கி விடை பெற்றுக்கொண்டு வீட்டிற்குச் சென்றார்.

சிறுத்தொண்ட நாயனாருடைய வரவை அறிந்து ஆவலுடன் எதிர்நோக்கி நின்ற திருவெண்காட்டு நங்கை, அவருடைய மலர்ந்த முகத்தைக் கண்டு, அவரை வணங்கி, அவருடைய விருத்தாந்தத்தை வினவினள். அவர், மனைவியாரை நோக்கி, "பாவாய்! ஒரு குடிக்கு ஒரே பிள்ளையாயும், ஐந்து வயதுடையதாயும், அவயவப் பழுதில்லாததாயும் இருந்து, அதைத் தாய் மனமகிழ்ச்சியோடு பிடித்துக் கொள்ளத் தந்தை அரிந்து சமைத்தால் அக்கறியைத் திருவமுது செய்வதற்கு அவ்வடியார் உடன்படுகிறார்" என்றார்.



அது கேட்ட அவர் மனைவியார், "அவ்வடியவரை அவர் விருப்பத்தின்படி திருவமுது செய்விப்பதானால் ஒரு குடிக்கு ஒருவனாயும், மற்ற இலட்சணங்களும் அமைந்த சிறுவனைப் பெறுவது எங்ஙனம்?" என்று சொல்ல, நாயனார், "பூவையே! இவ்விலக்கணமமைந்த சிறுவனை, வேண்டிய பொருளைத் தந்தால் கொடுப்பவர் உளராயினும், அச்சிறுவனை நேர் நின்று அரியத் துணியும் தாய் தந்தையரோ இவ்வுலகில் இருக்கமாட்டார்கள். ஆதலால், இனிக் காலந் தாழ்க்காது நாம் பெற்ற சிறுவனையே அவ்வடியார் உண்ணும் பொருட்டுச் சமைப்போம்" என்றார்.

திருவெண்காட்டு நங்கையார் அதுகேட்டு மகிழ்ந்து, "அப்படியாயின் நம்மைக் காக்கும் பொருட்டுவந்த புதல்வனைப் பள்ளிக்கூடத்தினின்றும் அழைத்துக் கொண்டுவாரும்" என்று சொல்ல, நாயனார் அதிக சந்தோஷத்தை யடைந்தார். அவர் சிறிதும் காலந் தாழ்க்காது பள்ளிக்கூடத்துக்கு விரைந்து சென்று, தம்முடைய புதல்வனாகிய சீராளனை எடுத்துத் தோள்மேல் வைத்துக்கொண்டு, வீட்டிற்குத் திரும்பி வந்தார்.

திருவெண்காட்டு நங்கையார் எதிரே வந்து, தமது புத்திரனை எடுத்து, வீட்டில் கொண்டுபோய், மஞ்சனமாட்டி, மயிரைக்கோதி அலங்கரித்துத் தமது நாயகர் கையில் கொடுத்தாள். அவர், அம்மைந்தனை எடுத்துக் கொண்டு மடைப்பள்ளிக்குச் செல்லாமல், ஒருவரும் அறியாவண்ணம் ஒரு மறைவிடத்திற்குக் கொண்டு சென்றார். இதற்குள் அவர் மனைவி, பாத்திரங்களை நன்றாகச் சுத்தஞ் செய்து அவரிருக்குமிடம் சென்றாள்.

சிறுத்தொண்ட நாயனார், தம்முடைய புதல்வனை எடுத்து, அவன் தலையைப் பிடித்துக்கொண்டார். அவர் மனைவியோ அப்புதல்வனுடைய இரண்டு கால்களையும் தம்முடைய மடியிலே இடுக்கி, அவனுடைய இரண்டு கைகளையும் தன் கைகளினாலே பிடித்துக்கொண்டாள். அப்புதல்வன் தன் தந்தையும் தாயும் தன்னைச் சிறப்பித்து மகிழ்கின்றனரென்று சந்தோஷமாய் நகைத்துக்கொண்டிருந்தான். அப்போது, நாயனார் மனமகிழ்ச்சியோடு ஆயுதத்தினாலே அம்மைந்தனுடைய தலையைத் துணித்தனர். அந்தத் தலையின் இறைச்சி அடியாருடைய திருவமுதுக்கு ஆகாதென்று திருவெண்காட்டு நங்கை எண்ணி, அதனை மறைத்து நீக்கும்பொருட்டுச் சந்தனநங்கை கையிற் கொடுத்து, மைந்தனுடைய மற்றை உறுப்புக்களின் இறைச்சி யெல்லாவற்றையும் அறுத்துப் பாகஞ்செய்து, வேறு கறிகளும், அன்னமும் படைத்தானபின் நாயனாருக்குத் தெரிவித்தாள்.

## வைரவருடைய அற்புதம்

நாயனார், தமது மனைவியின் அருஞ்செயலுக்கு மிகவும் களிப்படைந்தாராய், விரைந்துசென்று, திருவாத்தியின் கீழிருந்த வைரவரை வணங்கி, "சுவாமீ! தேவரீர் விரும்பியவண்ணம் பாகம் தயாராய்விட்டது; என் வீட்டிற்கு வந்து, திருவமுது செய்து, என்னைப் புனிதனாக்க வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார். அவர் விருப்பத்தின்படியே அவ்வடியார் சார்ந்துவர, நாயனார் அவரை வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய், ஆசனத்தில் இருத்தி, அவருடைய திருவடி



களை ஜலத்தினால் விளக்கி, அந்தத் தீர்த்தத்தைத் தாமும் தமது மனைவியும் சிரசின்மேல் தெளித்துக் கொண்டனர். பிறகு, நாயனார், அவ்வடியாரைப் புஷ்பங்களினால் அருச்சித்துத் தூபதீபங் காட்டி வணங்கினார். வணங்கியபின், நாயனாரும், அவர் மனைவியும் வைரவரைப் பார்த்து, "மாதவரே! தேவரீருக்குத் திருவமுது படைக்கும் வகை எப்படி?" என்று கேட்டனர். அதற்கு வைரவர், "அன்னத்துடனே கறிகளெல்லாம் ஒருங்கே படைக்கவேண்டும்" என்றார்.

திருவெண்காட்டு நங்கையுடனே பரிகலந் திருத்தி, அன்னமும், கறியமுதும் படைத்தாள். வைரவர் அதைக் கண்ணுற்று, "நாம் சொல்லிய முறையே கொன்ற பசுவினது உறுப்புக்க ளெல்லாவற்றையும் பாகஞ் செய்தீர்களோ?" என்று வினவினார். அதைக் கேட்ட திருவெண்காட்டு நங்கையார் அவரைத் தொழுது, "தலை இறைச்சி மாத்திரம் திருவமுதுக்கு ஆகாதென்று கழித்துவிட்டோம்" என்றாள். வைரவர், "அதை நீங்கள் கழித்திருக்கலாகாது; அதுவும் நாம் உண்ணத் தகுந்ததே" என்றார்.

சிறுத்தொண்ட நாயனார் அதுகேட்டுத் தம் மனைவியோடும் திகைத்து, அந்தக் குறைக்கு என்ன செய்வதென்றும் தோன்றாது நின்றனர். அப்போது, அவர்களின் நிலைமையைக் கண்ட சந்தனநங்கை, "நான் அந்தத் தலை இறைச்சியை, அடியவர் திருவமுது செய்யும்போது தேவையாயிருக்குமென்று பாகஞ்செய்து வைத்திருக்கிறேன்" என்று சொல்லி, அந்தக் கறியமுதையும் எடுத்துக் கொடுத்தனள். அதைக் கண்ட திருவெண்காட்டு நங்கை முகமலர்ந்து, அக் கறியமுதை

வாங்கி வைரவருக்குப் படைத்தாள். பிறகு, வைரவர், சிறுத்தொண்ட நாயனாரைப் பார்த்து, "நாம் எப்போதும் தனியே உண்பதில்லை, சிவனடியார்களுடன் நாம் சாப்பிடவேண்டும்" என்றார். சிறுத்தொண்ட நாயனார் அதுகேட்டு ஏங்கி, "அந்தோ! அடியவர் திருவமுது செய்வதற்கு மற்றோர் இடையூறு நேரிட்டதே. இதற்கு என்ன செய்வது?" என்று வருந்தி வீட்டுக்கு வெளியே போய், அடியார்களைத் தேடிப் பார்த்தார். ஒருவரும் காணப்படவில்லை. அவர் என்ன செய்வார்? அவர் துக்கத்துடன் வீட்டுக்குத் திரும்பிவந்து, வைரவரை வணங்கி, "சுவாமி! சிவனடியார்களை எங்குத் தேடியும் காணப் பெற்றிலேன். அடியேனும் திருநீர் இடுவாரைக் கண்டு அன்னங் கொடுப்பேன்" என்றார். வைரவர், சிறுத்தொண்ட நாயனாரை நோக்கி, "ஆம், நீர் சொல்வது உண்மையே. உம்மைப்போலத் திருநீறிட்டார் உளரோ? ஆதலால் நீர் எம்மோடு அமுது செய்யும்" என்று சொல்லித் திருவெண்காட்டு நங்கையைப் பார்த்து, "அம்மையே! உமது நாயகருக்கு மற்றோர் பரிகலந் திருத்தி, அன்னமும், கறியும் நமக்குப் படைத்ததில் எடுத்துப் படையும்" என்று கட்டளையிட்டனர்.

அந்தக் கறபர்சியும் அவர் தெரிவித்தவண்ணம் மற்றோர் பரிகலத்தில் அன்னமும் இறைச்சியும் எடுத்துப் படைத்தாள். அப்போது, சிறுத்தொண்ட நாயனார் வைரவரை ஊட்டவேண்டித் தாம் உண்ணப்புகுந்தார். அதுகண்ட வைரவர், அவரை உண்ணாது தடுத்து, "ஆறு மாதங்களுக்கு ஒருமுறை உண்ணுகின்ற நாம் உண்ணுமளவும் நீர் தாமதியாமல், எப்பொழுதும் உண்ணுகின்ற நீர் எமக்குமுன் உண்ணப் புகுந்தது



சீராளன் உயிர்பெற்று வருதல்.



என்னை? நம்முடன் உண்ணும்பொருட்டு உமக்குப் புத்திரன் உண்டானால் அவனை அழையும்" என்றார்.

## சீராளன் உயிர்பெற்று வருதல்.

அடியார் சொன்னதைக் கேட்ட சிறுத்தொண்டநாயனார் திகைத்து, "என் மைந்தன் இப்போது உதவமாட்டான்" என்று சொல்ல, வைரவர், "அவன் வந்தாலன்றி நாம் உண்ணோம். நீர் அவனைத் தேடி அழைத்துவர வேண்டும்" என்றார். உலகை வென்ற உத்தமராகிய நாயனார் உடனே எழுந்து, மனைவியோடு விரைந்து வீட்டுக்குப் புறத்திலே போய், "மைந்தா! சீராளா!" என்று கூப்பிட்டார். அவர் மனைவியும், நாயகரது பணியில் நிற்பாளாகி, "என் கண்மணி! சீராளா! சிவனடியார், நீ வந்தாலன்றி உணவை அருந்துவதில்லை என்றும், உன்னை உடன் வைத்து உண்ணவேண்டும் என்றும் உன்னை அழைத்துவரச் சொன்னார். ஆதலால் சீக்கிரம் வா" என்றழைத்தாள். அப்பொழுது சீராளன், பரமசிவனுடைய திருவருளினாலே பள்ளிக்கூடத்தினின்றும் ஓடிவருவான் போல வந்தான். தாயார், அப்புத்திரனை உடனே வாரி எடுத்துத் தழுவி நாயகர் கையில் கொடுக்க, அவர் மிகவும் மகிழ்ந்து, "இனிச் சிவனடியார் திருவமுது செய்யும் பாக்கியத்தைப் பெற்றோம்" என்று தம்மையும் மறந்த ஆனந்தத்தில் மூழ்கி, அப்புதல்வனுடன் வீட்டிற்குள் பிரவேசித்தார். சிவனடியார் அங்குக் காணப்படவில்லை. அவர் அதற்கு முன்பே மறைந்தருளினார்.

சிறுத்தொண்ட நாயனார், சிவனடியாரைக் காணா

மையால் மனங்கலங்கித் திகைத்து விழுந்தார். "அந்தோ! மோசம் நேரிட்டதே" என்று பதைத்துத் துடித்தார். பரிகலத்தில் இட்டிருந்த இறைச்சிக் கறியமுதைக் காணாமையால் அச்சமுற்றார். "வைரவர் திருவமுது செய்யாமல் எங்கே ஒளிந்தனரோ?" என்று வீடு முழுதும் தேடி மயங்கினார். "என் பணிவிடையில் யாது பிழை நிகழ்ந்ததோ" என்று எண்ணி அப்புறஞ் செல்ல; சிவபெருமான் அவருடைய உள்ளன்பின் உறுதிக்கு வியந்தவராகி, உமாதேவியாரோடும் இடபா ரூடராய் ஆகாயத்தில் தோன்றியருளினார். சிறுத்தொண்ட நாயனாரும், அவர் மனைவியும், புதல்வனும், தாதியும் ஆகிய நால்வரும் சிவபெருமானைத் தரிசித்து, ஆனந்த அருவி சொரிய நமஸ்கரித்து நின்றனர். சிவபெருமான் அவர்களுக்குப் பேரின்பத்தை யருளினார்.

## நமிநந்தியடிகள் நாயனார்

### நீரைக்கொண்டு விளக்கேற்றியது

நீதியோடு அரசாட்சி செய்கின்ற ஒப்பற்ற செங்கோலையுடைய சோழ மன்னர்களுடைய நாட்டிலே ஏமப்பேறூர் என்னும் திரு நகரமொன்றிருந்தது. அவ்வூரில் மாலைகளோடு சேர்ந்த தோரணங்கள் அழகிய வீதிகளில் கட்டியிருக்கும்; சமுத்திரத்து நீரையுண்ணுகின்ற மேகங்கள் அப்பட்டினத்து மேல் வீடுகளில் சஞ்சரிக்கும். வண்டுகள் அழகிய கமுகமரங்களில் சூழ்ந்து ரீங்காரம் செய்யும் ஒலியும், வேதியர்கள் சதா ஓதிக்கொண்டிருக்கும் வேத ஒலியும் அந்நகரமெங்கும் சப்திக்கும். குளிர்ந்த நிரையுடைய வயல்களில் செங்கழுநீர் மலர்கள் மலர்ந்திருக்கும்.

இவ்வித சிறப்புப் பொருந்திய அந்த ஏமப்பேறூரில் நமிநந்தியடிகள் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பிராமண குலத்திலே அவதரித்தவர். இம்மையிலும் மறுமையிலும் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கித் துதிக்கப்பெற்ற அருமையாகிய தவத்தைச் செய்தவர். பரிசுத்தமாகிய திருவெண்ணீற்றைத் தரித்தலே உண்மைப் பொருளென்றுணரும் மனோ நிச்சயமுடையவர்.

அவர், பலநாளுந் திருவாரூருக்குப் போய், வன்மீக நாதரை வணங்கி வருவார். ஒரு நாள் அவர் வன்மீகநாதரை வணங்கிக்கொண்டு, திருமுன்றிலை அடைந்து பக்கத்திலிருக்கின்ற அரனெறி என்னும் ஆலயத்துட் புகுந்து, கடவுளை நமஸ்கரித்து, அங்கே செய்ய வேண்டிய பல தொண்டுகளைச் செய்தார். அன்றிரவு

அங்கே பல தீபமேற்றுதற்கு விரும்பி எழுந்தார். அப்போது மாலை சமீபித்ததைக் கண்டு, அப்பாற் சென்றால் பொழுது போகும் என்று நினைத்து அங்கிருந்த ஒரு வீட்டில் நுழைந்து, "சிவாலயத்தில் விளக்கேற்றுதற்கு நெய் தாருங்கள்" என்று கேட்டார். அது, புறச்சமயி னோர் வீடாதலால், அதிலிருந்தோர், நமிநந்தியடிகளைப் பார்த்து, "கையிலே சுவாலிக்கின்ற அக்கினியை யுடைய பரமசிவனுக்கு விளக்கு மிகையன்றோ? இங்கே நெய் இல்லை. விளக்கெரிப்பீராகில் நீரை முகந்து எரி யும்" என்றார்கள்.

அது கேட்ட நமிநந்தியடிக ணாயனார், அந்தச் சொல்லைப் பொருதலாகி, மிகுந்த மனவருத்தத் தோடும் திரும்பிப் போய், சிவபிரானுடைய சந் நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்தார். அப்பொழுது, ஆகாயத்திலே, "நமிநந்தியே! நீ உன்னுடைய கவ லையை நீக்கு. இதற்கு சமீபத்தி லிருக்கின்ற குளத் தில் நீரை முகந்துகொண்டு வந்து விளக்கேற்று" என்று ஒரு அசரீரி வாக்குத் தோன்றிற்று.

நமிநந்தியடிக ணாயனார் அதுகேட்டு அகமகிழ்ந்து, திருவருளை வியந்து கொண்டு எழுந்து போய், குளத் தில் இறங்கிச் சிவநாமத்தை உச்சரித்து, நீரை முகந்து கொண்டார். பிறகு, அவர் திருக்கோயிலிலே வந்து, அகலிலே முறுக்கிய திரியின் மேலே அந்நீரைவார்த்து, விளக்கேற்றினார். அது சுடர்விட்டெரிந்தது. அது கண்டு அவ்வாலயம் முழுதிலும் நீரிலே திருவிளக் கெரித்தார். திருவிளக்கு விடியுமளவும் நின்று எரியும் படி, குறைகின்ற தாழிகளுக்கெல்லாம் நீர் வார்த்து, இரவிலேதானே தம்முடைய ஊரைச் சேர்ந்து, நியமார்ச்



சனை புரிந்து திருவமுது செய்து, நித்திரை கொள் வார். உதய காலத்தில் பூசையை முடித்துக்கொண்டு, திருவாரூரை யடைந்து, அரனெறி என்னும் ஆலயத் திற் சென்று சுவாமியை வணங்கி வருவார். இரவிலே எங்கும் விளக்கேற்றுவார்.

## சிவகணங்களைத் தரிசித்தது

இப்படி யிருக்கையில், புறச் சமயினர்களின் கலகம் ஒழிந்து, திருவாரூர் பெருமை யடைந்து விளங்கியது.

"நாத மறைதேர் நமிநந்தி யடிக ளார்நற் றொண்டாகப்
பூதி நாதர் புற்றிடங்கொள் புனிதர்க் கமுது படிமுதலா
நீதி வளவன் றன்வேண்டு நிபந்தம் பலவு மரியணையின்
மீது திகழ விருந்தமைத்தான் வேதா கமநூல் விதிவிளங்க"

அக்காலத் திருந்த நீதியையுடைய சோழமன்னன், சிங்காசனத்தில் வீற்றிருந்து, நமிநந்தியடிக ணாயனாரை அத்தியக்ஷராக, வன்மீக நாதருக்கு அமுதுபடி முத லாக வேண்டிய நிபந்தங்கள் பலவற்றையும் ஏற்படுத்தி னார். நமிநந்தியடிகள் வீதிவிடங்கப் பெருமானுக்குப் பங்குனி மாதத்திலே மகோற்சவம் நடத்துவித்தார். அப்பொழுது, சுவாமி ஒரு நாள் திருமணலிக்கு எழுந் தருள, சகல சாதியார்களும் ஒருங்கே சேவித்துப் போனார்கள். நமிநந்தியடிக ணாயனாரும் சேவித்துப் போய், அங்கே அவ்வெம்பெருமானுடைய திருவோ லக்கத்தைத் தரிசித்து மனமகிழ்ச்சியை அடைந்தார்.

பிறகு, அவர் நெடுநேரம் வரையிலும் உற்சவ தரி சனஞ் செய்து, சுவாமி திரும்பித் திருக்கோயிலிலே புக, நமிநந்தியடிகள் தம்முடைய ஊரை யடைந்து வீட்

டினுள்ளே புகாமல் புறக்கடையிலே படுத்தனர். அவர் மனைவியார் வந்து அவரை வணங்கி, "உள்ளே எழுந்தருளிச் சிவார்ச்சனையையும் அக்கினிகாரியத்தையும் முடித்துக்கொண்டு பள்ளி கொள்ளும்" என்று வேண்டினாள். அதற்கவர் "இன்றைக்குச் சுவாமி திருமணலிக்கு எழுந்தருளியபோது நானும் சேவித்துப் போனேன். சகல சாதியாரும் கலந்து வந்தபடியால் தீட்டுண்டாயிற்று. ஆதலால், நான் ஸ்நானஞ் செய்து பிராயச்சித்தஞ் செய்துகொண்டே உள்ளே புகுந்து சிவார்ச்சனையைத் தொடங்கல் வேண்டும். அதற்கு வேண்டிய ஜல முதலியவற்றைக் கொண்டுவா" என்றார்.

அது கேட்ட அவர் மனைவியாரும் ஜல முதலியவற்றைக் கொண்டுவரச் சென்றாள். அப்பொழுது, நமிநந்தியடிகள் நாயனார் சற்று நித்திரை செய்தார். அவருடைய சொப்பனத்தில் வீதிவிடங்கப் பெருமான் தோன்றி, "திருவாரூரிலே பிறந்தவர்களெல்லாம் நம்முடைய கணங்கள். அதை நீ கண்டு தெளிவாய்" என்று சொல்லி மறைந்தருளினார்.

நமிநந்தியடிகள் நாயனார் விழித்தெழுந்து, தாம் நினைந்தது குற்றமென்று கருதி, உள்ளே எழுந்து சிவார்ச்சனையை முடித்தார். மனைவியாருக்கும் அவர் நிகழ்ந்ததைச் சொல்லி, விடிந்தபின் திருவாரூருக்குச் சென்றார். அங்கே அவர் ஆச்சரியப்படும்படி அந்தத் திருப்பதியில் பிறந்தவர்களெல்லாரும் சிவ சாரூப்பிய முள்ளவர்களாய்ப் பிரகாசித்தார்கள். அது கண்ட அவர், பூமியிலே விழுந்து, அவர்களை நமஸ்கரித்தார். பிறகு, அவர்கள் அவ்வுருவம் நீங்கி முன்போலாயின



மையைக் கண்டு, "அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்தருளும்" என்று பகவானைப் பிரார்த்தித்தார்.

பிறகு, நாயனார் திருவாரூரிலே தானே குடிபுகுந்து, தம்முடைய திருத் தொண்டுகளைச் செய்துகொண்டிருந்தார். திருவெண்ணீறு தரித்த அடியார்களுக்கு அவர் நெடுங்காலம் வரையிலும் நியதியாக, வேண்டுவன எல்லாவற்றையும் செய்துகொண்டிருந்தமையால், தொண்டர்களுக்கு ஆணிப்பொன் என்று திருநாவுக்கரசு நாயனாராலே, தேவாரப் பதிகத்திலே சிறப்பித்துப் பாடப் பெற்றார்.

இவ்விதப் பெருமை வாய்ந்த நமிநந்தியடிகள் நாயனார், சமஸ்த லோகங்களும் தொழும்படி திருப்பணிகளைச் செய்துகொண்டிருந்து, சிவபதத்தை அடைந்தார்.

## காரைக்காலம்மையார்

### மாம்பழங் கிடைத்த அதிசயம்

சோழமண்டலத்தில், கப்பல்கள் நிறைந்த கடற்கரையையுடைய காரைக்கால் என்னும் நகரமொன்றுண்டு. அதில், வைசியகுலத் தலைவனாகிய தனதத்தன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் செய்த பூர்வ புண்ணிய வசத்தினால் அவனுக்குப் புனிதவதியார் என்கிற ஒரு புத்திரி பிறந்தனள். அப்புத்திரி, தளர்நடைப் பருவங் கடந்து, மழலை வார்த்தைகளாடி நாளுக்குநாள் அதிக சிறப்புடன் வளர்ந்து வந்தாள். அவள், இளம் பருவத்திலேயே சிவபெருமானிடம் பக்தியைச் செலுத்தி வந்தனள். சிவனடியார்களைக் கண்டால் எதிர்கொண்டு வணங்குவள்.

தனதத்தன், அப்புத்திரியின் பேரழகையும், மங்கைப் பருவத்தினையுங் கண்டு, அவளை நாகப்பட்டினத்தில் இருக்கிற நிதிபதி என்பவனுடைய புத்திரனாகிய பரமதத்தனுக்கு விவாகஞ் செய்து கொடுத்தான். அவனுக்கு வேறு பிள்ளை யின்மையால் புனிதவதியை நாகப்பட்டினத்திற்குப் போகவிடாமல், தன்னுடைய வீட்டுக்கருகிலே ஒரு வீடு கட்டுவித்து, அளவிறந்த திரவியங்களையும் கொடுத்து, கணவனோடும் அதிலிருத்தினான்.

புனிதவதி அன்று முதல் இல்வாழ்க்கைக்குச் செய்யவேண்டிய செயல்கள் சிறிதும் தவறாமல் நடத்திக்கொண்டு வந்தாள். சிவனடியார்கள் வந்தால், அவர்களுக்கு நல்ல திருவமுது படைத்துச் சிவந்த பொன்னும், நவரத்தினங்களும், நல்ல வஸ்திரங்களும்



அவர்களுக்குக் கொடுத்து வருவாள்.

இப்படி நிகழுங்காலத்தில், ஒரு நாள், பரமதத்தனிடம் காரியமூலமாக வந்தவர்கள் சிலர், அவனுக்கு இரண்டு மாம்பழங்கள் கொடுத்தனர். அவன் அவைகளைப் பெற்றுக்கொண்டு அவர்கள் கருத்தை முடித்து, அப்பழங்களைத் தன் மனைவியிடத்திற் கனுப்பிவிட்டான். புனிதவதி அப்பழங்களை வாங்கிவைத்தனள். அப்போது, சிவனடியார் ஒருவர் பசியினால் வருந்தி அவ்வீட்டிற்கு வந்தனர்.

புனிதவதி அவ்வடியவருடைய நிலையைக் கண்டு, கலத்தை வைத்துச் சோறு படைத்தனள். ஆனால், அந்நேரத்திலே கறியமுது பாகம் பண்ணப்படாமையால் "சிவனடியவரே பெறுதற்கு அரிய விருந்தினராக இங்கு எழுந்தருளினார். இதைப் பார்க்கிலும் பெற வேண்டிய பேறு நமக்கு வேறு என்ன இருக்கிறது" என்று எண்ணித் தம்முடைய கணவன் அனுப்பிய மாம்பழங்கள் இரண்டினுள் ஒன்றை எடுத்துக் கொண்டுவந்து படைத்து, அவ்வடியவரைத் திருவமுது செய்வித்தனள். அடியவர், சோற்றை மாங்கனியோடு உண்டு, புனிதவதியின் செய்கையை உவந்து போயினார்.

அந்த அடியார் போயினபின்பு, பரமதத்தன் நடுப்பகலிலே வீட்டுக்கு வந்து, நீரில் ஸ்நானஞ் செய்து, போஜன அறையிற் சென்றவுடன், கற்பினையுடைய புனிதவதியும் உபசாரத்தோடு அன்னம் படைத்து, எஞ்சியிருந்த மாங்கனியைக் கொண்டுவந்து கலத்திலே வைத்தாள். பரமதத்தன், மிக இனிய அந்தக் கனியை உண்டு, அதன் இனிய சுவையினாலே திருப்தி

யடையாமல் தன் மனைவியைப் பார்த்து, "மற்றொரு கனியையுங் கொண்டுவந்து வை" என்றான்.

புனிதவதி அவ்விடத்தினின்றும் நீங்கி, மெய்யன்பர்களுக்கு உற்றவிடத்து உதவும் பரமசிவனுடைய திருவடிகளைத் தியானித்தாள். உடனே, அப்பரம சிவனுடைய திருவருளினால், தாழ்ந்த கூந்தலுடைய புனிதவதியின் திருக்கரத்தில், அதிக மதுரமாகிய ஒரு மாம்பழம் வந்திருந்தது. சிவபெருமான் கிருபையினால் கிடைக்கப்பெற்ற மாங்கனியை அவ்வுத்தமி கொண்டுவந்து, சந்தோஷத்தோடு தன் கணவனுடைய கலத்திலே படைத்தனள். அவன் அதனை உண்டு, அதன் சுவை தேவாமிர்தத்தைப் பார்க்கினும் சிறந்ததமையால் அதிக ஆச்சரியமடைந்து, "இது முன் நான் தந்த மாங்கனியன்று; இது மூவுலகங்களினும் பெறுதற்கு அரியது. இதனை நீ எங்கே பெற்றாய்?" என்று புனிதவதியைக் கேட்டான்.

அந்த வார்த்தையைக் கேட்டவுடனே புனிதவதி திடுக்கிட்டு, என்ன விடை தருவதென்றும் மயங்கினாள். தனக்குத் திருவருள் உதவிய திறத்தை வெளிப்படுத்துவது தகுதியல்லவென்று எண்ணினாள். தன் கணவனுக்கு உண்மையை மறைத்தலும் குற்றமென்று நினைத்தாள். கற்புவழியில் நிற்பவர்கள் புருஷன் சொல்லைக் காவாதிருத்தல், கற்புடைமையன்றென்று நினைத்தமையால், நிகழ்ந்தபடி சொல்வதே தகுதி என்று துணிந்தனள். ஆதலால், அந்தப் புனிதவதி தன் கணவனிடம் வந்து, "நீர் தந்த கனிகளில் ஒன்றை ஓர் அடியாருக்குக் கொடுத்துவிட்டேன். நீர் அக்கனியைக் கேட்டதால் அதற்கு நான் யாதுசெய்



வேன் என்று பயந்து, பரமசிவனைத் தியானித்துக் கொண்டு நின்றேன். அவருடைய திருவருளினால் இந்தக் கனி என்கையில் வந்திருந்தது" என்றாள்.

சிவபெருமானுடைய திருவருளால் கிடைத்ததென்று சொல்லக் கேட்ட பரமதத்தன், அவ்வார்த்தையின் உண்மையைச் சற்றும் அறியவில்லை. ஆதலால், அவன் புனிதவதியைப் பார்த்து, "நீ இப்போது கொடுத்த மாம்பழம் சிவபெருமானது அநுக்கிரகத்தால் கிடைத்ததாயின் இன்னமும் ஒரு பழத்தை அக்கடவுளின் கிருபையால் அழைத்துக் கொடு" என்றான்.

"இல்லதே னில்லவள் மாண்பானா லுள்ளதே
னில்லவள் மாணாக் கடை"

என்ற தமிழ் மறையின் வாக்கைப் பரமதத்தன் அறியான். கற்புடைய மங்கைக்கு எதுதான் கைகூடாது? அதிலும் பரமசிவன் அருளுக்குப் பாத்திரமான பேரன்புடையார்க்கு எது சித்திக்காது? புனிதவதியாள் உடனே அவ்விடத்தை விட்டுப்போய்ப் பரமசிவனைத் துதித்து, "பெருமானே! இன்னும் ஒரு மாங்கனி தந்தருளும்படி பிரார்த்திக்கிறேன். அப்படிக் கில்லையாயின் அடியேனுடைய வசனம் பொய்யாய் விடும்" என்று விண்ணப்பஞ் செய்தனள்.

அப்பொழுது, ஆண்டவருடைய திருவருளினால் ஒரு மாங்கனி புனிதவதியின் கையில் வந்திருந்தது. அவள் அதைக் கொண்டுவந்து கணவன் கையிற் கொடுக்க, அவன் ஆச்சரியப்பட்டுக் கையில் வாங்கினான். வாங்கிய பழத்தைப் பின் காணாதவனாகி மிகுந்த பயங்கொண்டு, மனந் தடுமாறி, அப்புனிதவதியைத்

தெய்வமென நினைத்து, "அவளைப் பிரிந்து வாழவேண்டும்" என்று துணிந்தான். ஆயினும், தன் கருத்தைப் பிறருக்கு வெளிப்படுத்தாமல் அப்புனிதவதியோடு தொடர்பின்றி ஒழுகிவந்தான்.

## புனர் விவாகம்

இப்படியிருக்கும் நாளிலே, பரமதத்தன் ஒரு மரக்கலஞ் செய்வித்து, அவன் செல்ல விரும்பிய தேசத்திலே விரும்பப்படுகின்ற அரும் பண்டங்களை அதனிடத்து நிறைய ஏற்றினான். பிறகு, ஒரு சுபதினத்திலே சமுத்திர ராஜனாகிய வருணனைத் தொழுதுகொண்டு, மாலுமி முதலியோரோடும் அக்கப்பலிலேறிக் குளிர்ந்த அலைகளையுடைய கடலின்மேற் போயினான். அக்கப்பல், அவன் போகவேண்டுமென்று எண்ணிய தேசத்திற்கு முறைமையாகப் போய்ச் சேர்ந்தது. அவ்விடத்தில் அவன் கொண்டுபோன சரக்குகளை விற்று, அளவில்லாத பல வளமுள்ள பண்டங்களை அவன் பெற்று, மறுபடியும் அந்த மரக்கலத்தில் ஏறி, பாண்டி நாட்டிலுள்ள ஒரு நகரத்தை அடைந்தான்.

பிறகு, பரமதத்தன் மறு தேசத்திலிருந்து கொண்டுவந்த அளவில்லாத பல பொருள்களையும் நல்ல லாபத்துடன் விற்றுவந்தான். அதனால் அவன் சம்பாதித்த மிகுந்த திரவியங்களையெல்லாம் பின்னும் பெருகும்படி செய்து, அவ்வூரிலுள்ள ஒரு வைசியனுடைய குமாரத்தியை விவாகஞ் செய்துகொண்டு, பெருஞ் செல்வத்தோடும் வாழ்ந்திருந்தான். அவனுக்கு அம்மனைவி வயிற்றிலே பேரொளியை வீசு



கின்ற விளக்குபோல ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவன், தான் கூடி வாழ்வதற்கு அஞ்சி நீக்கிய புனிதவதியென்னும் மனைவியைத் தான் வணங்கும் தெய்வமாகக் கொண்டு, அவள் பெயரையே அப் பெண்ணிற்கு இட்டான்.

பரமதத்தன் இப்படியே பாண்டி நாட்டிலுள்ள ஒரு பட்டினத்தில் வாழ்ந்துகொண்டிருந்தான். புனிதவதியோவெனில், அழிவில்லாத பெரிய மதில்கள் சூழ்ந்த மாளிகைகளையுடைய காரைக்காலில் கற்பினோடு இல்லறத்தை வழுவாது நடத்திக்கொண்டு வந்தாள்.

வாணிகத்தின் பொருட்டுச் சென்ற பரமதத்தன், பாண்டி நாட்டிலே ஒரு நகரத்தில் செல்வத்தை விருத்தி செய்துகொண்டு வாசஞ் செய்கின்றான் என்று புனிதவதியின் சுற்றத்தார் கேள்வியுற்றனர். அவர்கள் அவனிடத்திற் சிலரை அனுப்பி, அவனுடைய நிலையை உணர்ந்து, கவலையடைந்து, புனிதவதியைத் தாமே அவனிடத்திற்குக் கொண்டுபோய் விடவேண்டும் என்று தீர்மானித்தார்கள். பிறகு, அவர்கள் புனிதவதியைச் சிவிகையில் ஏற்றிக்கொண்டு சென்று, பரமதத்தன் இருக்கின்ற நகரத்திற்குச் சமீபித்து, தாம் புனிதவதியை அழைத்துவந்திருக்கும் செய்தியை அவனுக்கு ஆள் அனுப்பித் தெரிவித்தார்கள். பரமதத்தன் இதை அறிந்து அச்சங்கொண்டு, தன்னுடைய இரண்டாம் மனைவியோடும், தளர்ந்த நடையையுடைய பெண்குழந்தையோடும் புனிதவதியினிடத்திற்கு வந்து, "அடியேன் உம்முடைய கருணையினாலே சிறந்து வாழ்கின்றேன். இந்த இளங்

குழந்தைக்கு முறைமைப்படி உம்முடைய திருநாமத்தையே இட்டேன்" என்று சொல்லி, அம்மாதின் பாதங்களிலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான்.

உடனே புனிதவதி, தன் சுற்றத்தார்களிடத்திலே அச்சத்தோடும் ஒதுங்கி நின்றாள். அவர்கள் வெள்கி, பரமதத்தனை நோக்கி, "நீ உன்னுடைய மனைவியை வணங்குவதென்னை!" என்றார்கள். அதற்குப் பரமதத்தன், "நான் இவ்வுத்தமியினிடத்தில் ஒரு பெரிய அற்புதத்தைக் கண்டபடியால், இம்மாது தெய்வப் பெண்ணேயன்றி மானிடப் பெண்ணல்ல என்று துணிந்து, இக்கற்புக் கரசியைப் பிரிந்தேன். இச்சீமாட்டியை நான் தொழும் தெய்வம் என்று கொண்டமையால், நான் பெற்ற இக்குழந்தைக்குப் புனிதவதி என்னும் இம்மங்கையர்க் கரசியின் பெயரைத் தரித்தேன். அதுபற்றியே, இம்மாதின் திருவடியையும் வணங்கினேன். நீங்களும் அவ்வாறே வணங்குங்கள்" என்றான். உறவினர்களும் அது கேட்டு, "இஃது என்ன ஆச்சரியம்" என்று திகைத்து நின்றார்கள்.

## பேய்வடிவம் பெற்றது

ஈங்கிவன் குறித்த கொள்கை யிதுஇனி யிவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் றார்கள் போற்றும் பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டு மென்று பரமர்தாள் பரவி நின்றார்.

வாசனை வீசுகின்ற அழகிய கூந்தலையுடைய புனிதவதியும், பரமதத்தன் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டுப் பரமசிவனுடைய திருவடிகளை வணங்கி "எம்பெருமானே! இப்பரமதத்தன் எண்ணம் இவ்வாறிருக்கின்றது. அதனால், இனிமேல் இவன்பொருட்டுச் சுமந்திருந்த அழகு தங்கிய மாமிசப் பொதியை இங்கு ஒழித்து, ஸ்ரீகைலாசகிரியில் தேவரீரிடத்தில் சூழ்ந்து நிற்கின்ற சிவகணங்கள் போற்றுதற்குரிய பேய் வடிவை அடியேனுக்குத் தந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.



உடனே அக்கடவுளுடைய திருவருளினாலே மாமிசம் முழுவதையும் உதறி, எலும்புடம்பாக மண்ணுலகமும் விண்ணுலகமும் வணங்கும் பேய் வடிவத்தினை யடைந்தாள். அப்பொழுது, எவ்விடத்திலும் கற்பக மலர் மாரி பொழிந்தது. தேவ துந்துபிகள் ஒலித்தன. தேவர்களும் முனிவர்களும் கொண்டாடினார்கள். பூத கணங்களெல்லாம் வீரவேசத்தால் சொக்கரித்தன. புனிதவதியைச் சூழ்ந்திருந்த பல உறவினர்களும் அஞ்சி, அவ்வம்மையை நமஸ்கரித்துக்கொண்டு போய் விட்டார்கள்.

## திருக்கைலாய மடைந்தது

பிறகு, புனிதவதி தனக்குச் சிவபெருமானுடைய திருவருளினாலே கிடைத்த ஞானத்தைக் கொண்டு அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும் பாடி, திருக்கைலாசகிரிக்குப்போக விரும்பினாள். வடதிசையிலுள்ள கன்னட முதலிய எல்லாத் தேசங்களையும் மன வேகத்திலும் அதிக வேகமாக நடந்து சென்றாள். சிவபெருமான் வீற்றிருந்தருளும் ஸ்ரீகைலாச கிரியின் பக்கத்தை யடைந்தவுடன், அங்கே

காலினால் நடத்தல் தகுதியன்றென்று எண்ணினாள். ஆகலால், புனிதவதி தலையினாலே நடக்கலானாள். அப்படி ஏறும்போது, சிவபெருமானுடைய வாமபாகத்தில் வீற்றிருக்கும் உமாதேவியார் அதுகண்டு, அதிசயமடைந்து, சிவபிரானை நோக்கி, "எமது பெருமானே! தலையினால் நடந்து இக்கைலாசகிரியில் ஏறிவருகின்ற ஓர் எலும்பையுடைய பைசாசத்தின் அன்பின் பெருமை என்னே! இதன் விவரத்தை எனக்கருள் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தனள்.

பரமசிவன் அது கேட்டு "உமையவளே! இங்குத் தலையால் நடந்து வருகின்ற இவள், நம்மை விரும்பித் துதிக்கும் புனிதவதி என்னும் உத்தமி. இந்தப் பெருமை பொருந்திய பேய் வடிவத்தையும் தானே விரும்பிப் பெற்றுக்கொண்டனள்" என்றருளிச் செய்தார்.

பிறகு, புனிதவதி பரமசிவனுடைய சமீபத்திற்கு வர, அவர் அம்மங்கையைப் பார்த்து "அம்மையே" என்று, உலகமெல்லாம் உய்யும்பொருட்டு அழைத்தார். அது கேட்ட புனிதவதி, "அப்பா" என்று சொல்லிக்கொண்டு, அவருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்தாள்.

பகவான் அவ்வம்மையைப் பார்த்து, "உனக்கு வேண்டும் வரம் யாது?" என்று வினவினார். புனிதவதி மறுபடியும் அவரைப் பணிந்து நின்று, "எம் பெருமானே! அடியேனுக்கு இறவாத பேரின்ப மயமாகிய அன்பு வேண்டும். இனிப் பிறவாமை வேண்டும். பிறக்கினும் தேவரீரை ஒரு காலமும் மறவாமை வேண்டும். இதுவுமன்றி, தேவரீர் ஆனந்தத் தாண்டவம் செய்யும் பொழுது, அடியேன் மனமகிழ்ந்து பாடிக்கொண்டு,



உமது திருவடியின் கீழிருக்கவேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தனள்.

அடியார்களுக்குத் துணையாயிருந்து அருள்புரியும் சிவபெருமான், அவ்வம்மையின் வேண்டுகோளுக்கிசைந்து, "நீ தென்றிசையிலுள்ள ஆலங்காட்டிலே நம்முடைய நடனத்தைத் தரிசித்துப் பேரானந்தத்தோடு நம்மைப் பாடிக்கொண்டிரு" என்றார்.

அதுகேட்ட காரைக்காலம்மையார் பெருமானை நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு, திருவாலங்காட்டுக்குத் தலையினால் நடந்து சென்று, சுவாமியுடைய திருநடனத்தைத் தரிசித்து, மூத்த திருப்பதிகத்தைப் பாடி, சுவாமியின் தூக்கிய திருவடியின் கீழே சிவானந்தத்தை அனுபவித்துக்கொண்டு, எக்காலமும் இருக்கின்றாள்.

# மூர்த்தி நாயனார்

## பத்தியின் உறுதிப்பாடு

சீரும் சிறப்பும் பொருந்திய பாண்டிய நாடென்பது பழமையான புகழைப் பெற்று விளங்கிய நாடு. அது, சிறந்தோங்கிய மேகங்கள் தங்கிய சிகரங்களையும், மாணிக்கங்கள் நிறைந்த மாளிகைகளையும் உடையதாயிருந்தது. அன்பு பொருந்திய உள்ளத்தினையுடைய பல நன்னெறிகளில் ஒழுகுகின்ற மனிதர்கள், அதில் வசித்து வந்தார்கள். அந்நாட்டிற்கு மதுராபுரி என்பது தலைநகரம். தாமரை மலரில் வாசஞ் செய்கின்ற இலக்குமியானவள், அந்நகரில் எப்போதும் குடிகொண்டிருப்பள். பெருமை பொருந்திய இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழும் தங்கிய அப்பட்டினத்தில், உண்மைப் பொருளையுடைய தமிழ் நூல்களில் விளங்குகின்ற சிறந்த பொருளைச் சிவபிரானே தெரிவித்தருளியிருக்க, அந்த மதுரைமா நகரத்தை எதற்கு ஒப்பிட்டுக் கூற முடியும். அது சுவர்க்க, மத்திய, பாதல மென்னும் மூன்று உலகங்களிலும் சிறந்திருந்தது.

அந்த அழகு பொருந்திய மதுரைமா நகரத்தில், வைசியர் குலத்தில், மூர்த்தி நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் எல்லா ஆசைகளையும் ஒழித்து, ரிஷபத்தை வாகனமாகச் செலுத்துகின்ற சிவபெருமானுடைய திருவடிகளையே உண்மை ஆதாரமாகப்பிடித்து, அதனாலடைந்த அன்பினின்றும் நீங்காத நுட்பத்தில் சிறந்தவர். அவர், சிவபிரானது திருவடித்தாமரையே யல்லாமல் வேறொன்றையும் கொள்ளாதவர்.



அவர் அந்த ஸ்தலத்திலே வீற்றிருக்கின்ற சோமசுந்தரக் கடவுளுக்குத் தரிக்கும்பொருட்டு ஒவ்வொருநாளும் சந்தனக்காப்புக் கொடுத்துக்கொண்டு வந்தார்.

அக்காலத்தில் கருநடதேசத் தரசன், சதுரங்க சேனைகளோடும் அம்மதுரைமா நகரத்திற்கு வந்து, பாண்டியனோடு யுத்தஞ்செய்து, அவனைத் தோற்கடித்துத் தானே அந்நகரத்திற்கு அரசனானான். அவன் புறச் சமயிகளுடைய போதனா சக்தியினால் சிவனடியார்களைக் காலில் அவர்களுக்குத் துன்பஞ் செய்துவந்தான். அப்படி யிருந்தும் மூர்த்திநாயனார், தாம் செய்யுந் திருப்பணியைத் தவறாது செய்துவந்தார். அதைக் கண்ட அரசன் அவரை வெறுத்து, அவருக்குப் பல இடையூறுகளைச் செய்தான். அப்படிச்செய்தும், அவர் தமது திருப்பணியினின்றும் சிறிதும் வழுவாதிருந்தனர். அதுபற்றி அவ்வரசன் அவருக்குச் சந்தனக் கட்டைக் கிடைக்காமலிருக்கும் பொருட்டு வேண்டிய நிபந்தனைகளை ஏற்படுத்தினான். சந்தனக்கட்டை எங்கும் கிடைக்காமையால் மூர்த்திநாயனார் மனநொந்து "இப்பாண்டி நாடு, அர்ச்சமயத்தில் பிரவேசித்துச் சிவ புண்ணியத்துக்கு இடையூறு செய்கின்ற அதிபனாகிய இவ்வரசன் இறக்க, நற்சமயமாகிய சைவ சமயத்தை வளர்க்கின்ற அரசரைச் சாருங்காலம் எக்காலம்" என்று துக்கித்தார்.

அவர், பகற்கால முழுதும் சந்தனக் கட்டைக்காகத் தேடித் திரிந்து, எங்கும் கிடைக்காமையால், ஆலயத்துக்கு வந்து, என்ன செய்வதென்று சற்று யோசித்தார். "சுவாமிக்குத் தரிப்பதற்கு இன்றைக்குச் சந்தனக்கட்டைக் கிடைக்காவிட்டாலும், அக்கட்

டையைப்போலத் தேய்க்கத்தக்க கையொன்றிருக்க, நாம் ஏன் விசனப்படவேண்டும்" என்று ஒரு சந்தனக் கல்லிலே தம்முடைய முழங்கையை வைத்துத் தோலும் நரம்பும் எலும்பும் தேய்ந்து குறையும்படி தேய்த்தார்.

இப்படித் தேய்த்துக்கொண்டிருக்கையில் அவர் முழங்கையினின்றும் உதிரம் ஒழுகி நாற்புறத்திலும் பெருக வாரம்பித்தது; எலும்பினுள்ளே இருக்கும் துவாரந் திறந்து மூளை வெளியிலே வந்தது.

அப்பொழுது, "அன்பனே! நீ பத்தியினாலுறுதிப்பாட்டினால் இப்படிப்பட்ட செய்கையைச் செய்யலாமா? உனக்கு மிகுந்த துன்பத்தைச் செய்த அக்கொடுங்கோலரசன் பெற்றிருக்கின்ற இராச்சிய முழுமையும் நீயே கைக்கொண்டு, முன்பு அவனால் ஏற்பட்ட கொடுமைகளனைத்தையும் ஒழித்துச் செங்கோல் செலுத்தி, நீ செய்துவரும் சந்தனக்காப்புத் திருப்பணியைச் செய்து, பிறகு நமது சிவலோகத்தை அடைதி" என்று ஒரு அசரீரிவாக்கு உண்டாயிற்று. அதைக் கேட்டு மூர்த்திநாயனார் அஞ்சித் தன் கையைத் தேய்த்தலை ஒழிந்திருந்தார். உடனே அவருடைய கை எப்போதும்போல ஊறு நீங்கி உருவெய்தியது.

## நாயனார் அரசானது

இந்தச் சம்பவம் நடந்த அவ்விரவிலே அந்தக் கருநடராஜன் இறந்துபோனான். அவன் சிவனடியார்களுக்கு வருத்தத்தை உண்டாக்கிய அதி பாதகத்தினாலே கொடுமையாகிய நரகத்தையடைந்தான். அப்பொழுது, அந்தப் பட்டினத்திலுள்ள மந்திரிகள் ஒன்



றுகக்கூடித் தங்களாசாரத்தின்படி தகன முதலாகிய கடன்களைச் செய்து முடித்தனர். பிறகு அவர்கள் தங்கள் அரசனுக்குப் புத்திரர் இல்லாமையால்,

"பன்முறை யுயிர்க ளெல்லாம் பாலித்து ஞாலங் காப்பான்
றன்னெடுங் குடைக்கீழ்த் தத்த நெறிகளிற் சரித்து வாழ
மன்னனை யின்றி வைகு மண்ணுல கெண்ணுங் காலை
யின்னுயி ரின்றி வாழும் யாக்கையை யொக்கு மென்பார்"

என்றபடி, வேறொருவரை அரசராக நியமிக்க யோசித்தார்கள்.

"யானையைக் கண்கட்டி விடுவோம். அந்த யானை எவரை எடுத்துக்கொண்டு வருமோ அவரே இந்நாட்டுக்கு அரசராவார்" என்று அம்மந்திரிகள் நிச்சயித்துக் கொண்டார்கள். ஆனதால், அவர்கள் யானையை விதிப்படி அருச்சனை முதலியவைகளால் தொழுது "நீ இந்த நாட்டை ஆளுதற்கு வல்லமையுடைய ஒருவரை எடுத்துக்கொண்டுவா" என்று சொல்லி, வஸ்திரத்தினால் அதன் கண்களைக்கட்டி விட்டுவிட்டார்கள்.

அந்த யானை, மதுரைமாநகரத்தின் வீதிகளையெல்லாங் கடந்து, சொக்கநாத சுவாமியுடைய ஆலயத்தின் கோபுரத்துக்கு முன்னே போயிற்று. மூர்த்திநாயனார், இரவிலே தமக்குச் செவிப்புலப்பட்ட அசரீரி வாக்கினால் மனத் துயரம் நீங்கி, "நமது கடவுளாகிய பரமசிவனுக்குத் திருவுளமாகில் நாம் இந்த நாட்டை ஆளுதற்கு உடன்படுவோம்" என்று எண்ணிக்கொண்டு திருக்கோயிலின் புறத்தில் நின்றார். அங்கிருந்த பட்டத்து யானையானது மூர்த்திநாயனாருக்கு முன்னே சென்று, தாழ்ந்து அவரை எடுத்து, முதுகின்மேல் வைத்துக்கொண்டது.

பட்டத்து யானை தன் முதுகின்மேல் ஏந்தி வைக்கப் பெற்றவராகிய மூர்த்திநாயனாரை மந்திரிகள் கண்டு, அவரை நமஸ்கரித்து, ஆனந்தமடைந்தனர். அப்பொழுது, பிரவாகித்தெழுகின்ற சமுத்திரத்தைப் போல், சந்தோஷத்தினாலுண்டாகிய ஆரவாரமானது அவ்வூரில் மிகுதியாக உண்டாயிற்று. மூர்த்திநாயனாரைச் சுற்றிலும் தாரைகள் பேரிகைகளோடு சங்கவாத்தியங்களும் ஒலித்தன.

பிறகு, மந்திரிமார்கள் யானையினது முதுகினின்றும் மூர்த்திநாயனாரை இறக்கித் தேன்பொருந்திய மலர் மாலைகளும், பிரகாசம் பொருந்திய இரத்தின மாலைகளும் சூழ்ந்திருக்கும் முடிசூட்டு மண்டபத்திற்குக் கொண்டுபோனார்கள். அங்கே அவர்கள் மூர்த்திநாயனாரைச் சிங்காதனத்தில் எழுந்தருளச் செய்து, ஒப்பற்ற சந்திரவட்டக் குடைக்கீழ் பட்டாபிஷேகத்துக்குரிய மங்கல கிருத்தியங்களைச் செய்யத் தொடங்கினார்கள்.

சாஸ்திர பரிசயமுள்ள பெரியோர்கள், மூர்த்திநாயனாருக்கெதிரில் மங்களகரமான யாகாக்கினியை வளர்த்தினார்கள்; முப்புரிநூலை நெருங்கச் சுற்றிய பொற் கலசங்களிலும், குடங்களிலும் நிறைக்கப்பட்ட கங்கை முதலிய தீர்த்தங்களை மந்திரவிதிப்படி நிறுத்தினார்கள்; பிறகு, அவருக்குச் செய்யவேண்டிய மங்கல கிருத்தியங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள்.

அப்பொழுது, மூர்த்திநாயனார் மந்திரி முதலானவர்களைப் பார்த்து, "சைவசமயம் விருத்தியாவதாயின் நான் இந்நாட்டை ஆளுதற்கு உடன்படுவேன்" என்றார். அதைக் கேட்ட மந்திரிமார்களும், பிறரும்



அவரை வணங்கி நின்று, "சுவாமி! தேவரீர் எவ்விதம் கட்டளையிடுகின்றீரோ அவ்விதம் செய்வதேயல்லாமல் வேறொன்றும் செய்யத் துணியோம்" என்று சொன்னார்கள். அதற்கு மூர்த்திநாயனார், "அங்ஙனமாயின், யான் இவ்வுலகத்தை அரசாட்சி செய்வதற்கு உரியவனானால், எனக்கு விபூதியே அபிஷேகத்திரவியமாகவும், சிவபெருமானது அடியவனென்று தெரிந்துகொள்வதற்குக் குறியாகவுள்ள ருத்திராக்ஷமாலையே திருவாபரணங்களாகவும், சடைமுடியே என் தலையில் சூடும் கிரீடமாகவும் இருக்கக்கடவது" என்றார்.

இவர் சொல்லிய வார்த்தையைக் கேட்டவுடனே கல்வியிற் சிறந்த பெரியோர்களும், நீதிநூலை யறிந்த மந்திரிமார்களும்,

"அறனறிந் தான்றமைந்த சொல்லா னெஞ்ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை".

என்னுந் தமிழ்மறையை யோர்ந்து "தேவரீர் அருளிச் செய்தபடியே ஆகுக" என்று சொல்லி, மகுடாபிஷேகத்துக்கு வேண்டிய செய்கைகளைச் செய்தார்கள்.

பிறகு, மூர்த்திநாயனார் சடைமுடி தரித்து, மங்கல வாத்தியங்களின் ஓசை, பக்கங்களிலெல்லாம் முழங்கிவர, ஆலயத்திற் சென்று சோமசுந்தரக் கடவுளை வணங்கிக்கொண்டு, யானையின்மேலேறி, நீண்ட வீதியின்வழியாகப் பவனி வந்தார். அவர், இராஜமாளிகையைச் சேர்ந்தவுடன் யானையினின்றும் கீழே இறங்கி, அரசாட்சி மண்டபத்தில் இரத்தின சிங்காசனத்தில், இரு பக்கமும் சாமரம் வீச, அழகிய தவளச் சந்திர நிழலிலே வீற்றிருந்து அரசியற்றலானார்.

அப்போது, தரும நெறியில் ஒழுகுகின்ற மந்திரி

மார்கள், மூர்த்தி நாயனாரின் குறிப்பின் வழியே நடந்து வந்தனர். கலகஞ் செய்துகொண் டிருந்த புறச்சமயி களின் கட்டுப்பாடுகள் ஒழிந்து விளங்கின. திரு வெண்ணீற்றைத் தரிக்கும் நல்லொழுக்கம் நீடிப்ப தாயிற்று. வைதிக மார்க்கமானது எவ்விடத்திலும் பரவா நின்றது.

மூர்த்தி நாயனார், சைவ சமயமே எங்கும் விளங்க வும், துறவறம் பூண்டு, ஐம்புலன்களைச் செயித்து, நெடுங்காலம் விபூதி, உருத்திராக்ஷம், சடைமுடி என் கின்ற மூன்றினாலும் அரசாண்டு, பின் எம்பெருமா னுடைய வீரக் கழலை யணிந்த சிவந்த திருவடியை யடைந்தார்.

# மெய்ப்பொரு ணாயனார்

## வஞ்சகம்

சேதி நாட்டிலே, மிகச் சிறப்புற்றோங்கிய திருக் கோவலூரிலே, மலையமா நாட்டாருக்கு அரச ரொருவர் இருந்தார். அவர், வேதத்திற் சொல்லப் பட்ட நன்மார்க்கத்தின் உண்மையை நன்றா யறிந்தவர். சிவபெருமானது அடியார்களிடத்தில் அவர் மிகுந்த அன்புகூர்ந்து, அவர்களுடைய திருவுள்ளக் குறிப்பை யறிந்து அவர்களுக்குப் பணிவிடை செய்கின்றவர். அரசாட்சிக் குரிய வழியினின்றும் அவர் என்றும் பிச காதவர். தரும வழியைத் தவறாமல் பாதுகாத்தவரில் இவர் சிரேஷ்டர். தமது மலையை யொத்த பெரிய புஜபலத்தின் மிகுதியால் பகைவர்களை வென்று கீர்த் தியை ஓங்கச் செய்தவர். அவர் சொன்ன சொல் தவறா மல் நடக்கின்ற நீதிமிகுந்த நற்குணத்தில் சிறந்தவர். அவர், சிவபெருமானது அடியார்களின் திருவேடத் தையே மெய்ப் பொருளென்று சிந்திக்குங் காரணத்தி னால் அவருக்கு மெய்ப்பொரு ணாயனார் என்ற பெயர் விளங்கி வந்தது.

அவர், சிவபெருமான் எழுந்தருளி யிருக்கின்ற திருக்கோயில்களி லெல்லாம் பூசைகளைக் குறைவில்லா மல் நடத்திவந்தார். அக்கோயில்களின் திருவிழாச் சிறப்பு, என்றும் ஓங்கும் பொருட்டு அவர் பாது காத்துவந்தார். சிவபெருமானது அடியார்களின் திரு வடிகளை யல்லாமல், அவர் வேறு துணையைக் கனவி லும் எண்ணார். தாம் தேடிய பொன்னும் பொருளும் சிவனடியார்களுக்கே உரியனவென்று அவர் மதித்து

வந்தார். அவ்வடியார்களுக்கு வேண்டிய பொருள்களை அவர் கொடுத்தலையே பெருநெறியாகக் கொண்டிருந்தார்.

இவ்விதமாக மெய்ப்பொருணயனார் சிவனடியார்களுக்கு வழிபாடு செய்து, நீதியோடு அரசாட்சி செய்துவருங் காலத்தில், முத்தநாதன் என்கின்ற ஓரரசன் அவரை வெல்ல விரும்பினான். ஆனால், அவன் யுத்தசன்னத்தனாகி, அவரோடு போர் செய்து, யானை, குதிரை, தேர், காலாள் என்கின்ற சேனைகளைப் பலமுறை இழந்து, தோற்று, அவமானப்பட்டுப் போனான்.

பிறகு, முத்தநாதன், அவரை யுத்தத்திலே ஜயிக்கமாட்டாதவனாகி, "நாம் விபூதி ருத்திராக்ஷந் தரித்துச் சிவனடியார் வேடங்கொண்டு அவ்வரசனிடஞ் சென்றால், நம்மைக் காவலாளரொருவரும் தீங்கு செய்யாமல் தடையின்றி உள்ளே விடுவார்கள். அப்பொழுது, நாம் வஞ்சகமாக மறைத்து வைத்திருக்கும் உடைவாளினால் அவரைக் குத்திக் கொலை செய்துவிடலாம். பிறகு, நமது வேடத்தைக் கண்டு யாவரும் அஞ்சி ஒரு தீங்கும் செய்யாமல் நம்மை அனுப்பிவிடுவார்கள்" என்று யோசித்தான்.

## நாயனாரைக் குத்திக் கொன்றது

"மெய்யெலா நீறு பூசி வேணிகண் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி யேந்தி
மைபொதி விளக்கே யென்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்த்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்த நாதன்."

முத்தநாதன் சரீர முழுதிலும் விபூதி தரித்து, சடைகளைச் சேர்த்துக் கட்டி, புத்தகக் கவளிபோலத் தோன்றுகின்ற ஆயுதத்தை மறைத்து வைத்திருக்கின்ற ஒரு கவளியை எடுத்துக்கொண்டு பிரயாணப்பட்டான்.



பிரகாசம் பொருந்திய வெள்ளைக் கொடிகள் ஆடுகின்ற பெரிய வீதிகளையுடைய திருக்கோவலூரில் அவன் பிரவேசித்து, மெய்ப்பொருணயனாரது அரண்மனையின் வாயிலையடைந்தான். அப்பொழுது, வாயிற்காவலர்கள் அவனைக் கண்டு, தங்கள் கைகளைக் குவித்து வணங்கி நின்று, "சுவாமிகளே! உள்ளே எழுந்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். முத்தநாதன், இனித் தன்காரியம் முடியுமென்னும் மகிழ்ச்சியினால் அவ்வாயிலைக் கடந்தான். அப்படியே மற்ற வாயில்களையுங் கடந்து சென்று, இறுதி வாயிலை அடைந்தான்.

அப்பொழுது, மெய்ப்பொருணயனாருக்கு ஒப்பற்ற உயிர்க் காவலாய்த் தனியே நின்ற தத்தன் என்பவன் அவனைப் பார்த்து, "இப்பொழுது எமது அரசர் பெருமான் நித்திரை செய்கின்றார். நீர் சமயமறிந்து போகவேண்டும். இப்போது போகலாகாது" என்றான்.

அதைக் கேட்ட முத்தநாதன், "நான் அவருக்குச் சாஸ்திரோபதேசஞ் செய்யப் போகின்றபடியால், நீ என்னைத் தடுக்கலாகாது" என்று சொல்லி, உள்ளே புகுந்தான். அங்கே மெய்ப்பொருணயனார் கட்டிலிலே நித்திரை செய்ய, அவர் மனைவியார் பக்கத்திலிருக்க அவன் கண்டும், சமீபத்திலே சென்றான்.

அப்பொழுது, மனைவியார் சீக்கிரம் எழுந்து, மெய்ப்பொருணயனாரை எழுப்ப, அவர் விழித்தெழுந்து, "சுவாமி! தேவரீர் இங்கே எழுந்தருளு

தற்குக் காரணம் யாது?" என்று வினவினார். அதற்கு முத்தநாதன், "உங்கள் கடவுளாகிய பரமசிவன் ஆதி காலத்திலே அருளிச்செய்த சைவாகமங்களுள், எவ்விடத்துங் காணப்படாத ஓர் ஆகமத்தை உமக்குப் போதிக்கும்படி கொண்டுவந்தேன்" என்றான்.

மெய்ப்பொருணாயனார் அதைக் கேட்டு, "இதைப் பார்க்கிலும் உயர்ந்த பேறு அடியேனுக்கு உண்டோ? சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்ட குற்றமற்ற இந்தச் சிவாகம சாஸ்திரத்தை வாசித்து, அதன் பொருளை அடியேனுக்கு விளங்கும்படி அருளிச் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அதற்கு முத்தநாதன், "அப்படியானால் பட்டத்தரசி இல்லாமல் நீரும் நானும் வேறிடத்திற் றனித்திருக்க வேண்டும்" என்றான்.

உடனே மெய்ப்பொருணாயனார், தம்முடைய மனைவியாரை அந்தப்புரத்துக்குப் போம்படி செய்து, பொய் வேடங்கொண்ட முத்தநாதனை ஆசனத்தின் மேல் இருத்தித் தாம் கீழே இருந்துகொண்டு, "இனி அருளிச்செய்யும்" என்றார்.

இதைக் கேட்ட முத்தநாதன், தன் கையில் இருந்த வஞ்சகக் கவளிகையை மடியின் மேலே வைத்து, புத்தகம் அவிழ்ப்பவன் போல அவிழ்த்து, மெய்ப்பொருணாயனார் வணங்கும்பொழுது, அக்கவளிகையில் மறைத்து வைத்திருந்த உடைவாளை எடுத்து அவரைக் குத்தினான். அந்தோ! சிவவேடமே மெய்ப்பொருளென்று கருதியிருந்த நாயனார் அவனை வணங்கினார்.

முத்தநாதன், அரசனிருக்கும் அறையிற் புகுந்த பொழுது, அவருக்கு என்ன அபாயம் சம்பவிக்குமோ



என்று கலவரப்பட்டுக்கொண்டிருந்த தத்தன் சடுதியிலே உள்ளே புகுந்து, தன் கையிலிருந்த வாளாயுதத்தினால் அப்பகைவனை வெட்டப் போனான். அதற்குமுன் முத்தநாதனால் குத்தப்பட்டு, இரத்தஞ் சொரிய விழப்போகின்ற மெய்ப்பொருணாயனார், பூமியில் விழும்பொழுது தமது நீளமாகிய கையை நீட்டி, "தத்தனே! இவர் சிவனடியார்; நமது பெரியோர். ஆகலால், இவருக்கு ஒரு தீங்குஞ் செய்யாதே" என்று தடுத்து விழுந்தார்.

> "ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
> பொன்றுந் துணையும் புகழ்."

என்றபடி, இவருடைய காருண்ய மொழியைக் கேட்ட தத்தன் அவரைத் தலையினால் வணங்கி, அவர் சிரத்தைக் கையினால் தாங்கிக்கொண்டு, "அடியேன் செய்ய வேண்டிய குற்றேவல் யாது?" என்று கேட்க, மெய்ப்பொருணாயனார் தத்தனைப் பார்த்து, "நமது சிவபெருமானுடைய அடியவராகிய இவர் போகும்பொழுது, இடைவழியில் காவலாளர் ஒருவரும் இடையூறு செய்யாமலிருக்கும்படி நீ இவருக்குத் துணையாக இருந்து அழைத்துக்கொண்டு போய் விட்டுவா" என்று சொன்னார்.

தத்தன், அரசன் கட்டளையைச் சிரமேற் றாங்கி முத்தநாதனை வெளியில் அழைத்துக்கொண்டு போகையில், அப்பாதகன் அரண்மனையில் செய்த கொடுஞ் செய்கையை அறிந்தவர்களெல்லாரும், "நமது அரசனுக்கு உயிர்ச்சேதமாகிய தீமையைச் செய்த பொய்யாகிய தவவேடத்தையுடைய இவனைக் கொல்லாது

விடுவதில்லை" என்று சொல்லி, அவரைச் சூழ்ந்து கொண்டனர்.

அப்பொழுது, தத்தன் அவர்களெல்லாரையும் அருகில் வரவொட்டாமல் தடுத்து, "இந்தச் சிவபத்தருக்கு ஒருவரும் இடையூறு செய்யாதபடி இவரை அழைத்துக்கொண்டுபோய் விடும் பொருட்டு நமது அரசனே எனக்குக் கட்டளையிட் டிருக்கின்றார்" என்றான். அவர்களெல்லாரும் அதைக் கேட்டவுடனே பயந்து, அவ்விடத்தினின்றும் நீங்கிவிட்டார்கள்.

### உபகாரம் வீண்போகாது

முத்தநாதனைக் கொல்லவந்தவர்களெல்லாரும் அகன்றதன் பின், தத்தன், கூரிய வாளாயுதத்தைத் தன் கையில் ஏந்தியவண்ணம் முத்தநாதனை அழைத்துக்கொண்டு போய் மனிதர் சஞ்சரிக்காத காட்டை யடைந்தான். அவ்விடத்தினின்றும் முத்தநாதனை அனுப்பிவிட்டுத் தத்தன் தன்னுடைய பட்டணத்திற்குத் திரும்பி வந்தான்.

சிவவேடங்கொண்ட முத்தநாதனை யாதொரு இடையூறு வாராமல் அழைத்துக்கொண்டு போய்விட்ட சமாசாரத்தைக் கேட்பதற்கு விரும்பி முன்னமேயே நீங்கிவிடக்கூடிய உயிரைத் தாங்கிக்கொண் டிருக்கும் மெய்ப்பொருளையனாருக்கு முன்சென்று, வணங்கி நின்று, "எமது இறைவனே! வஞ்சனையாகிய தவ வேடத்தைத் தாங்கி, இவ்விதக் கொடுங்காரியஞ்செய்தவனுக்கு யாதொரு இடையூறுமில்லாமல் அடியேன் அழைத்துக்கொண்டுபோய் விட்டு வந்தேன்" என்றான்.



மெய்ப்பொருளையனார் அதைக் கேட்டு, "ஐயனே! இன்றைக்கு நீ செய்த உபகாரத்தைப் போல வேறார் செய்ய வல்லவர்" என்று மகிழ்ந்தார். பிறகு, அரசாட்சி செய்வதற்குரிய புத்திரர், சகோதரர்களையும், தமக்கு நேரிட்ட ஆபத்தைக்குறித்து மனம் வருந்துகின்ற மந்திரி முதலானவர்களையும் அருகி லழைத்து, "நீங்கள் சைவாகம விதிப்படி விபூதிமேல் வைத்த அன்பைப் பாதுகாக்கக் கடவீர்" என்று போதித்து, கனகசபையில் ஆனந்தத் தாண்டவம் செய்தருளுகின்ற சபாநாதரைத் தியானம் பண்ணினார்.

அப்பொழுது சபாநாதர் அவருக்கு முன்னே தோன்றி, அவரைச் சிறந்த சுவர்க்கலோகத்தில் வாழ்கின்ற தேவர்களுக்கும் எட்டாத திருவருள் உருவமாகிய திருவடி நிழலை யடையும்படி ஆட்கொண்டு, தம்மை இடைவிடாமல் தொழுதுகொண் டிருக்கின்ற சிறந்த பேற்றைக் கொடுத்தருளினார்.

# சேரமான் பெருமாணாயனார்

## அரசகோலங் கொண்டது

பூமகள் பொருந்தி வீற்றிருக்கின்ற மலைநாட்டிலே, கொடுங்கோளூர் என்னும் நகரமொன் றிருந்தது. அதில், பல புகழையுடைய பெரியோர்கள் வாழ்ந்து வந்தனர். திருவஞ்சைக்கள மென்னும் ஒரு சிவாலயமும் அதில் உண்டு. அந்நகரைச் சேரர்குல அரசர்கள் செங்கோல்முறை வழுவாமல் அரசாண்டு வந்தனர்.

வேதியர்கள் ஓதுகின்ற பல சாஸ்திரங்களி னொலியும், யானைக் கன்றுகளைப் பழக்கி வசமாக்குதலா லுண்டாகும் ஒலியும், சோலைகளினின்றும் எழுகின்ற மெல்லிய வண்டுகளின் ஒலியும், குதிரைகளின் காலடிச் சப்தத்தால் உண்டாகும் ஒலியும், பாடல் ஆடல் செய்யுமிடங்களில் உண்டாகும் சங்கீத ஒலியும் சமுத்திரத்தின் பேரொலியை யடக்கும் சிறப்பினையுடையது அந்நகரம்.

வேதமார்க்கத்தின் பிரமாணம் சிறிதும் தவறுதலில்லாத ஒழுக்கத்தினை யுடைய பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ரென்னும் நால்வகைச் சாதியாரும் அப்பதியில் வாழ்ந்து வந்தனர். அங்கு வீடுகள்தோறும் செல்வங்கள் நிறைந்திருந்தன; சாலைகள்தோறும் தர்மங்கள் விருத்தியடைந்து வந்தன. திருமடங்கள் தோறும் சைவசமய மேன்மைகள் சொல்லப்பட்டு வந்தன.

இவ்விதச் சிறப்புவாய்ந்த அப்பட்டினத்தில், பெருமாக்கோதையார் என்பவர் ஒருவர் இருந்தார். இவர்,



யானைப் படையை யுடைய சேரர் குலத்தினரும், உலகத்தாரும் செய்த பெருந் தவத்தினால் அவதரித்தவர்.

இவர், சிவபெருமானுடைய திருவடியை அடைதல் வேண்டுமெனக் கருதி, இராஜ புத்திரருக்குரிய தொழில்களை அறவே விடுத்தனர். திருவஞ்சைக்களமென்னும் சிவஸ்தலத்தை அவர் அடைந்து, ஈசன் பணிவிடையில் ஈடுபட்டிருந்தார். அவர் தினந்தோறும் பிராம முகூர்த்தத்தில் எழுந்து, ஸ்நானம்பண்ணி, அநுட்டானஞ் செய்துகொண்டு வந்தார். திருநந்தனவனம் வைத்தல், பூக்கள் பறித்தல், திருமாலைகள் கட்டல், திருவலகிடல், திருமெழுகிடல், திருப்பாட்டுப் பாடல் முதலிய திருத்தொண்டுகளை அவர் செய்வாராயினர்.

இப்படி யிருக்கையில், அப்போது அரசாண்டு வந்த செங்கோற்பொறையன் என்னும் சேரமகாராஜனுக்கு, இது நித்தியம், இஃது அநித்தியம் என்னும் பகுத்தறிவு உண்டாயிற்று. அதனால் அவ்வரசனுக்கு, இம்மை மறுமை இன்பங்களில் வெறுப்பும், பிறவித் துன்பங்களும், அவன் பூர்வம் செய்த புண்ணிய விசேஷத்தால் தோன்றின. அவை தோன்றவே, அவனுக்கு நித்தியமாகிய மோக்ஷத்திலே ஆசை உண்டாயிற்று. அதனால் அவன், பிறவிக்குக் காரணமாகிய வீண் முயற்சிகளை விட்டு, மோக்ஷத்திற்குக் காரணமாகிய யோக முயற்சியைத் தேட முயன்றான். சில நாளில் அவன் அரசியற்றுதலி னின்றும் நீங்கித் தவஞ் செய்யும் பொருட்டுத் தபோவனத்தை அடைந்தான்.

அவ்வரச சமஸ்தானத்தின் மந்திரிப் பிரதானிகள், அரசன் இல்லாமையைப்பற்றிச் சிலநாள் ஆலோ-

சித்துத் தெளிந்து, திருவஞ்சைக்களத்திலே திருத்தொண்டு செய்துகொண்டிருக்கின்ற சேரர் மரபிற்கு முதல்வராகிய பெருமாக்கோதையாரை நாடிச் சென்றனர். பிறகு, அவ்விடத்தில் அவரை அவர்கள் கண்டவுடன் வணங்கி நின்று, "இம்மலை நாட்டை நீரே முடிசூடி அரசியற்றல் வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்துகொண்டனர்.

பெருமாக்கோதையார் அது கேட்டு, "இவர்கள் சொல்லும் வார்த்தை இன்பமயமாகிய திருத்தொண்டுக்கு இடையூறாயிருக்கின்றது. சிவபத்தியிலே சிறிதும் வழுவாது அரசியற்றுதற்குத் திருவருள் உளதாயின், இச்செய்தியைச் சிவபெருமானுக்கு விண்ணப்பஞ் செய்து அறிவேன்" என்று, ஆலயத்தினுள்ளே பிரவேசித்துச் சிவபெருமானை வணங்கி விண்ணப்பஞ் செய்து நின்றார். அச்சிவபிரானுடைய திருவருளினாலே அவரிடத்தே வைத்த பத்தி வழுவாது அரசியற்றுஞ் சத்தியையும், யாரும் யாவும் கூறுகின்றவைகளனைத்தையும் அறியும் அறிவையும், நாசமில்லாத மகா பராக்கிரமத்தையும், பெருங் கொடையையும், அரசருக்கு உரிய படை வாகன முதலிய எல்லாவற்றையும் அவர் கைவரப்பெற்றனர். பிறகு, அவர் சிவபிரானை நமஸ்கரித்துக்கொண்டு வெளியே வந்து, மந்திரிமார்களுடைய வேண்டுகோளுக்கு உடன்பட்டார். மந்திரிமார்கள் பெருங்களிப்புடையவர்களாய் அவரை நமஸ்கரித்தார்கள்.

### பத்தியின் சிறப்பு

பிறகு பெருமாக்கோதையார், ஒரு சுபதினத்திலே சுபமுகூர்த்தத்திலே முடிசூடி, சிவாலயத்தை



வலஞ் செய்து, சிவபிரானைத் தொழுதார். தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவர்களாலும், கள்வராலும், பிற உயிர்களாலும் பயமுண்டாகாமல் அறிந்து காத்தல் என்னும் ஐவகை அரசநிலையை * அவர் உணர்ந்து, யானைமேற் கொண்டு, கொற்றக் குடையும், வெண்சாமரமும் உரியவர்கள் தாங்க, மகா அலங்காரத்தோடு நகரிவலஞ் செய்தார்.

அப்போது, ஒரு வண்ணான் தன் தோளிலே உவர்ப்பொதி சுமந்துகொண்டு அரசனுக்கெதிரே வந்துகொண்டிருந்தான். அவனுடைய சரீரம் மழையினாலே கரைந்த உவர் ஊறப்பெற்று, வெளுத்திருந்தனால், விபூதியை உத்தூளனஞ் செய்த சிவனடியாரது திருவேடம்போலப் பெருமாக் கோதையாருக்குக் காணப்பட்டதால், அவர் உடனே யானையினின்றும் இறங்கி, விரைந்து சென்று அவனை வணங்கினார்.

---

* (1) அரசன்; தன் குடிகளிடத்துக் குடிவிறையை மிகுதியாக வருத்திக் கொள்ளாமல், கொள்ளுமாறு கொண்டு செங்கோல் செலுத்திப் பாதுகாத்தல் (2) அமைச்சர் முதலாயினோர், அரசன் உத்தரவைப் பெற்று அதிகாரஞ் செலுத்துகின்றோமென்னும் செருக்கால் குடிகளுக்கு ஒரு தீங்கும் வருவிக்காமல், தன் பரிசனத்தாரும் தன்போலவே ஒழுகும்படி செய்து காத்தல் (3) பகையரசர்கள் தன் தேசத்திற் சென்று குடிகளை வருத்திக் கொள்ளையிட்டுக்கொண்டு போகாமல் தக்க அரண்களமைத்துப் பாதுகாத்தல் (4) கள்வர்கள், கன்னமிடுதல் வழிபறித்தல் முதலிய கொடுஞ் செய்கைகளால் குடிகளுக்குத் தீங்குண்டாகாமல் தக்க ஏற்பாடுகளைச் செய்து, தண்ட முதலியவற்றால் தடுத்துப் பாதுகாத்தல் (5) புலி, கரடி முதலிய விலங்கினங்கள் நாட்டிற் சென்று குடிகளை வருத்திச் செல்லாமல் அவற்றை வேட்டையாடி யழித்துப் பாதுகாத்தல்.

அது கண்டவுடனே, அவ்வண்ணான் மனங்கலங்கி, அவருக்கு முன்வந்து விழுந்து நமஸ்கரித்து, "பிரபு! அடியேனை யார் என்று கொண்டீர்? அடியேன் அடிவண்ணான்" என்றான். சேரமான் பெருமாணாயனார் அவனைப் பார்த்து, "அடியேன் அடிச்சேரன். தேவரீர் திருநீற்று வேடத்தை நினைப்பித்தீர். மனம் வருந்தாமற் செல்லும்" என்று சொல்லியருளினார். அவரைச் சூழ்ந்திருந்த மந்திரிமார்கள் முதலாயினோ ரெல்லாரும் சேரமான் பெருமாணாயனாருடைய சங்கம பத்தி மிகுதியைக் கண்டு, ஆச்சரியமடைந்து, சிரசின் மேல் அஞ்சலிசெய்து தோத்திரம் பண்ணினார்கள்.

சேரமான் பெருமாணாயனார் மறுபடியும் யானையின்மேலேறி, நகரியை வலங்கொண்டு மாளிகை வாயிலை யடைந்தார். பிறகு, யானையினின்றும் இறங்கி, மண்டபத்தை யடைந்து, இரத்தின சிங்காசனத்திலமர்ந்து, வெண்கொற்றக் குடை நிழற்ற, வெண்சாமரம் வீச, அரசர்கள் மலர் தூவி வணங்கித் துதிக்க அரசைக் கைக்கொண்டார்.

இங்ஙனமிருந்து, மனுநீதி நெறியை நடத்தி, மண்ணிறந்த அரசர்கள் திறை கொணர, அகத்தும் புறத்தும் பகையைப் பற்றறுத்துச் சைவசமயம் அபிவிருத்தியாகும்படி அரசியற்றி வந்தார்.

அவர், சிற்றம்பலத்தில் ஆனந்தத்தாண்டவம் செய்தருளும் சபாநாயகருடைய திருவடித் தாமரைகளே தாம் தேடும் பொருளென்றும், தமக்குரிய பெருந்துணையு மென்றும் தெளிந்த மெய்யறிவைக் கொண்டனர். அதனால் அவர், அப்பெருமானுடைய திருவடிகளை மிகுந்த அன்பினோடு சைவாகம விதிப்படி எந்நா



ளும் பூசித்து வந்தார். அவருடைய பூசையை ஏற்றுக் கொண்ட சபாநாயகர் அவரைத் தமது திருச்சிலம்பொலியைக் கேட்பிக்கச் செய்தனர். சேரமான் பெருமாணாயனார், சிவனடியார்களுக்கும் தரித்திரர்களுக்கும் கனகமாரி பொழிந்து, பரமசிவனுக்கு உரிய பல யாகங்களைச் செய்து வந்தார்.

### பாணபத்திரர் செல்வம்பெற்றது

இப்படி யிருக்கையில், பாணபத்திரர் என்னும் ஒருவர் பாண்டிநாட்டிலே மதுரையில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக்கடவுளைத் தமது அன்பினோடு இசைப்பாட்டினாலே துதித்து வந்தார். அவருக்கு அப்பெருமான் பெருஞ் செல்வத்தைக் கொடுத்தருளுதற்குத் திருவுளங்கொண்டு, இரவில் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "உனக்குப் பொன் இரத்தினம் பட்டாடை முதலியவைகளை நீ வேண்டியபடி குறைவின்றித் தரும்பொருட்டு, நம்மேல் எப்பொழுதும் அன்புடையனாகிய சேரனுக்கு ஓலை தருவோம். நீ விரைவில் அவனிடம் செல்" என்று அருளிச்செய்து.

"மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
றன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே"

என்னுந் திருப்பாசுரத்தை வரைந்த திருமுகத்தைக் கொடுத்தருளினார்.

பாணபத்திரர் அத்திருமுகத்தைத் தமது சிர மேற்கொண்டு, அப்பொழுதே புறப்பட்டு, மலை நாட்டை வந்தடைந்து, உயர்ந்த மதிலையுடைய கொடுங் கோளூரில் சென்று, சேரமான் பெருமாணாயனாருக்கு அறிவித்தார். உடனே சேரமான் பெருமாணாயனார் தம் சிரசின்மேல் கைகுவித்து, அன்பினோடுங் கண்ணீர் சொரிய மாளிகைக்குப் புறத்தில் வந்து, பாணபத்திரரை வணங்கி, "சுவாமி! தேவரீர் அடியேனை ஒரு பொருளென மதித்துத் திருமுகங் கொண்டுவந்தீரே. இது நான் பூர்வம் செய்த தவப் பயனே போலும்" என்றார்.

அப்பொழுது பாணபத்திரர், சிவபிரான் கொடுத்தருளிய திருமுகத்தைச் சேரமான் பெருமாணாயனார் கையிலே கொடுத்து வணங்கினார். அவர் அதனைப் பெற்று, முடிமேற்கொண்டு கூத்தாடினார். அவர் வாயினின்றும் மொழிகுழற, ஆனந்த பரவசராய்ப் பூமியின்மேல் பலமுறை விழுந்தார். அத்திருமுகத்தைப் பலதரம் தொழுது, அதனை வாசித்து, எம்பெருமானுடைய திருவருளைத் துதித்தனர். பிறகு மாளிகையினுள்ளே புகுந்து மந்திரிமார்களைப் பார்த்து, "நம்முடைய மாளிகையிலிருக்கின்ற பண்டார முழுதையும் பொதி செய்து கொண்டுவாருங்கள்" என்று ஆஞ்ஞாபித்தனர். அவர்கள் அப்படியே கொண்டு வந்து அரசன்முன் வைத்து வணங்கினார்கள்.

சேரமான் பெருமாணாயனார் அளவற்ற அத்திரவியங்களை வரிசையாக வைத்துப் பாணபத்திரருக்குக்



காட்டி "சுவாமி! இப்பொருள்களையும், யானை, குதிரை, தேர், காலாள் முதலியவற்றையும், அடியேன் பாது காத்துவந்த அரசாட்சியையும் தேவரீர் கைக்கொண் டருளவேண்டும்" என்றார்.

பாணபத்திரர், தமக்குச் சேரமான் பெருமாணாயனார் காட்டிய தனங்களெல்லாவற்றையும் கண்டு மகிழ்ந்து, அவருடைய அன்புக்கு அதிசயித்து, அவரை நோக்கி; "அடியேன் இச்செல்வங்களெல்லாவற்றையும் கைக்கொள்ள முடியாது. எனக்கு வேண்டுமளவுமாத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே சிவாஞ்ஞை. அரசையும், அதற்கு உரியனவற்றையும் தேவரீரே கைக்கொண்டருளும்" என்று சொல்லி வணங்கினார்.

சேரமான் பெருமாணாயனார் அதுகேட்டுச் சிவாஞ்ஞையை மறுத்தற்கு அஞ்சி, அப்பாணபத்திரருடைய வேண்டுகோளுக்கு உடன்பட்டார். பிறகு, பாணபத்திரர், தனங்களனைத்தையும் பூமி நெளியும்படி தம்முடனெடுத்துக்கொண்டு, யானை குதிரை முதலியவற்றுள் தமக்கு வேண்டுவனவற்றையும் கைக்கொண்டு, ஒரு யானைமேல் ஏறிக்கொண்டு போனார். சேரமான் பெருமாணாயனார், பாணபத்திரருக்குப்பின் கண்களில் நீர் சொரிய கைகளால் தொழுதவண்ணம் சென்றார். பாணபத்திரர் நகர்ப்புறம் சென்றவுடனே, அவரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு போய் மதுரையை அடைந்தார்.

### மார்பிலே உடைவாளை நாட்டியது

ஒருநாள் சேரமான் பெருமாணாயனார், பூஜாந் தத்திலே வழக்கப்படி சபாநாயகருடைய திருச்சிலம்

பொலி, தமக்குக் கேளாதொழிந்ததால் மிகவும் மனம் வாடி வருந்தினார். "அடியேன் யாது பிழை செய்தேனோ?" என்று சற்றுநேரம் யோசித்து, "இனி இந்தத் தேகத்தினால் அடையும்வேறு இன்பம் யாது?" என்று தமது உடைவாளை உருவித் தமது மார்பிலே நாட்டினார். அப்போது, எம்பெருமான் அதிவிரைவில் தமது திருச்சிலம்பொலியைக் கேட்பித்தார். உடனே நாயனார் மார்பில் நாட்டிய உடைவாளை அகற்றி, "எம் பெருமானே! இத்திருவருளை முன் செய்யாதொழிந்தது என்னை?" என்றார்.

அப்பொழுது சபாநாயகர், "வன்றொண்டனாகிய சுந்தரன், கனக சபையின்கண்ணே நமது ஆநந்தத் தாண்டவத்தை வந்து வணங்கிப் பதிகம் பாடுதலால் நான் நின்று அதனைக் கேட்டுவரத் தாமதமாயிற்று" என்னுந் திருவாக்கை அருளிச்செய்தார். சேரமான் பெருமாணாயனார் இது கேட்டுப் பகவானுடைய கருணை இருந்தவாறு என்னே என்று வியந்தார். பின், கனக சபையை வணங்கி, வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனாரையும் தரிசித்தல் வேண்டும் என்னும் ஆசை அவருக்கு உதித்தது. அதனால், அவர் திருவஞ்சைக்களத்திலே எழுந்தருளியிருக்கும் சிவபிரானை வணங்கிக்கொண்டு, சேனைகளோடு புறப்பட்டுப் போய்ச் சிதம்பரத்தை யடைந்தார். அக்கனகசபையிலே ஆனந்தத் தாண்டவம் புரியும் சிவபிரானை வணங்கி, சிவானந்தத்தி லாழ்ந்து,

"பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் மேனி
பொலிந்திலங்கு
மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை
வெள்ளிக்குன்றந்



தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் மால்விடை
தன்னைக்கண்ட
வென்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மாகிய
வீசனுக்கே."

என்ற பொன்வண்ணத் தந்தாதி பாடியருளினார். சபாநாயகர் அப்பாட்டலால் மகிழ்ந்து, அதற்குப் பரிசிலாகத் தமது குஞ்சித பாதத்தினது சிலம்பின் ஓசையை எதிரே கேட்பித்தார். சேரமான் பெருமாணாயனார், காலந்தோறும் சபாநாயகரைத் தரிசனஞ் செய்துகொண்டு அத்திருப்பதியில் இருந்தார்.

# திருநீலகண்ட நாயனார்

## ஆணையின் உறுதி

தில்லைத்தல மென்னும் சிதம்பரத்திலே, குயவர் குலத்தில் அவதரித்த அடியவர் ஒருவர் இருந்தார். அவர், பொய் சொல்லல் சிறிது மின்றித் தரும நெறியிலே வாழ்ந்து வந்தவர். அவர் இல்லற வழியிலே நின்று சிவபத்தியில் சிறந்தவராய் இருந்து, தம் குல மரபிற்கு ஏற்ப, மட்கலங்களை வனைந்து விற்றுச் சீவனஞ் செய்து, சிவனடியார்களுக்குத் திருவோடுகளைக் கொடுத்தும் வந்தார்.

அவ்வன்பர் "ஆதிகாலத்திலே எல்லா உலகங்களும் உய்யும் பொருட்டுப் பாற்கடலிற்றோன்றிய ஆலகால விஷத்தைச் சிவபெருமான் உண்டபொழுது, அவர் கண்டமானது, அவரைச் சரணமடைந்தோர் சகல துன்பங்களினின்றும் நீங்கப் பெறுவர் என்னும் உண்மையை நாமெல்லாரும் அறிந்துய்ய ஒரு குறியாய் விளங்கும் பொருட்டு அவ்விஷத்தினை உள்ளே போகவொட்டாமல் தானே தரித்துக் கொண்டது" என்று கருதி, அப்பெருமானுடைய கண்டத்தைத் "திருநீலகண்டம்" என்று சிறப்பித்துச் சொல்லுவார். அதனால் அத்தொண்டருக்குத் திருநீலகண்ட நாயனார் என்னும் பெயர் உண்டாயிற்று.

அவர், ஒரு நாள், அவ்வூரிலுள்ள ஒரு பரத்தையினிடஞ் சென்றிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்தார். அதையறிந்து அவர் மனைவி அதிக கோபங்கொண்டனளாயினும் அக்கோபத்தை அடக்கிக்கொண்டு, இல்வாழ்க்கைக் குரிய மற்றப் பணிகளெல்லாஞ் செய்து அவரை மாத்திரம் தீண்டாதிருந்தனள். நாய-



னார், தம்முடைய மனைவியார் கொண்ட கொள்கையை நீக்கும்பொருட்டு அக்கற்புடையாளின் சமீபத்திலே போய், இனிய வார்த்தைகளைச் சொல்லி, அவ்வம்மையைத் தீண்டப் போயினர். அப்பொழுது அவர் மனைவியார், அவரைப் பார்த்து, "நீர் எம்மைத் தீண்டுவீராகில் திருநீல கண்டம்" என்று ஆணையிட்டார்.

மனைவி சொன்னதைக் கேட்ட திருநீலகண்ட நாயனார், சிவபிரானுடைய திருநீலகண்டத்திலே தாம் வைத்த பேரன்புக்கு ஒரு சிறிதும் குறை நேரிடாவண்ணம் தம்முடைய மனைவியைத் தொடாமல் நீங்கினார். அவ்வம்மையார் "எம்மை" என்று பன்மையாகச் சொன்னதால் அம்மனைவியாரை மாத்திரமன்றி மற்ற மாதர்களையும் அவர் மனத்தினாலும் நினைக்கத் தகாதென உறுதி செய்துகொண்டனர். பிறகு அவர்களிருவரும் இல்லறத்திற் குரிய பிற செய்கைகளையெல்லாம் செய்துகொண்டு வாழ்ந்து வந்தார்கள்.

இப்படியே பல வருஷங்கள் செல்ல நாயனாரும், அவர் மனைவியும் யௌவனத்தைக் கடந்து, வயோதிகர்களாகி, வருத்தமுற்றார்கள். ஆனால், சிவபத்தியில் மாத்திரம் அவர்கள் சிறிதும் குறையாதவர்களாகி இருந்தார்கள்.

## திருவோடு காணாதொழிந்தது

இப்படியிருக்கையில், திருநீலகண்ட நாயனாருடைய திருத்தொண்டின் மகிமையை உலகத்திலுள்ள யாவரும் நன்கு அறிந்து, அவருடைய முறையை மேற்கொண்டு உய்யும் பொருட்டுப் பரமசிவனார் ஒரு சிவயோக வடிவந்தாங்கி, அவ்வடியார்

மனைக்குச் சென்றார். நாயனார் அவரைக் கண்டு முக மலர்ச்சியோடு அவரை எதிர்கொண்டு வீட்டினுள்ளே அழைத்துக்கொண்டு போய், ஒரு அரிய ஆசனத்தில் இருக்கச் செய்து, அன்பினோடு ஆகமவிதிப்படி பூசனை செய்து நமஸ்கரித்தார். பிறகு, அவர் எழுந்து நின்று அஞ்சலி செய்து, "எம்பிரானே! அடிமை யாகிய நான், தேவரீருக்குச் செய்யவேண்டிய குற்றேவல் யாது?" என்று பணிவுடன் வினவினார். அதற்கந்தச் சிவயோகியார், "அன்பனே! இத்திருவோட்டை நீ வைத்திருந்து நாம் கேட்கும் போது தரவேண்டும். இந்த ஓடு தனக்குத்தானே ஒப்பானது; தன்னிடத்தில் சேர்ந்த பொருள்களெல்லாவற்றையும் பரிசுத்தப்படுத்துவது; பொன், இரத்தினம் முதலிய மணிகளினும் அதிகச் சிறந்ததாக வைத்துப் பாதுகாக்கத் தக்கது. இவ்வித மேன்மைபொருந்திய இந்த ஓட்டை நீ வாங்கி வைத்திரு" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அதைக் கேட்ட அடியவர் அகமகிழ்ந்து சிவயோகியாரை வணங்கி, அத்திருவோட்டினைப் பெற்றுக் கொண்டு தம் இல்லத்தின் ஓரிடத்தில் அதைச் சேமித்து வைத்தார். பிறகு, சிவயோகியார் அவ்விடத்தினின்றும் செல்ல எழுந்தார். நாயனார் அவருடன் சிறிது தூரஞ் சென்று, அவரைப் பணிந்து விடை பெற்றுக் கொண்டு, தம் வீட்டிற்குத் திரும்பி வந்தனர்.

பல நாள்கள் கழிந்த பின்னர், ஒரு நாள் பரமசிவன், முன்னர் தாம் நாயனாரிடம் சேமித்து வைக்கக் கொடுத்திருந்த திருவோட்டினை, அவர் வைத்திருந்த



இடத்தில் இல்லா தொழியும்படி செய்தனர். பிறகு, பரமன் அவ்வடியாருடைய உண்மை நிலையைப் பிறர்க்குத் தெரிவிக்கும் பொருட்டு, முன்போலச் சிவயோகி வடிவங்கொண்டு, அவருடைய இல்லத்திற்கு எழுந்தருளினார். நாயனார், சிவயோகியாரைக் கண்டவுடன் முன்போல வழிபட்டு, "எம்பெருமானே! தேவரீர் இந்த இல்லத்திற்கு எழுந்தருளியது அடியேன் பூர்வ ஜன்மத்திற் செய்த தவப்பயனே போலும்" என்று விண்ணப்பித்து நின்றார். சிவயோகியார், நாயனாரைப் பார்த்து "நாம் முன்னொருநாள், உன்னிடம் கொடுத்திருந்த திருவோட்டை இப்போது எம்மிடம் கொடு" என்றார். உடனே நாயனார், அந்தத் திருவோட்டைக் கொண்டுவந்து அவரிடம் கொடுக்கும் பொருட்டு, உள்ளே போய்ப் பார்த்து, அங்கே காணப்படாமையால் திகைத்தார். பிறகு, தம்முடைய மனைவியாரைக் கேட்டும், பிறவிடங்களில் தேடியும் அதைக் காணாதவராய், சிவயோகியாருக்கு உத்தரம் சொல்வதற்கு ஒன்றும் தோன்றாமல் மௌனமாய் நின்றார். சிவயோகியார், உள்ளே நின்ற நாயனார் கேட்கும்படி, "திருவோட்டைக் கொண்டுவர இவ்வளவு தாமதமேன்? நீ காலந்தாழ்த்து நிற்கும் காரணமென்ன?" என்றார்.

அது கேட்ட திருநீலகண்ட நாயனார் வெளியே வந்து, சிவயோகியாரை வணங்கி, "தேவரீர் கொடுத்த திருவோட்டை வைத்த இடத்திலும் பிறவிடங்களிலும் தேடியும் காணப் பெற்றிலேன், மிகவும் பழையதாகிய அந்தத் திருவோட்டினும் சிறந்ததாகப் புதியதொரு திருவோட்டைத் தருவேன். ஆதலால், அடி

யேன் செய்த பிழையைப் பொறுத்தருளல் வேண்டும்" என்று சொல்லி வணங்கி நின்றார்.

சிவனடியார் அது கேட்டு, அதிக கோபமடைந்து, நாயனாரைப் பார்த்து, "நீ இப்படியும் தெரிவிக்கலாகுமோ? நான் உன்னிடம் கொடுத்த மண்ணோட்டையன்றிப் பொன்னோட்டை நீ தருவதாயிருந்தாலும் நான் வேண்டேன். நான் முன்னே உன்னிடத்தில் கொடுத்த ஓட்டையே கொண்டுவா" என்றார். அடியவர் அவரைப் பணிந்து, "ஐயரே! நான் என்ன செய்வது? தேவரீர் தந்த திருவோட்டை எங்குத் தேடியும் காணப்படவில்லையே. அதற்குப் பதிலாக வேறொரு நல்ல ஓடு தருகிறேன் என்றாலும் அதற்கு உடன்படாமல், 'நான் தந்த ஓட்டையே கொண்டுவா' என்று சொல்லுகின்றீர். அவ்வார்த்தை என் உணர்வைப் போக்கிவிட்டது" என்று சொன்னார்.

### நாயனார் பிரமாணத்திற் குடன்படல்

நாயனார் சொன்னதைக் கேட்ட சிவயோகியார், மிகுந்த கோபத்துடன் நாயனாரைப் பார்த்து, "நான் உன்னிடத்தில் வைத்த அடைக்கலப் பொருளை நீ கவர்ந்துகொண்டு, பழிக்குச் சிறிதும் அஞ்சாமல், 'காணப்படவில்லை' என்று தெரிவிக்கின்றாய். யாவரும் அறியும்வண்ணம் உன்னை இவ்விடத்தினின்றும் தப்பிப் போகவொட்டாமல் தடுத்து, என் ஓட்டை உன்னிடம் பெறாமல் நான் போக மாட்டேன்" என்றார். நாயனார் அவரை வணங்கி, "தேவரீர் என்னிடம் தந்த திருவோட்டை நான் கவர்ந்தவனல்லன். நான் அதை அபகரிக்கவில்லையென்று எவ்விதம் விளக்கு



வேன்? அதைத் தேவரீரே அறிவித்தல் வேண்டும்" என்றார்.

சிவயோகியார் அது கேட்டு, "நீ உன் புத்திரனைக் கையிலே பிடித்துக்கொண்டு, குளத்திலே முழுகி, நீ அந்தத் திருவோட்டைக் கவரவில்லை என்று சத்தியம் செய்" என்று சொல்ல, நாயனார் அவரைப் பார்த்து, "அடியேன் அப்படிச் செய்வதற்கு எனக்குப் புத்திரன் இல்லையே! இதற்கு யாது செய்வேன்?" என்றார். சிவயோகியார் உனக்குக் குமாரன் இல்லையானால் உன் மனைவியைக் கைப்பிடித்து முழுகிப் பிரமாணிக்கம் செய்து கொடு" என்று சொன்னார்.

அது கேட்ட நாயனார் திகைத்து, "பெருமானே! நானும் என் மனைவியும் எங்களிடத் துண்டாயிருக்கும் ஒரு சபதத்தினால், தாங்கள் தெரிவித்தபடி என் இல்லாளுடன் ஒருங்கு முழுகுதல் கூடாது. நான் மாத்திரம் குளத்திலே முழுகிச் சத்தியம் செய்து தருகிறேன்" என்றார். அதற்குச் சிவயோகியார் அதிக கோபத்துடன், நான் முன்னே உன்னிடம் தந்த ஓட்டைக் கொடுக்காமலும், அதைக் கவர்ந்துகொள்ளவில்லையெனின் உன் மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு குளத்தில் முழுகிப் பிரமாணிக்கஞ் செய்து கொடுக்காமலும் இருக்கின்றாய். ஆகையால், தில்லைவாழந்தணர்கள் குழுமியிருக்கும் பெரிய சபையிலே இவ்விஷயத்தைப் பற்றித் தெரிவிப்பேன். அவர்களே இதைத் தீர்மானஞ் செய்யட்டும்" என்று சொல்லி அந்தச் சபைக்குச் சென்றார். திருநீலகண்ட நாயனாரும் அந்தச் சிவயோகியாருக்குப் பின்னே போனார்.

சிவயோகியார், தில்லைவாழந்தணர்களைப் பார்த்து.

"இந்தக் குலாலன், தன்னிடத்திலே நான் வைத்திருக்கும்படி கொடுத்த ஓட்டைத் தருகின்றானில்லை; அதனை வைத்தவிடத்திலே காணப்படவில்லை என்று தெரிவிக்கின்றான். அதனை உண்மையில் இழந்தானாயின், நான் விரும்பியபடி, தன் மனைவியைக் கைப்பிடித்துக் குளத்திலே முழுகிப் பிரமாணிக்கஞ்செய்து தருகின்றானில்லை. ஆதலால், இதைத் தங்களுடைய தீர்மானத்திற்குக் கொண்டுவந்தேன்" என்றார்.

அதைக் கேட்ட அந்தணர்கள், அடியவரைப் பார்த்து, "திருநீலகண்டரே! உண்மையில் நடந்த விருத்தாந்தமென்ன?" என்று கேட்க, அவர், "சுவாமிகாள்! இவர் என்னிடம் திருவோடு தந்தது உண்மையே. அது நான் வைத்த இடத்தினின்றும் காணப்பெற்றிலேன். நான் அதைப் பல விடங்களிலும் தேடிப் பார்த்தேன்; எங்கும் காணப்படவில்லை. இதுவே நடந்த விஷயம்" என்றார். பிராமணர்கள் அது கேட்டு, இவர் தந்த ஓட்டை உண்மையில் நீர் இழந்தீராகில், இவர் விரும்பியபடி நீர் உம்முடைய மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு குளத்திலே முழுகிப் பிராமாணிக்கம் செய்து கொடுப்பதே நீதியாகும்" என்றார்கள்.

அது கேட்டு அடியவர், தம் மனைவியாரைத் தீண்டாதிருக்கும் காரணத்தைப் பற்றிப் பேசமாட்டாதவராய், அந்தப் பிராமணர்களைப் பார்த்து, "அப்படியே குளத்தில் முழுகிச் சத்தியம் செய்து தருகிறேன்" என்று விண்ணப்பித்து, மனைக்குச் சென்று, மனைவியாரை அழைத்துக்கொண்டு, திருப்புலீச்சரத்துக்கு முன்னிருக்கின்ற திருக்குளத்திலே போய்,



திருநீலகண்ட நாயனாரும் நாயகியாரும் முதுமை நீங்கப் பெற்றது



ஒரு மூங்கிற் றண்டை ஒரு புறத்திலே மனைவியார் பிடிக்க, மற்றப் புறத்திலே தாம் பிடித்துக் கொண்டு இறங்கினார்.

### நாயனாரும் நாயகியாரும் முதுமை நீங்கப் பெற்றது

திருநீலகண்ட நாயனார் தம் மனைவியுடன் திருக்குளத்தி லிறங்குவதைக் கண்ட சிவயோகியார் நாயனாரைப் பார்த்து, "இப்படியும் செய்தல் சரியோ! உன் மனைவியைக் கைப் பிடித்துக்கொண்டு மூழ்க வேண்டும்" என்றார்.

அன்பிற் சிறந்த அவ்வடியார், சிவயோகியார் தெரிவித்தவண்ணம் செய்யக் கூடாமையைப் பற்றி உலகத்தார் அறியும்படி, முன்னாளிலே தாம் செய்த குற்றமும், அதனா லுண்டாகிய சபதமும், அதில் தவறாது தாம் நடந்து வருதலும் சொல்லி அக்குளத்திலே முழுகினார். அப்படி முழுகிக் கரை யேறிய நாயனாரும் நாயகியாரும் மூப்புப் பருவம் நீங்கி, இளமைப் பருவத்தை யடைந்தார்கள். அப்போது, தேவர்கள் ஆகாயத்தினின்றும் பூமாரி பொழிந்தார்கள். நாயனாரின் பெருமை அங்கிருந்தோரால் புகழ்ந்து பேசப்பட்டது. சிவயோகியார் அவ்விடத்தில் காணப்படாமையால் எல்லாரும் மயங்கி நின்றார்கள். சிவபெருமான் பார்வதி தேவியாரோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றினார்.

அவ்வாறு தோன்றிய பரமனைக்கண்ட திருநீலகண்ட நாயனாரும், அவர் மனைவியாரும் பூமியிலே விழுந்து பெருமானை நமஸ்கரித்து, எழுந்து நின்று ஸ்தோத்திரஞ் செய்தார்கள். சிவபிரான் அவர்களைக்

கருணையுடன் நோக்கி, “ஐம்புலன்களை வென்றதனாலே சிறப்படைந்த அன்பர்களே! எக்காலத்தும் இவ்விளமை நீங்காமல் நம்மிடத்தில் இருங்கள்” என்று சொல்லி மறைந்தருளினார். பக்தியிற் சிறந்த திருநீலகண்ட நாயனாரும் அவர் மனைவியாரும், யாவராலும் செய்தற்கரிய பெருஞ் செய்கையைச் செய்து, சிவலோகத்தை யடைந்து, பேரின்பத்தை அனுபவித்து வாழ்ந்திருந்தார்கள்.

## திருநாளைப்போவார் நாயனார்

### நந்திதேவரை விலகச்செய்தது

நீர்வளப்பம் பொருந்திய சோழமண்டலத்திலே, நிலவள மிகுந்த மேற்கானாடென்னும் பதியொன்றுண்டு. கொள்ளிட நதியானது பொன்னையும், செழுமையாகிய மணிகளையும் அலைகளாகிய கைகளினால் வாரிக்கொடுக்க, அதன் இரண்டு பக்கங்களிலுமுள்ள தாமரைகள் தமது மலராகிய கைகளினால் ஏற்றுக்கொள்ளுகின்ற விசாலமான வயல்களையுடையது அந்த நாடு. அந்த நாட்டைச் சார்ந்தது ஆதனூர் என்னும் சிறந்த ஊர். அவ்வூரில் சூரிய மண்டலத்தைத் தடவுகின்ற விருக்ஷங்களடர்ந்த சோலைகள் நிறைந்து, மேகக் கூட்டங்கள் சதா அச் சோலைகளில் சேர்ந்து சஞ்சரிக்கும்.

இவ்வித வளங்களையுடைய அந்த ஆதனூரின் மருத நிலத்தைச் சார்ந்த வயலின் புறத்திலுள்ள பெரிய கரையில், ஒரு புலைச்சேரி இருந்தது. அதில், தமக்கு உரித்தாகிய, உழுது நாற்று நடுதல் முதலிய தொழில்களையுடைய பள்ளர்களது கூட்டம் நெருங்கி, விழலினால் மேயப்பட்ட பழங் கூரையை யுடைய பல சிறு குடிசைகள் நிறைந்திருந்தன.

அச்சேரியில் புலையர் குலத்திலே நந்தனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானுடைய திருவடிகளுக்கே உண்மையாகிய அன்பைச் செலுத்துகின்ற மெய்யறிவை யுடையவர்; அவ்வூரில், ஊர் வெட்டியானென்னும் நிறைந்த காணியாட்சியை யுடையவர். அவர் எப்போதும் நன் மார்க்கத்தில் செல்லு

கின்ற மனமுடையவர்; மறந்தும் பிறதெய்வங்களை நினையாமல் சிவபிரானுடைய திருவடிகளையே தியானிப்பவர். தமக்கு மானியமாக விடப்பட்ட நிலத்தின் விளைவினாலே அவர் சீவனஞ்செய்துகொண்டு, தாம் செய்யவேண்டிய தொழிலை நடத்துகின்றவர்.

அவர் சிவாலயங்கடோறும் பேரிகை முதலாகிய ஒருமுகக் கருவிகளுக்கும், மத்தளம் முதலாகிய இருமுகக்கருவிகளுக்கும் தோலும் வாரும், வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், அருச்சனைக்குக் கோரோசனையும் கொடுக்கின்றவர். இப்பணிகளை அவர், தாம் போகின்ற எல்லா ஆலயங்களுக்கும் செய்து, அவ்வாலயங்களின் திருவாசலின் புறத்தில் நின்று, பேரன்பின் மிகுதியால் ஆனந்தக் கூத்தாடுவார்; தம்மை மறந்து பாடுவார்.

அவர் ஒருநாள் திருப்புன்கூர் என்னும் ஸ்தலத்திற்குப்போய், அங்கெழுந்தருளியிருக்கும் சிவபிரானை நேரே தரிசிக்க விரும்பி, ஆலயத்தின் திருவாயிலில் நின்றார். சிவபிரான் அவருடைய விருப்பத்தின்படியே தமக்கு முன்னிருக்கின்ற இடபதேவரை விலகும்படி செய்து, அவருக்குக் காட்சி கொடுத்தருளினார். நந்தனார் அந்த ஸ்தலத்திலே ஒரு பள்ளமிருப்பதைக்கண்டு அதை ஒரு குளமாக வெட்டித் தம்முடைய ஊருக்குத் திரும்பினார்.

இப்படியே அவர், சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற பல ஸ்தலங்களுக்கும் போய் வணங்கித் திருப்பணி செய்து வந்தார். ஒருநாள் அவர், சிதம்பரத்திலுள்ள கனகசபைக்கும்போய், நடராசப் பெருமானை வணங்க வேண்டும் என்று ஆசைகொண்டு, அவ்



வாசையின் மிகுதியினால் அன்றிரவு முழுதும் நித்திரை செய்யாம லிருந்தார். பிறகு பொழுது விடிந்தவுடன், "நான் சிதம்பரத்துக்குப் போகவென்றால், அவ்வூரினுள்ளே புகுந்து, திருக்கோயிலினுள்ளே பிரவேசிக்கும் யோக்கியதை என் குலத்துக்கு இல்லையே" என்று நினைத்து, இதுவும் சிவபிரானுடைய திருவருளே" என்று சொல்லிப் போகா தொழிந்தார். பின்னும் அதிகரித்த ஆசையானது அவரை மேலுமேலும் தூண்ட, "நாளைக்குப் போவேன்" என்றார். இப்படியே, "நாளைக்குப் போவேன், நாளைக்குப் போவேன்" என்று அநேக நாட்கள் கழித்தார். அதனால், அவருக்குத் திருநாளைப் போவார் என்னும் பெயர் உண்டாயிற்று.

### அக்கினியில் மூழ்கி எழுந்தது

ஒருநாள், நந்தனார் சிதம்பர தரிசனம் பண்ண வேண்டும் என்னும் ஆசையை அடக்கக்கூடாமல், கமுக மரங்கள் சூழ்ந்த தம்முடைய பழமையாகிய ஆதனூரினின்றும் புறப்பட்டு, வயல்கள் சூழ்ந்த தில்லைப் பதியின் எல்லையை வந்தடைந்தார். அவர், அந்தச் சிதம்பரத்தின் திருவெல்லையைக் கண்டு நமஸ்கரித்து எழுந்தார். அத்திருப்பதியின் திருமதில் வாயிலிலே புகுந்து, அங்குள்ள பிராமணர்களுடைய வீடுகளிலே ஓமஞ் செய்யப்படுதலைக் கண்டு, அவர் உள்ளே போவதற்கு அஞ்சி, அங்கே நமஸ்கரித்து, அத்திருவெல்லையை வலஞ்செய்துகொண்டு போவார்.

இப்படியே அவர் இராப்பகல் வலஞ்செய்து, உள்ளே போகக்கூடாமையை நினைந்து நினைந்து வருந்தி, "இனி என்ன செய்வது? சபாநாயகரைத் தரிசிக்-

கும் உபாயம் யாது? இந்த இழிவாகிய நீசப் பிறப்பு இதற்குத் தடைசெய்கின்றதே" என்று நினைந்தவண்ணம் துக்கத்தோடு நித்திரை செய்தார். சபாநாதர் அவருடைய துன்பத்தை நீக்கி, அவருக்கு அருள்செய்யத் திருவுளங்கொண்டு, அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே! இந்த இழிபிறப்பானது ஒழியும்படி நீ அக்கினியில் மூழ்கி எழுந்து, மூன்று புரியாகிய பூணூலைத் தரித்த மார்பினையுடைய தில்லைவாழந்தணர்களோடு நம்முடைய சந்நிதானத்துக்கு வந்து, நம்மைத் தரிசிக்கக்கடவாய்" என்று அருளிச் செய்தார். அப்படியே சிவபெருமான் தில்லையில் வாழ்ந்தருளும் மூவாயிரம் பிராமணர்களுக்கும் சொப்பனத்தில் தோன்றி, அந்தத் திருநாளைப் போவார் பொருட்டு அக்கினியை வளர்க்கும்படி ஆக்ஞாபித்து, மறைந்தருளினார்.

தில்லைவாழந்தணர்கள் அந்தச் சொப்பனத்தினால் திடுக்கிட்டெழுந்து, திருக்கோயில் வாயிலிலே வந்து கூடி, "எமது ஆண்டவராகிய சிவபெருமான் கட்டளையிட்டருளிய பணிவிடையை யாம் செய்வோம்" என்று கொண்டாடித் துதித்து, அந்தத் திருநாளைப்போவாரிடத்திலே சென்று, "ஐயரே! ஸ்ரீ நடராஜப்பெருமானுடைய கட்டளையினால் இப்பொழுது வெவ்விய அக்கினியை மூட்டி, நீர் அதில் மூழ்கும்படி உமக்குத் தெரிவிக்க வந்தோம்" என்றார்கள்.

அதைக் கேட்ட திருநாளைப்போவார் "அடியேன் உய்ந்தேன்" என்று சொல்லி அவர்களை வணங்கினார். தில்லைவாழந்தணர்கள் மூவாயிரவர்களும் தென்மதிற்புறத்திலே, கோபுர வாயிலுக்கு முன்னே, ஒரு குழியிலே நெருப்பு வளர்த்து, அதைத் திருநாளைப் போவாருக்குப் போய்த் தெரிவித்தார்கள்.



திருநாளைப் போவார், மிதமிஞ்சிய சந்தோஷத்துடன் அந் நெருப்புக் குழியை யடைந்து, சபாநாயகருடைய திருவடிகளை மனத்தினால் தியானம்பண்ணி, அக்கினியை வலஞ்செய்து தொழுதவண்ணம், அதனுள்ளே புகுந்தார். அப்படிப் புகுந்த நாயனார், அந்தத்தேகத்தை ஒழித்துப் புண்ணியத்தையுடைய பெருமைபொருந்திய பிராமண முனிவடிவந் தாங்கி உபவீதத்தோடும், சடைமுடியோடும் எழுந்தார்.

"செந்தீமே லெழும்பொழுது செம்மலர்மேல் வந்தெழுந்த
அந்தணன்போற் றோன்றினா ரந்தரதுந் துபிநாதம்
வந்தெழுந்த திருவிசும்பில் வானவர்கண் மகிழ்ந்தார்த்துப்
பைந்துணர்மந் தாரத்தின் பனிமலர்மா ரிகள்பொழிந்தார்"

அவர் அப்படி எழுந்தபொழுது, தேவர்கள் ஆரவாரித்துப் பசிய துளிர்களையுடைய கற்பகவிருக்ஷத்தின் மலர்களைத் தூவினர். திருவருட் செல்வத்தையுடைய தில்லைவாழந்தணர்கள் மூவாயிரவரும், நாயனாரைக் கைகூப்பித் தொழுதார்கள்; மற்றைச் சிவனடியார்களும் வணங்கி மனத்தில் களிப்படைந்தார்கள். திருநாளைப்போவார், அவர்கள் உடன் செல்லச் சென்று, கோபுரத்தை அணுகி, அதனை நமஸ்கரித்து எழுந்து, உள்ளேபோய்க் கனகசபையை அடைந்தார். பிறகு, அவரை அங்கு நின்ற பிராமணர் முதலியோர் யாவரும் காணாமையால் ஆச்சரியங்கொண்டு ஸ்தோத்திரஞ் செய்தார்கள். முடிவில்லாத ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற ஸ்ரீ நடராஜப்பெருமான், முனிவர் வடிவாகத் தம்மை வந்தடைந்த அத் திருநாளைப் போவார் நாயனாருடைய தீவினையாகிய களங்கத்தை யொழித்து, அழகிய தமது பாதமலர்களை வணங்கியிருக்கும்படி கிருபை செய்தருளினார்.

# அப்பூதியடிகணாயனார்

## திருநாவுக்கரசுநாயனாரைச் சந்தித்தல்

சோழமண்டலத்திலே, பலவித தருக்களும் தடாகங்களும் சூழ்ந்து, சகல வளப்பத்தினையும் பெற்ற திங்களூரிலே அப்பூதியடிகணாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். இவர் பிராமண குலத்திலவதரித்தவர். பாவங்கள் என்று சொல்லப்பட்டவைகள் எல்லாவற்றையும் நீக்கினவர். புண்ணியங்கள் என்று சொல்லப்பட்டவைகள் எல்லாவற்றையும் தாங்கினவர். கிருகதாச்சிரமத்தை யுடையவர். சிவபத்தி, அடியார் பத்திகளிற் சிறந்தவர். அவர், சிவாநுபூதிமானாகிய திருநாவுக்கரசு நாயனாருடைய மகிமைகளைக் கேள்வியுற்று, அவரிடத்தில் மிகவும் அன்பு பூண்டு ஒழுகி வந்தார், தம்முடைய வீட்டிலுள்ள அளவைகள், தராசுகள் முதலிய வஸ்துக்களுக்கும், பிள்ளைகள், பசுக்கள், எருமைகள் முதலியவற்றுக்கும் திருநாவுக்கரசு நாயனாருடைய பெயரையே சொல்லி வருவார். இதுவுமன்றி, அவர் திருநாவுக்கரசு நாயனார் மேலுள்ள அன்பின் பெருக்கால், திருமடங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் குளங்கள், திருநந்தவனங்கள் முதலியவற்றையும் அந்நாயனார் பெயரினால் அமைத்து வந்தார்.

இப்படி இருக்கையில், ஒருநாள் திருநாவுக்கரசு நாயனார், திருப்பழனமென்னும் திவ்விய க்ஷேத்திரத்தைத் தரிசித்துக்கொண்டு, பிற தலங்களையும் தரிசிக்கும் பொருட்டு அந்தத் திங்களூருக்குச் சமீபமாக வந்துகொண்டிருந்தார். அவர் அவ்வூருக்குச் சமீபமாகிய



வழியே செல்லும்பொழுது, ஒரு தண்ணீர்ப் பந்தரைக் கண்டார். அதில், திருநாவுக்கரசு நாயனார் என்னும் தம்முடைய பெயர் எங்கும் எழுதப்பட்டிருத்தலைக் கண்டு ஆச்சரியமடைந்தார். பின்பு, அவர் அங்குநின்றவர்கள் சிலரை நோக்கி, "இந்தத் தண்ணீர்ப்பந்தரை இப்பேரிட்டு அமைத்தவர் யார்?" என்று வினவினார்.

அவர்கள் திருநாவுக்கரசு நாயனாரைப் பார்த்து, "இவ்வூரில் அப்பூதியடிகணாயனார் என்பவரொருவர் இருக்கின்றார். அவர் இந்தத் தண்ணீர்ப் பந்தரை மாத்திரமன்று, இவ்விடத்தில் எங்கும் உள்ள அறச்சாலைகள், குளங்கள், திருநந்தன வனங்கள் எல்லாவற்றையும் இத் திருநாவுக்கரசு நாயனார் என்னும் பெயராலேயே அமைத்தனர்" என்றார்கள்.

திருநாவுக்கரசு நாயனார் அதைக் கேட்டு, "இப்படி அவர் செய்ததற்குக் காரணம் யாதாயிருக்கலாம்?" என்று யோசித்து, அவர்களைப் பார்த்து, "அவர் எவ்விடத்தில் இருக்கின்றவர்?" என்று கேட்டனர். அதற்கவர்கள், "அவர் இந்தப் பழமையாகிய ஊரிலுள்ளவரே. இப்பொழுதுதான் அவர் தம் வீட்டிற்குச் சென்றார். அவ்விடம் தூரமன்று. சமீபத்திலேயே உள்ளது" என்று தெரிவித்தார்கள்.

உடனே திருநாவுக்கரசு நாயனார், அவ்விடத்தினின்றும் நீங்கிச் சென்று, அப்பூதியடிகணாயனாருடைய வீட்டுத் தலைக்கடை வாயிலிற் சேர்ந்தார். அவ்வீட்டினுள்ளே யிருந்த அப்பூதி நாயனார், சிவனடியார் ஒருவர் தலைவாயிலில் வந்திருக்கின்றார் என்று கேள்வியுற்று, அவ்விடத்திற்கு விரைந்து சென்று, திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடிகளிலே நமஸ்கரித்தார்.

அவரும் அப்பூதியடிக ணாயனாரை வணங்கினார்.

அப்பூதிநாயனார், திருநாவுக்கரசு நாயனாரை நோக்கி, "அடியேன் பூர்வத்தில் அளவற்ற பெருந் தவத்தைச் செய்திருக்கவேண்டும். அதனாலேயே தாங்கள் இங்கு எழுந்தருளிய பாக்கியத்தைப் பெற்றேன். கருணை பொழியும் திருவுருவத்தை யுடையவரே! தாங்கள் அடியேனுடைய சிறு குடிசையில் எழுந்தருளியது யாது காரணம்?" என்று வினவினார்.

திருநாவுக்கரசு நாயனார் அவரைப் பார்த்து "நாம் திருப்பழனத்தைச் சேவித்துக்கொண்டு வரும்போது, வழியோரத்தில் நீர் வைத்திருக்கின்ற சிறந்த வளம்பொருந்திய நிழலைத்தருகின்ற தண்ணீர்ப் பந்தரைக் கண்டேன். அப்படியே நீர் செய்துவருகின்ற மற்றைத் தருமங்களையும் கேள்வியுற்று உம்மைக் காண விரும்பி இங்கே வந்தேன். தவிர, சிவனடியார்கள் இளைப்பாறும்பொருட்டு நீர் வைத்திருக்கின்ற பெருமை பொருந்திய தண்ணீர்ப் பந்தலில் உம்முடைய பெயரை எழுதாமல் வேறொரு பெயரை எழுதியதற்குக் காரணம் யாதோ?" என்றார்.

அதைக்கேட்டு, அப்பூதிநாயனார் மனம் கலங்கி, "நீர் நல்ல வார்த்தை அருளிச் செய்தீர். சமணர்களோடு சேர்ந்திருந்த பல்லவராஜன் செய்த வஞ்சனைகளைச் சிவபக்தி வல்லமையினாலே ஜயித்த பெருந் தொண்டரது திருப்பெயரோ வேறொரு பெயர்" என்று கோபித்தார். பின்னும் அவரைப் பார்த்து, "பரமசிவனுக்குத் தொண்டு செய்வதிலே இம்மையில் கிடைக்கும் வழி என்பதை என்போன்ற அறிவிலிகளும் தெளியும்பொருட்டு அருள்புரிந்த திருநாவுக்கரசு நாயனாருடைய



திருப்பெயரை நான் எழுதியிருக்க, அதை நீர் சிறிதும் கவனியாமல் இந்தக் கடுஞ்சொல்லை நான் கேட்கும்படி உரைத்தீர். கற்றூணியைக் கொண்டு கடலைக் கடந்து கரையேறிய திருநாவுக்கரசு சுவாமிகளது மகிமையை உலகத்தில் யார் அறியமாட்டார்கள். நீர் சிவவேடத்தோடு என்முன்னே நின்று, இத்தகைய தகாத வார்த்தையைச் சொன்னீர். நீர் எங்கே இருக்கின்றவர்? உம்முடைய பெயர் என்ன?" என்றார்.

## பாம்பு கடித்திறந்த குழந்தை

திருநாவுக்கரசு நாயனார், அப்பூதி யடிகளுடைய அன்பை யறிந்து, "ஆருகதசமயப் படுகுழியினின்றும் ஏறும்பொருட்டுப் பரமசிவன் சூலை நோயை வருவித்து ஆட்கொள்ளப்பெற்ற, உணர்வில்லாத சிறுமையேன் யான்" என்றார். அதுகேட்டவுடனே அப்பூதிநாயனார், தமது இரண்டு கைகளும் சிரசின்மேல் குவிய, கண்களினின்றும் அருவிபோல ஆனந்தபாஷ்பம் சொரிய, உரை தடுமாறித் தேக முழுதும் உரோமம் சிலிர்க்கப் பூமியில் விழுந்து, திருநாவுக்கரசு நாயனாருடைய ஸ்ரீ பாதாரவிந்தங்களைச் சிரசில் சூடிக்கொண்டார்.

திருநாவுக்கரசு நாயனார் அப்பூதி யடிகளை எதிர் வணங்கி எடுத்தருளினார். அப்பூதியடிகள் மிகக் களிப்படைந்து ஆனந்தக் கூத்தாடினார்; பல தோத்திரங்களைப் பாடினார். அவர் தம்முடைய சந்தோஷ மேலீட்டினால் செய்வது இன்னது என்று அறியாமல், வீட்டினுள்ளே சென்று மனைவியாருக்கும், பிள்ளைகளுக்கும் திருநாவுக்கரசு சுவாமிகள் எழுந்தருளிவந்த சந்தோஷ.

சமாசாரத்தைத் தெரிவித்தார்; தம்மைச் சேர்ந்த பெரிய சுற்றத்தார்களை யெல்லாம் அழைத்துக் கொண்டு வந்தார்; அவர்களனைவரையும் நாயனாரை வணங்கும்படி செய்தார். பிறகு யாவரும் திருநாவுக்கரசு நாயனாரை வீட்டின் உள்ளே எழுந்தருளச் செய்து, அவர் திருவடிகளை விளக்கி, அந்த நீரைத் தங்கள்மேல் தெளித்துக்கொண்டார்கள்.

அப்பூதிநாயனார் திருநாவுக்கரசு நாயனாரை ஆசனத்திலிருத்தி, விதிப்படி செய்யவேண்டிய அருச்சனைகளைச் செய்து, "சுவாமி! தேவரீர் இங்கே திருவமுது செய்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அவரும் அதற்கு உடன்பட்டருளினார்.

அப்பூதிநாயனார் திருவமுது சமைப்பிக்க, தம்முடைய புத்திரராகிய மூத்த திருநாவுக்கரசரை வாழைக் குருத்து அரிந்துகொண்டு வரும்பொருட்டு அனுப்பினார். அச்சிறுவன், "நற்குணமுடைய தாய் தந்தைகள் அனுப்ப, நான் இப்பணி செய்யப்பெற்றேன்" என்று, அகமகிழ்ந்து, விரைந்து தோட்டத்திற்குச் சென்று, வாழைக் குருத்தொன்றை அரிந்தார். அப்பொழுது ஒரு பாம்பு சீறி, அப்புதல்வன் துயருற்று மயங்கி விழும்படி அவனுடைய அழகிய கையைக் கடித்தது.

"கையினிற் சுற்றக் கற்றக் கடும்பணி காந்து சீற
பையரா வதனை வீழ்த்துப் பதைப்புடன் பாகம் பற்றும்
வெய்யவே கத்தால் வீழா முன்னம்வே கத்தா லெய்தி [ன்"
செய்தவத் தூவரைச் சென்று சேரும்வண் ணோடி வந்தா

அச்சிறுவன், பாம்பைப் பற்றிக் கீழே தள்ளி, பதைபதைப்புடனே அப்பாம்பு கடித்த வேகத்தினாலே



நிலத்தில் விழுமுன்னே, கொய்த குருத்தை வேகத்தோடு கொண்டோடிவந்து, விஷம் முறையே ஏறித் தலைகொள்ள, பல்லுங் கண்ணும், சரீரமும் கருகித் தீய்ந்து, உரை குழறி மயங்கி, குருத்தைத் தாயார் கையில் நீட்டி, கீழே விழுந்து இறந்தான்.

## சிறுவன் உயிர்பெற்றது

சிறுவன் இறந்ததைக் கண்ட அப்பூதியடிகளும், அவர் மனைவியாரும் மனம் பதைத்து, அவனை நன்றாகப் பார்த்தார்கள். உதிரம் சிந்துகின்ற உடம்பையும், அவ்வுடம்பில் விளங்கித் தோன்றுகின்ற குறியையுங் கண்டு, இவன் பாம்பின் விஷவேகத்தால் இறந்தானென்று தெரிந்துகொண்டார்கள். அவர்கள் அதனால் மனம் வருந்தாமல், "ஐயோ! இது தெரிந்தால் இனி நாயனார் திருவமுது செய்யமாட்டாரே" என்று துக்கித்து, மரணமடைந்த மூத்த திருநாவுக்கரசு என்னும் புதல்வனைப் பாயில் வைத்து மூடி, வீட்டின் புறத்திலுள்ள முற்றத்தின் ஒரு பக்கத்திலே ஒருவரு மறியாமல் மறைத்து வைத்தார்கள். இச்செயல் முழுவதும் திருநாவுக்கரசு சுவாமிகள் அறியாதபடி அவருக்குத் திருவமுது செய்விப்போமென்று அவ்விருவரும், நாயனாரைச் சமீபித்து வணங்கி, "சுவாமி! எழுந்தருளி வந்து திருவமுது செய்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள்.

அரிய தவத்தினையுடைய திருநாவுக்கரசு நாயனார் எழுந்து, தமது திருவடிகளைச் சுத்தி செய்துகொண்டு, திருத்தமாகிய வேறொரு ஆசனத்தில் எழுந்தருளினார். பிறகு அவர், அப்பூதியடிக ளாயனாருக்கும் அவர் மனைவியாருக்கும் விபூதியைக் கொடுத்து, அவர்களுடைய

புதல்வர்களுக்கும் கொடுக்கவேண்டி அப்பூதிநாயனரைப் பார்த்து, "நாம் விபூதி சாத்துதற்கு உம்முடைய மூத்த புதல்வனைக் காட்டும்" என்றார். இது கேட்டு அப்பூதியடிகள் திடுக்கிட்டு, "இப்போது அப்புதல்வன் இங்கே உதவான்" என்றார்.

"அப்புதல்வன் உதவான்" என்று அப்பூதியடிகள் கூறிய வார்த்தையைத் திருநாவுக்கரசு நாயனார் கேட்டவுடனே, சிவபிரானுடைய திருவருளினாலே தம்முடைய திருவுள்ளத்திலே ஒரு தடுமாற்றத்தையடைந்தார். அதனால், அவர் அப்பூதி நாயனரைப் பார்த்து "நீர் சொல்லுகின்ற இந்த வார்த்தை என் உள்ளத்தில் அமையவில்லை. அப்புதல்வன் என்ன செய்தான்? நீர் உண்மையை விரித்துச் சொல்லும்" என்று கேட்டனர்.

அப்பூதிநாயனார் இது கேட்டு அஞ்சி, தேகம்நடுக்குற்று, திருநாவுக்கரசு நாயனாரை வணங்கி நின்று, நிகழ்ந்த சமாசாரத்தை விண்ணப்பஞ் செய்தார்.

அப்புதல்வன், விஷந் தீண்டி இறந்தானென்று அப்பூதியடிகள் கூறிய செய்தியைத் திருநாவுக்கரசு சுவாமிகள் கேட்டு, "நீர் சொல்லிய வார்த்தை நன்றாயிருக்கின்றது. இத்தன்மையான செய்கையை வேறெவரும் செய்திலர்" என்று சொல்லிக்கொண்டு விரைவாக எழுந்து, உயிர் நீங்கிக் கிடக்கின்ற அந்தச் சவத்தைப் பார்த்தார். உடனே அவர் சிவாலயத்திற்கு முன் சென்று, சவத்தை அங்கே கொணர்வித்து, விஷத்தை நீக்கி உயிர் கொடுத்தருளும் வண்ணம் சிவபிரானை வேண்டி, இசையினை யுடைய திருப்பதிகம் பாடியருளினார்.



உடனே அப்பூதி நாயனாருடைய மூத்த குமாரன் கொடிய பாம்பினது விஷத்தினின்றும் நீங்கி, நித்திரை விட்டெழுந்தவனைப்போல் எழுந்து திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடிகளை நமஸ்கரித்தான். அவர், அவனைக் கண்டு மகிழ்ந்து, பரிசுத்தம் பொருந்திய விபூதியைக் கொடுத்தார். பாம்பினால் உடலைவிட்டு நீங்கிய உயிரைப் பின்வரப்பெற்ற அப்புதல்வனைப் பார்த்த அவ்வூரிலுள்ளவர்கள், அப்பூதியடிகளாயனாருடைய திருத்தொண்டின் முறைமையைத் துதித்து வாழ்த்தினார்கள்.

அப்பூதி நாயனாரும், அவர் மனைவியாரும் தங்கள் புத்திரன் பிழைத்தமையைக் கண்டும் அதைக் குறித்துச் சந்தோஷப்படவில்லை.

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு"

என்னும் அருள்மொழியின்படி அவர்கள் திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்யாதிருந்தமையைக் குறித்துச் சிந்தை நொந்தார்கள். திருநாவுக்கரசு நாயனார் அதனை அறிந்து, அவர்களோடும் வீட்டிற்குச் சென்று, அப்பூதிநாயனாரோடும், அவர் புத்திரர்களோடும் ஒருங்கிருந்து திருவமுது செய்தருளினார். பிறகு, அவர் சிலநாள் அங்கிருந்து, பின்னர் திருப்பழனத்திற்குச் சென்றார்.

அப்பூதியடிகள், சைவ சமயாசாரியராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடிகளைத் துதித்தலே தமக்குப் பெருஞ் செல்வமெனக் கொண்டு வாழ்ந்திருந்து, சிலகாலஞ் சென்றபின் பரமசிவனுடைய திருவடிகளை அடைந்தார்.

## இளையான்குடி மாற நாயனார்

### வறுமையின் கொடுமை

இளையான்குடி என்னும் ஊரிலே, வேளாளர் குலத்தி லவதரித்த மாறனார் என்பவர் ஒருவரிருந்தார். அவர், எத்தொழிலினும் சிறந்த வேளாண்மையால் வரும் குற்றமற்ற அளவிறந்த செல்வத்தை உடையவர். சிவபிரானுடைய திருவடிகளைச் சதாகாலமும் தமது உள்ளத்திலே தியானம் செய்பவர். அவர், தம்முடைய கிருகத்துக்கு வரும் சிவபக்தர்கள் எந்த வருணத்தாராயினும் அவர்களை எதிர்கொண்டு அஞ்சலி செய்வார். அவர்களை அவர், இன் சொற்களால் உபசரித்து, வீட்டுக்கு அழைத்துக்கொண்டுவந்து, கரகநீர்கொண்டு அவர்கள் திருவடிகளை விளக்குவார். அவ்வாறு விளக்கிய அத்தீர்த்தத்தை அவர் சிரமேற் றெளித்துக்கொண்டு உள்ளும் பருகி, அத்திருவடிகளை மெல்லிய வஸ்திரத்தினால் துடைப்பார். பிறகு, அவர் அச்சிவனடியார்களை ஆசனத்தி லிருத்தி, சைவாகம விதிப்படி அருச்சித்து நமஸ்கரிப்பார். இவை யாவும் முடிந்தபின்பு கைப்பு, புளிப்பு, தித்திப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு என்னும் அறுவகைச் சுவையையுடையனவாய், உண்ணப்படுவது, தின்னப்படுவது, நக்கப்படுவது, பருகப்படுவது என நால்வகைப்படும் உணவுகளை அவர் அவ்வடியார்களின் பிரீதிக் கிசைய திருவமுது செய்விப்பார்.

இப்படி இவர் தினந்தோறும் அடியார்களுக்குத் திருவமுது செய்விக்கும் புண்ணியத்தினாலே, செல்வம் நாளுக்குநாள் அபிவிருத்தி யடைந்து வந்தது. அவர்,



சிவபெருமானின் தோழனான குபேரனைப்போல வாழ்ந்து வந்தார்.

அப்படி யிருக்குங் காலத்தில், சிவபெருமான், அவ்விளையான்குடி மாற நாயனார் இந்தச் செய்கையைச் செல்வம் வந்த காலத்திலன்றி, வறுமைவந்த காலத்திலும் தளராது செய்யக்கூடியவர் என்பதையும், தாம் நல்லோர்களுக்கு வறுமையைக் கொடுத்தல் அவர்களின் நன்மையின் பொருட்டே என்பதையும், அந்த நன்மை, இறுதியிலேயே பலிக்கும் என்பதையும், அக்கருத் தறியாது அதற்குள்ளே புண்ணியஞ் செய்த நமக்குக் கடவுள் இடர் செய்தாரே என்று தம்மை நோதல் பழுதாம் என்பதையும் பிறர்க்குத் தெரிவித்து உய்விக்கும் பொருட்டுத் திருவுளங்கொண்டார். அதனால் அவர், அந்த நாயனாரிடத்தில் உள்ள செல்வமெல்லாம் நாளுக்குநாள் சுருங்கி வறுமை யெய்தும்படி அருள் செய்தார். அப்படிச் செல்வம் சுருங்கியும், அடியார்களுக்குத் திருவமுது செய்வித்தலில் பதிந்த அவருடைய மனம் சிறிதும் சுருங்கவில்லை. அவர், தம்மிடத்துள்ள நிலங்கள் முதலியவற்றை விற்றும், தம்மைக் கூட விற்று இறுக்கத்தக்க அவ்வளவு கடன்களை வாங்கியும், முன்போலவே தாம் செய்யும் திருப்பணியை விடாது செய்து வந்தார்.

### பரமசிவன் சைவ வேடங் கொண்டது

இளையான்குடி மாற நாயனார், மழைக் காலத்திலே மழை பெய்யும் ஒருநாள், இரவில் நெடுநேரம் எதிர் பார்த்திருந்தும், ஒருவருடைய உதவியும் கிட்டாமையால், பகல் முழுதும் போசனமின்றிப் பசி அதிகப்பட்டு வீட்டுக் கதவைப் பூட்டி விட்டனர். அப்

போது, சிவபெருமான் ரிஷப வாகனத்தில் எழுந்தருளாமலும், தமது இடபாகத்தில் வீற்றிருக்கின்ற உமாதேவியாரில்லாமலும் தாமே சிவனடியார் வேடங்கொண்டு, உலகத்தார் பிழைக்கும் பொருட்டு, அவ்விளையான்குடி மாற நாயனாருடைய வீட்டிற்கு எழுந்தருளினார். கதவு தட்டப்படும் ஓசையைக் கேட்ட நாயனார் கதவைத் திறந்து, சிவனடியாரைக் கண்டு மகிழ்ந்து, அவரை உள்ளே அழைத்துக்கொண்டு போனார். மழையினால் நனைந்த அவ்வடியாரின் திருமேனியை அவர் வஸ்திரத்தினால் துடைத்து, ஈரம் போக்கி, இருத்தற்கு இடங் கொடுத்தார்.

பிறகு, அவருக்கு அமுதூட்டல் வேண்டும் என்னும் ஆசை மிகுதியால் அவர், தம்முடைய மனைவியாரை நோக்கி, "இந்தச் சிவனடியார் மிகப் பசி கொண்டு வந்தவராகக் காணப்படுகிறது. நமக்கோ போசனத்துக்கான வஸ்துக்கள் ஒன்றுமில்லை. ஆயினும், இவருக்கு எவ்விதத்திலாவது அன்னமிட வேண்டும். இதற்கு யாது செய்வோம்?" என்றார்.

அதைக் கேட்ட அவர் மனைவி, "ஐயோ! அச்சிவனடியார்க்குத் திருவமுது சமைப்பதற்கு ஒரு பதார்த்தமுமில்லை; இனிமேல் கடன் கொடுப்பதற்கு அயலாரும் உதவி செய்யார்கள்; கடன் வாங்கவென்றாலும் நெடுநேரமாயிற்று; அரிசிக் கடன் கேட்கப் போவதற்கு வேறிடமும் இல்லை. பாவியாகிய நான் இதற்கு யாது செய்வேன்? ஆனால், இன்று பகற்காலத்திலே வயலில் விதைக்கப்பட்டும், ஈரத்தால் முன்னமே முளை கொண்டிருக்கின்ற நெல்லை வாரிக்கொண்டு வந்தால், இயன்றபடி அன்னஞ் சமைக்கலாம். இது செய்



யத்தக்கதே யன்றி வேறொரு உபாயத்தையும் அறியேன்" என்று சொல்லித் துக்கித்தாள்.

இந்த வார்த்தையைக் கேட்ட இளையான்குடி மாற நாயனார் மிகவும் மகிழ்ந்து, தம் மனைவியார் சொன்னபடி [illegible] உடன்பட்டார். மழையோ மிகுதியாகப் பெய்துகொண்டிருந்தது. மகா அந்தகாரமாகிய அந்த இரவில், அவர் ஒரு பெரிய இறைகூடையைத் தலையில் கவிழ்த்துக்கொண்டு, காலினாலே தடவிக் குறிவழியே தம்முடைய வயலுக்குச் சென்றார். செந்நெல்லினது வெண்மையாகிய முளைகள் நீரின்மேல் மிதந்துகொண்டிருந்தமையால் அவைகளைத் தம்முடைய கைகளினால் அவர் வாரினார். அப்படி வாரிய முளைகளை அவர் கூடை நிறையப் போட்டுத் தலைமேல் எடுத்துவைத்துச் சுமந்துகொண்டு, விரைவாகத் தமது வீட்டுக்குத் திரும்பினார்.

### சோதி வடிவின் காட்சி

"வந்தபின் மனைவி யாரும் வாய்தலி னின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரிற் சேற்றினை யலம்பி யூற்றி
வெந்தழ லடுப்பின் மாட்டி விறகில்லை யென்ன மேலோர்
அந்தமின் மனையி னீடுமலக்கினை யறுத்து வீழ்த்தார்"

இளையான்குடி மாற நாயனார் வயலிற் சென்று கூடையில் சம்பாவின் முளைகளை வாரிக்கொண்டு தமது இல்லம் வந்தபின்பு, அவரை எதிர் பார்த்துக்கொண்டு வாயிலிலே நின்ற அவர் மனைவி மனமகிழ்ச்சியோடு அந்த நெல் முளைகளை வாங்கிக்கொண்டாள். பிறகு, அவ்வுத்தமி அவற்றைச் சேறு போம்படி நீரினாலே கழுவியானபின் தன்னுடைய நாயகனைப்பார்த்து, "அடுப்பிலே நெருப்பு மூட்டுதற்கு விறகு இல்லையே"

என்றாள். அதைக் கேட்டவுடன் அவர், கிலமாயிருக்கின்ற தமது வீட்டின் மேற் கூரையிலுள்ள வரிச்சுக்களை அறுத்து விழுத்தினார்.

அவர் மனைவி, அவ் வரிச்சுக்களை முறித்து அடுப்பில் வைத்து, முளைத்த நெல் விதைகளை ஈரம் போய்ப் பதமாகும்படி வறுத்தனள். அதன் பின்பு அவ்வம்மை, அவற்றை அரிசியாகக் குத்தியெடுத்து நீர்வார்த்துக் காய்கின்ற உலையில் அவ்வரிசியைப் போட்டு, இனிய சோறாகச் சமைத்தனள். ஆனால், பதார்த்தத்திற்கு என்ன செய்வதென்னும் கவலையால் அக் கற்புக்கரசி, தன் நாயகனை நோக்கி, "இனிக் கறிக்கு யாது செய்வோம்?" என்றாள்.

உடனே நாயனார் புறக்கடையிலுள்ள தோட்டத்திற்குச் சென்று, குழியினின்றும் பெறப்படாத சிறு பயிர்களைக் கையினாலே தடவிப் பிடுங்கிக்கொண்டு வந்து, கறி சமைக்கும்படி தம்முடைய மனைவியிடம் கொடுத்தனர்.

அவர் மனைவியும், தன் கணவனார் கொடுத்த பயிர்க் கறிகளை ஆய்ந்து, நீரினாலே கழுவி, தன்னுடைய சாமர்த்தியத்தினால் வெவ்வேறு கறியமுதுகள் செய்து முடித்தனள், பிறகு, அமுதும் கறியும் பாகம் பண்ணப்பட்டதை அவ்வுத்தமி அறிவிற் சிறந்த தன் கணவரிடம் சொல்லி, "அடியாரை அமுது செய்விப்போம்" என்றனள்.

அப்பொழுது, இளையான்குடி மாற நாயனார் விரைந்து சென்று, நித்திரை செய்பவரைப்போலக் காட்டிய சிவனடியாரின் சமீபத்திற் சென்று, "சுவாமி! அமுது செய்ய எழுந்தருளும்" என்று சொல்லி அழைத்



தார். அந்தச் சிவனடியார் உடனே ஒரு சோதிவடிவமாய் எழுந்து தோன்றினார்.

அது கண்ட இளையான்குடி மாற நாயனாரும், அவர் மனைவியாரும் திகைத்து நின்றார்கள். அப்போது, பரமசிவன் உமாதேவியாரோடும் இடபாரூடராய் அவர்கள் முன் தோன்றினார். இளையான் குடி மாற நாயனார் அக்காட்சியைக் கண்டு ஆனந்தக் கூத்தாடினார். பரமசிவன் நாயனாரை நோக்கி, "அன்பனே! நம்முடைய அடியார்களை அமுது செய்வித்த நீ, உன் மனைவியோடும் நம்முடைய பதத்தையடைந்து பேரின்பத்தை அநுபவித்துக் கொண்டிரு" என்று திருவாய் மலர்ந்தருளி, அந்தர்த்தானமாயினார்.

# தண்டியடிகணாயனார்

## திருக்குளம் கல்லல்

நீர்வளம் பொருந்திய சோழமண்டலத்திலே, திருவாரூரின்கண், தண்டியடிகணாயனார் என்னும் ஒரு சிவபக்தரிருந்தார். அவர் பிறவிக்குருடராயிருந்தும் தம் அகக்கண்ணினாலே சிவபிரானைத் தரிசித்து வந்தார். அவர் பரமசிவனிடத்திற் பேரன்புடையவர். எப்பொழுதும் பஞ்சாக்ஷரத்தையே அவர் பாராயணம் செய்கின்றவர். திருவாரூரிலுள்ள ஸ்ரீ கமலாலயத்தைக் காலந் தவறாது வலஞ்செய்து வணங்கி வருவார்.

அவர் காலத்தில், தியாகேசப்பெருமானுடைய ஆலயத்துக்கு மேற்றிசையிலிருக்கும் திருக்குளத்தின் பக்கமெங்கும் சமணர்களுடைய பாழிகளால் இடத்தாற் குறைவடைந்திருந்தது. தண்டியடிகணாயனார் அதனை அறிந்து, அத்திருக்குளத்தைத் தாம் பெருகக் கல்லல் வேண்டும் என்று திடங்கொண்டார். பிறவிக் குருடாயிருக்கும் இவருக்கு இக்காரியம் எவ்வாறு முடிவுபெறும்? அவர் திருக்குளத்திற்குச் சென்று, அங்கே தோண்டவேண்டிய இடத்தில் ஒரு தறிநாட்டி, மற்றோர் தறியைக் கரையில் நாட்டி, இவ்விரண்டு தறிகளினிடையில் ஒரு கயிற்றைக் கட்டினார். பிறகு அவர் மண்வெட்டியையும் கூடையையும் எடுத்து, தாம் கட்டியிருக்கும் கயிற்றைத் தடவிக்கொண்டுபோய், மண்ணைத் தோண்டிக் கூடையில் எடுத்துக்கொண்டு மீண்டும் அக்கயிற்றின் உதவியால் கரைசேர்ந்து, அம்மண்ணை அங்கே போடுவார்.

இப்படியே ஒவ்வொருநாளும் அவர் மிகுந்த ஊக்கத்துடன் திருக்குளம் தோண்டுகையில், அங்குள்ள சமணர்கள் பொறாமைகொண்டு, அவரிடஞ்சென்று, “நீர் மண்ணைக்கல்லிற் பிராணிகள் இறந்துபோம்; ஆதலால் பிராணிகளை வருத்தவேண்டாம்” என்றனர். தண்டியடிகள் அது கேட்டு, “அறிவில்லாதவர்களே! என்ன தெரிவித்தீர்கள்? மெய்த்தேவனாகிய பரமசிவனுக்குச் செய்யும் குற்றமற்ற அறத்தொண்டுக்கும் குறைகூறுதல் தகுதியோ? இதனருமை பெருமையை நீங்கள் அறியமாட்டீர்கள்” என்றார்.

அது கேட்ட சமணர்கள், “நாங்கள் தெரிவித்த தருமமுறையை நீ கேட்டாயில்லை. உனக்குக் கண்ணில்லாமற் போனதுடன் காதும் இல்லைபோல் தோன்றுகிறது” என, தண்டியடிகணாயனார் அவர்களைப் பார்த்து, “அகிலலோகமும் காணாக் கண்ணும், கேளாச் செவியும் உங்களுக்கே உள்ளன” என்று சொல்லி, “திரிபுரத்தை எரித்த ஈசன் திருவடிகளையேயன்றி வேறொன்றையும் நான் காணேன். அதனையறிதற்கு நீங்கள் யாவர்? அந்தச் சிவபிரானுடைய திருவருளால் உலகமெல்லாம் அறியும்படி என் கண் காணவும், உங்கள் கண் கெட்டுக் குருடாகவும் பெற்றால், நீங்கள் என்ன செய்வீர்கள்” என்றார்.

சமணர்கள் அதுகேட்டு, “நீ உன் கடவுளுடைய திருவருளினால் கண் பெற்றாயாகில், நாங்கள் இவ்வூரை விட்டு நீங்குவோம்” என்று சொல்லி, தண்டியடிகணாயனாருடைய மண்வெட்டியையும், கூடையையும் பறித்துக்கொண்டு, குறித்தறிகளையும் பிடுங்கி எறிந்தார்கள்.

சிவபத்தியிற் சிறந்த நாயனார் மிகக் கோபங்

கொண்டு, திருக்கோயிலை யடைந்து, திருவாயிலின் முன் சென்று இறைஞ்சி "எம்பெருமானே! தேவரீரை நிந்திக்கும் அதிபாதகர்களாகிய சமணர்கள் எனக்கு இடையூறு செய்தனர். திருக்குளங் கல்லுதலாகிய சிவபுண்ணியத்தையும், அதனைச் செய்யுமவரும் அடியேனையும் இன்று அவர்கள் பழித்தார்கள். அது பொறாது அடியேன் மிகவும் வருந்துகின்றேன். சகல வல்லமைகளுமுடைய தேவரீரே என்னுடைய வருத்தத்தை நீக்கியருளல்வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்து, வணங்கி, தம்முடைய திருமடத்திற்குச் சென்று, துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தார்.

### நாயனார் கண் காணப்பெற்றது

அன்றிரவு நாயனார் தூங்கிக்கொண்டிருக்கையில், கருணாநிதியாகிய பரமசிவன், அவருடைய சொப்பனத்தில் தோன்றி,

"நெஞ்சின் மருவுங் கவலையினை யொழிநீ
நின்கண் விழித்தந்த
வஞ்ச சமணர் தங்கண்கள் மறையு
மாறு காண்கின்று
மஞ்ச வேண்டா வென்றருளி யவர்பா
னீங்கி யவ்விரவே
தஞ்ச மிருளி லரசன்பாற் றோன்றிக்
கனவி லருள்புரிவார்.

"அன்பனே! நீ கவலைப்படவேண்டாம். நாளைக்கு உனக் கண் காணப்பெறவும் அந்தச் சமணர்களுடைய கண்கள் மறையவும் அருள்செய்வோம். இனி நீ அஞ்சற்க" என்று அருளிச்செய்து, சோழமன்னனுக்குஞ் சொப்பனத்திலே தோன்றி "தண்டி என்னும் ஒருவன் எம்மிடத்திலுள்ள பேரன்பால் எமக்குக் குளங்கல்லினான். சமணர்கள் அதுகண்டு பொறாது அப்பணிக்கு ஊறுசெய்தனர். நீ அவனிடஞ் சென்று அவன் மேற்கொண்ட கருத்தை முடிப்பாய்" என்று ஆக்ஞாபித்து மறைந்தருளினார்.



மன்னன் விழித்தெழுந்து, சிவபிரானைத் துதித்து, மறுநாட்காலையில் தண்டியடிகணாயனாரை யடைந்து, தான் கண்ட கனவினைத் தெரிவிக்க, நாயனார் மன்னனை நோக்கி, "அரசே! நான் திருக்குளங் கல்லும்போது, சமணர்கள் அங்குப் பிரவேசித்து, நான் செய்வது தருமமன்றென்று சொல்லி, நான் நட்டியிருந்த குறித்தறிகளைப் பிடுங்கி எறிந்து, என்னிடமிருந்த மண்வெட்டியையும் பறித்துக்கொண்டார்கள். இதுவுமன்றி 'நீ கண்ணேயன்றிக் காதினையும் இழந்தனையோ' என்று என்னைப் பழித்தார்கள். அதுகேட்ட நான் வருந்தி 'சர்வவல்லமையுள்ள சிவபெருமானது திருவருளால் என் கண் காணவும், உங்கள் கண் மறையவும் பெற்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்' என்று கேட்க, அவர்கள் 'நாங்கள் இந்த ஊரில் இரோம்' என்று தெரிவித்தார்கள். நீர் இந்த வழக்கைத் தீர்க்கவேண்டும்" என்றார்.

அப்பொழுது அரசன் சமணர்களை அழைத்துக் கேட்க, அவர்கள் நிகழ்ந்தவற்றைத் தெரிவித்து, அவர்கள் கண்ணிழக்கப் பெற்றால் அவ்வூரை விட்டகல்வதாக உறுதிசெய்தனர். உடனே தண்டியடிகணாயனார் முன்னே செல்ல, அரசன் அவரைத் தொடர்ந்து சென்று திருக்குளக்கரையை யடைந்து நாயனாரை நோக்கி, "சிவபக்தரே! நீர் பரமசிவனுடைய திருவருளி

றால் கண்பெறுதலைக் காட்டும்" என்றான். நாயனார் அதுகேட்டு, "சிவபெருமானே மெய்க்கடவுளும், அடியேன் அவருக்கு மெய்த்தொண்டனுமாயின், இம்மன்னனுக்கு முன்னே நான் கண்பெற்றுச் சமணர்கள் கண் இழப்பார்கள்" என்று சொல்லி, மனவுறுதியோடு, ஐந்தெழுத்தை யோதியவண்ணம் திருக்குளத்திலே முழுகிக் கண்பெற்று எழுந்தார். சமணர்களோ கண்ணிழந்து தடுமாறினார்கள்.

### சமணர்களின் அழிவு

அதுகண்ட அரசன், தன் ஏவலாளர்களால், தண்டியடிகளுடன் சபதஞ்செய்து கண்ணிழக்கப்பெற்ற சமணர்களைத் திருவாரூரினின்றும் துரத்தச் செய்தான்.

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு."

என்றபடி சமணர்கள் செய்ததீங்கு, அவர்களுக்கே சூழ்ந்துகொண்டதால் மிகவும் துன்புற்றனர். அவர்கள் கண்காணாமையால் மனங்கலங்கிக் குழியிலே விழுவார்கள்; வழி பற்றிச்செல்லக் கோலும் இல்லையே என்று தவிப்பார்கள். ஒரு பகுதியை வழியென்று நினைத்துத் தாழ்வை அடைவார்கள். "பொய்ப்பொருளை மெய்ப்பொருளெனக் கொண்டு அழிந்தோம்" என்று அவர்கள் தம் மதத்தைத் தூஷிப்பார்கள். அவர்கள் ஊரைவிட்டு ஓடாநிற்கையில் பாய்களை இழப்பார்கள்; பீலிகளைத் தடவிக் காணாமல் திரும்புவார்கள்; சற்று மயங்கி நிற்பார்கள்; காலும் கையும் முறியக் கற்களின் மேல் இடறி விழுவார்கள்; மிக நெருங்கி ஒருவரை



யொருவர் முட்டிக்கொள்ளுவார்கள்; ஓடுதற்கு வழி யறியாது மயங்குவார்கள்.

இப்படிச் சமணர்கள் கலங்கி அவ்வூரைவிட்டு ஓடியபின்னர், சோழமன்னன் சமணர்களுடைய பாழிகளையும், பள்ளிகளையும் பறித்துக்கொண்டு, திருக்குளத்துக்குக் கரைகட்டி மனமகிழ்ந்து, தண்டியடிகணாயனாரை வணங்கிக்கொண்டு போயினன். நாயனார் பரமசிவனைத் தியானித்து, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை யோதி, திருத்தொண்டு செய்துகொண்டிருந்து, சிவபதம் அடைந்தார்.

## அரும்பத வுரை

அ

அஞ்சலிசெய்து—கும்பிட்டு
அநுசிதம்—தகுதியின்மை, பொய்
அபிவிருத்தி—அதிகப்படுதல்
அறச்சாலை—தரும சத்திரம்
அறவே விடுத்தனர்—முற்றும் துறந்தனர்
அறிவிலிகள்—மூடர்கள்

ஆ

ஆதித்தன்—சூரியன்
ஆருகதசமயம்—அருகசமயம், சமணமதம்

இ

இடந்து—பறித்து, அப்புறப்படுத்தி
இருளி—பன்றி
இறைக்கத்தக்க—ஒடுக்கத்தக்க

உ

உத்தூளனம்—விபூதியை நீரிற் குழையாது தூளாகப் பூசுதல்
உபவீதம்—பூணூல்
உய்த்தேன்—கடேறினேன்
உவர்ப்பொதி—உவர்மண் மூட்டை
உவந்து—மகிழ்ந்து

ஊ

ஊறு—இடையூறு, தீமை
ஊன்—மாமிசம், நிணம்
ஊறு—இடையூறு



எ

எஞ்சியிருந்த—மிஞ்சிநின்ற

ஏ

ஏனம்—பன்றி

ஓ

ஓமாகுதி—யாகத்தி லிடும் பலி

க

கல்லை—இலைக் கலம்
கல்லல்—தோண்டல்
கவளி—கட்டு
கவளிகை—புத்தகமும் எழுத்தாணியும் அடைக்கி வைப்பதற்கு ஓலை அல்லது பட்டினால் அதனை வாகச்செய்து வைத்திருக்கும் பை
கவளீகரித்தல்—கவளமா யுண்ணல்
கனக மாரி—பொன் மழை

கா

கானவர்—குறிஞ்சி நில மாக்கள், வேடர்

கி

கிருகதாச்சிரமம்—வீட்டு ஆச்சிரமம்
கிலமா யிருக்கின்ற—அழிந் திருக்கின்ற

கு

குடுமித் தேவர்—பரமசிவன்
குந்தக்கோற்காரர்—முட்கோல்களை யுடையவர்
குராமரம்—குரவுமரம்
குருதி—இரத்தம்
குழுமி யிருக்கும்—கூடி யிருக்கும்
குலாலன்—குயவன்
குன்றவர்—வேடர்

கே

கேழல்—பன்றி

கோ

கொற்றக் குடை—வெற்றிக் குடை

ச

சங்கமபத்தி—சிவபக்தி
சமித்துக்கள்—ஓமவிறகுகள். அதாவது; அத்தி, அரசு, ஆல், இத்தி, கருங்காலி, நாயுருவி, பலாசு, மா, வன்னியென ஒன்பது விதம் கூடின விறகுகள்
சம்புரோக்ஷணம்—ஆலயப் பிரதிஷ்டை

சி

சிவதா, சிவதா—நன்மையைச் செய்கின்றவனே
சிவாஞ்ஞை—சிவனாணை

சே

சேமித்து—அடக்கஞ்செய்து

த

தரிசனவேதி—காட்சியில் இரும்பைப் பொன்னாக்கு மருந்து
தருக்கள்—மரங்கள்
தவளச் சத்திரம்—வெண் குடை
தறி—தூண்

தா

தாழி—குடம்

தி

திரிபுண்டரம்—மூன்று வரியாய்ப் பூசும் விபூதிப்பூச்சு
திருவலகு—கோவில் விளக்குமாறு
திருப்பள்ளித்தாமம்—சிவபிரானுக்குச் சாத்தும்படி கட்டும் மலர்மாலை



திருமஞ்சனம்—குளிப்பாட்டுதல்
திருவுள்ளம்—அழகிய மனம்
திருவோலக்கம்—மகாதிவ்ய சபை

தீ

தீக்கடைகோல்—நெருப்புக்கொள்ளி

தூ

தூறு—சிறு செடிகள் சேர்ந்தகாடு

தொ

தொடர்பின்றி—சம்பந்தமில்லாமல்

நி

நிபந்தங்கள்—கடமைகள்
நியதியாக—முறைமையாக
நிழற்ற—தண்மையாயிருக்க

ப

பக்தவச்சலன்—கடவுள்
பஞ்சகவ்வியம்—கோமயம், கோமூத்திரம், தயிர், நெய், பால் என்பன
பண்டாரம்—திரவியங்கள்
பசிய—பசுமையாகிய
பசுங்கிரை—பசுமரக்கிளை
பரத்தை—வேசி
பரிகலம்—மகாத்மாக்க ளுண்ணும் பாத்திரம்
பரிசனம்—உறவு, ஏவல் செய்வோர்
பவனி வந்தார்—உலாவி வந்தார்
பள்ளர்—உழவர்
பருகி—குடித்து, புசித்து
பலாசத் தண்டு—முருக்குக் கழி

பா

பாழிகள்—மடங்கள்

பீ

பீலி—மயிற்றோகை

பு

புலைச்சேரி—கீழ்மக்கள் வசிக்கும் ஊர்
புறச் சமயிகள்—சமணர்கள்
புனிதன்—சுத்தன்
புனிதவதி—சுத்தமுடையவள்

பூ

பூசுரன்—அந்தணன்
பூசாந்தத்திலே—பூசை முடிவிலே

பொ

பொதி—மூட்டை

ம

மறவர்—பாலைநில மாக்கள், வேடர்
மறையவர்—அந்தணர்

மா

மாமாத்திரர்—வைத்தியர்
மானியம்—அரசர்கள் சம்மானத்தால் விடப்பட்ட [நிலம்

மு

முகர்ந்து—மொண்டு

மே

மேயப்பட்ட—மூடப்பட்ட

வ

வராகம்—பன்றி
வழுவாது—தப்பாது



வனசரர்—வேடர்
வனைந்து—அலங்கரித்து

வெ

வெருட்கொண்டு—அச்சங்கொண்டு
வெள்கி—வெட்கமடைந்து
வெட்டியான்—பறையன்

வை

வைகறையில்—விடியற்காலத்தில்
வைரவர்—சிவன்

## செய்யுள் விளக்கம்

பக்கம்.

13 வந்தவர்.....வீழ்ந்தார்—பசிய தழைகளால் கட்டப்பட்ட மாலையைத் தரித்த மார்பினையுடைய திண்ணனார் வந்தவுடனே, சிவபெருமானது கண்ணிலிருந்து ஒழுகுகின்ற உதிரத்தைப் பார்த்து மயங்கினார். தாம் பொன்முகலியாற்றிலிருந்து திருமஞ்சனத்திற்காக வாயில் கொண்டு வந்த நல்ல நீரும் நிலத்தில் சிந்திப்போகவும், கையிலிருக்கின்ற மாமிசமும் வில்லுடன் சிதறிக் கீழே விழவும், கொத்தாக மலர்ந்திருக்கின்ற மலர்களும் குடுமியினின்றும் அலைந்து கீழே விழவும் பூமியில் பதைபதைத்து விழுந்தார்.

16 அன்பின்.....உடம்பு—அன்பு முதலாக அதன் வழி நின்ற உடம்பே உயிர்நின்ற உடம்பாகும். அவ்வன்பில்லாதார்க்குள்ள உடம்புகளானவை எலும்பைத் தோலினாலே போர்க்கப்பட்டனவாம்; உயிர்நின்ற வுடம்பாகா.

17 மற்றை.....பவித்திரை யாள் — மேற் சொல்லிய தன்மையைப் பெற்ற எச்சதத்தனுடைய மனைவியானவள் நல்ல மரபில் பிறந்தவள், சுற்றத்தார் விரும்பத்தக்க இல்வாழ்க்கையைக் குறைவின்றி நடத்துகின்ற நற்செய்கையையுடையவள், உலகத்தில் தமக்குத் துணையாய்ச் சண்டேசுர நாயனாரைப் புத்திரராகப் பெறுதற்குரிய சிறந்த தவத்தைச் செய்தவள், பெறவேண்டிய வீடுபேற்றின் முடிவாகிய பயனைப் பெறத்தக்கவள்.



பக்கம்.

உலகப்பற்றை நீக்குதற்குக் கருவியாகிய சிவநேசமானது வருதற்குச் சார்பான குணத்தினையுடைய பவித்திரை யென்பவளிருந்தாள்.

24 உரனென்னுந்.....வித்து—அறிவென்னு மங்குசத்தினாலே பொறிகளாகிய யானைகள் ஐந்தையும் தன் தன் புலன்களின்மேல் செல்லாமற் காப்பவன், எல்லா நிலங்களினும் மேலானதென்று சொல்லப்படுகிற மோட்ச நிலத்துக்கு ஒரு வித்தாவான்.

30 கையினைத்துணித்த....தோளார்—கரிய மலையை யொத்த அந்த யானையானது துதிக்கையை வெட்டின பொழுது, கடல் முழங்குவதுபோலப் பேரிரைச்சலிட்டு விழுந்து புரள, அதனருகில் வந்துகொண்டிருந்த கொடிய குத்துக் கோற்காரர்கள் மூவரும், மேலேறிவந்த பாகர் இருவரும் ஆகிய ஐந்து பேரையும் சங்கரித்து நின்றார், பெரிய மலைபோன்ற தோள்களையுடைய எறிபத்த நாயனார்.

32 இன்னாசெய்தாரை....விடல்—தமக்குத் துன்பக் கருமங்களைச் செய்தவரைத் துறந்தோர் தண்டித்தலாவது, தாமே நாணும்படி அவருக்கு இனிமையான மகிழ்ச்சிகளைச் செய்துவிடலேயாம்.

38 வணங்கு.....கொடுப்பார்—தம்மை வணங்கும் நாயனாரை மறையவர் கண்டு "நாம் காவேரி நதியில் நீராடி வருவோம். திரும்பிவரும் வழியில் மழை வரினும் நாம் தரித்துக்கொள்ளும் பொருட்டு உலர்ந்திருக்கும் இந்தக் கோவணத்தைப் பத்திர

பக்கம்.

மாய் நீர் வைத்திருந்து தரவேண்டும்" என்று சொல்லிப் பலாசத் தண்டிலிருந்த ஒரு கௌபீனத்தை அவிழ்த்து அவரிடம் கொடுத்தார்.

39 போன வேதியர்....வந்தணைந்தார்—காவிரி நதியில் நீராடுதற்குப்போன அப்பிராமணர், அமர்நீதிநாயனார் பத்திரப்படுத்தியிருந்த கோவணத்தினை அவ்விடத்தினின்று மறைந்து போகும்படி செய்து, குவளைமலர்கள் மலர்ந்திருக்கின்ற துறையினையுடைய காவிரிநீரில் ஸ்நானஞ்செய்து வந்தாரோ? அல்லது பரிசுத்தம் பொருந்திய அழகிய சடையிலுள்ள கங்கைநீரில் ஸ்நானஞ்செய்து வந்தாரோ? மேகமானது மழை பொழிந்துகொண்டிருக்க அதில் நனைந்துகொண்டு அமர்நீதிநாயனாரது திருமடத்தில் வந்து சேர்ந்தார்.

42 மனத்துக்கண்....பிற—அறஞ் செய்பவன் தன் நெஞ்சினிடத்துக் குற்றமில்லாதவனாதற்கடவன், தருமமாவது அவ்வளவே. அது ஒழிந்த சொல்லும் வேடமும் அறமெனப்படுவனவல்ல, ஆரவார குணத்தை யுடையனவாம்.

63 நாதமறைதேர்..விதிவிளக்க—அக்காலத்திலிருந்த நீதியையுடைய சோழ மன்னன் சிங்காதனத்தில் வீற்றிருந்து, இசைவடிவாகிய வேதங்களையுணர்ந்த நமிநந்தியடிகணாயனார் நல்ல திருத்தொண்டாகப் பூதகண நாதராகிய வன்மீக நாதருக்கு வேதாகமவிதி விளங்க அமுதுபடி முதலாக வேண்டிய நிபந்தங்கள் பலவற்றையும் ஏற்படுத்தினான்.



பக்கம்.

69 இல்லதே....கடை—ஒருவனுக்கு மனையாள் நற்குண நற்செய்கைகளை யுடையவளாயிருந்தால் இல்லாதது யாது? அம்மனையாள் அப்படிப்பட்டவளாகாதிருந்தால் உள்ளது யாது?

72 ஈங்கிவன்....நின்றார்—இப்பரமதத்தன் மனத்திற் குறித்த எண்ணம் இவ்வாறிருக்கின்றது. ஆதலால், இனிமேல் இவன் பொருட்டுச் சுமந்திருந்த அழகமைந்த மாமிசப்பொதியை இங்கு ஒழித்து, ஸ்ரீ கைலாயகிரியில் உம்மிடத்தில் சூழ்ந்து நிற்கின்ற சிவகணங்கள் போற்றுதற்குரிய பேய்க்கணங்களின் வடிவத்தை அடியேனுக்கு முறைமையாகத் தந்தருளவேண்டுமென்று சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி நின்றார்.

79 பன்முறை....மென்பார்—பலவகைப்பட்ட உயிர்களையெல்லாம் பரிபாலித்து உலகத்தையாளும்படி தனது நெடிய வெண்கொற்றக்குடையின்கீழ் நான்கு வருணத்தாரும் தங்கள் தங்களுக்குரிய தரும நெறிகளில் தவறாமல் நடக்கும்படி செய்து வாழ்கின்ற அரசர்களில்லாமல் தங்கிய இப்பூவுலகமானது, ஆலோசிக்குமிடத்தில், இனிய உயிரில்லாமல் வாழ்கின்ற உடம்பை யொக்குமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

81 அறனறிந்தான்றமைந்த....துணை—அரசனாலே செய்யப்படும் அறங்களைத் தெரிந்து, தனக்கேற்ற கல்வியாலே நிறைந்தமைந்த சொல்லையுடையவனாகி எந்நாளிலும் தொழில் செய்யுந்திறங்களை அறிந்தவன், ஆலோசனைக்கு அவனுக்குத் துணை

பக்கம்.

யாவான்.

84 மெய்யெலா....நாதன்—தனது தேகமுழுமையும் விபூதியைத் தரித்துத் தலையிலுள்ள சடைகளை ஒன்றாகச் சேர்த்துக்கட்டி, உடைவாளை மறைத்து வைத்திருக்கின்ற புத்தகக் கவளியைக் கையில் தாங்கிக்கொண்டு, கருமை நிறத்தைத் தன்னுள்ளே வைத்திருக்கின்ற தீபத்தைப்போல மனத்தில் களங்கத்தை வைத்துக்கொண்டு, பொய்யாகிய தவவேடத்தைப் பூண்டு முத்தநாதனென்னும் அப்பகையரசனானவன் மெய்ப்பொருணாயனாரிடத்திற்கு வந்தான்.

87 ஒறுத்தார்க்கு....புகழ்—தமக்குத் தீங்கு செய்தவரை ஒறுத்தவர்க்கு உண்டாவது அவ்வொரு நாளை யின்பமே, அதனைப் பொறுத்தவர்க்கு உலக மழியுமளவும் கீர்த்தி உண்டாகும்.

95 மதிமலிபுரிசை......வரவிடுப்பதுவே—சந்திரன் தவழுகின்ற மதில் சூழ்ந்த மாடங்களையுடைய கூடற்பதியிலங்கண் விளங்கும் வெள்ளிய நிறத்தையும் வரிகளையும் உடைய இறக்கைகள் செறிந்த அன்னப்பட்சிகள் வசிக்கின்ற சோலைசூழ்ந்த ஆலவாயில் இருக்கின்ற சிவன் யான் சொல்லுகின்ற சொல்லானது:—

கூல்கொண்ட மேகத்தையே படியெனக் கொண்டு பாவலர்க்குக் கொடுக்கவேண்டிய உரிமைப்படி மனவுரிமையோடு கொடுத்து விளங்குகின்ற வெள்ளிய நிலவுபோன்ற வெண்கொற்றக் குடைக்கீழ் சிம்மாசனத்தின்மீது இருந்த அரச



பக்கம்.

செலுத்தும் சேரன் காணக்கடவது யாதெனில்:-

இசைக் குணத்தோடு வீணை பயில்வதில் வல்லவனான பாணபத்திரனென்பான் என்பால் உன்னைப்போல் அன்பன். ஆதலின் உன்னைக் காண வெண்ணி உன்னிடத்திற்கு வந்தனன். அவற்கு மிக்க பொருள் கொடுத்து அனுப்புக.

98 பொன்வண்ண.....வீசனுக்கே—தன்னை யுணர்ந்த என் வண்ணம்போலுமிருக்கிற ஈசனுக்குப் பொன் வண்ணம்போலு மேனியும், பிரகாசிக்கின்ற மின் வண்ணம்போலும் தொங்கிய சடையும், வெள்ளி மலைபோலும் பெரிய ரிஷபவாகனமுமாம்.

115 செந்தீமே....மொழிந்தார்—சிவந்த நெருப்பில் முழுகி மேல் எழுந்தபொழுது, சிவந்த தாமரை மலரில் தோன்றி யெழுந்த பிரமனைப்போல் விளங்கினார்; பெருமை தங்கிய ஆகாயத்தில் தேவதுந்துபியின் ஒலியானது உண்டாயிற்று; தேவர்கள் மனமகிழ்ந்து ஆரவாரித்துப் பசிய தளிர்களையுடைய கற்பக விருட்சத்தின் குளிர்ந்த மலர் மழைகளைச் சொரிந்தார்கள்.

120 கையினிற் கவர்ந்து......வந்தான்—கையில் கடித்ததைச் சுற்றிக்கொண்டு, கண்ணினின்றும் கோபத்தீயைச் சொரிகின்ற படத்தையுடைய பாம்பை உதறிக் கீழே தள்ளி, பதைபதைப்புடனே பாம்பு கடித்த கொடிய வேகத்தினாலே நிலத்தில் விழுமுன்னே வேகத்தோடு ஓடி, அரிந்த வாழைக் குருத்தைக் கொண்டுபோய்க் கொடுப்பேனென்று ஓடிவந்தான்.

பக்கம்.

124 செல்விருந்தோம்பி.....தவர்க்கு—தன்னிடத்திலே வந்த விருந்தை உபசரித்து, பின்வரும் விருந்தை எதிர்நோக்கி, தான் அதனை நின்று விரும்புவோன் மறுபிறப்பிலே தேவராய் வானிலுள்ளவர்க்கு நல்ல விருந்தாவான்.

127 வந்தபின்.....வீழ்த்தார்—தமது வீட்டிற்கு வந்த பின்பு அவரது மனைவியாரும் வாசலில் நின்று எதிர்பார்த்திருந்து, அக்கூடையை வாங்கிக் கொண்டு, மனத்தில் சந்தோஷத்தையடைந்து, நீரினாலே அந்த நெல்லில் ஒட்டியிருந்த சேற்றைக் கழுவியூற்றிப் பின்பு அடுப்பில் வைத்து நெருப்பு மூட்டுவதற்கு விறகில்லையே யென்று சொல்ல, அவ்விளையான் குடிமாற நாயனார், விலமாயிருக்கின்ற தம்முடைய வீட்டின் வரிச்சுகளை அறுத்துத் தள்ளினார்.

132 நெஞ்சின்.....லருள்புரிவார்—"நீ உன் மனத்தினிடங்கொண்ட கவலையை ஒழிக்கக் கடவாய். உனக்குக் கண்ணை யளித்து, வஞ்சகராகிய அந்தச் சமணர்களுடைய கண்களை மறையும்படி செய்வோம்; அதை நீ காணப்பெறுவாய்; பயப்பட வேண்டாம்" என்று திருவாய் மலர்ந்தருளி, அவ்விடத்தினின்றும் நீங்கி அவ்விரவிலேயே சோழமன்னனுக்குக் கனவிற்றோன்றி யருள்செய்தார்.

134 மறந்தும்.....கேடு—ஒருவன் பிறனுக்குக் கேட்டைத்தரும் வினையை, மறதியைப் பொருந்தியும் எண்ணாதிருக்கக்கடவன். அப்படி எண்ணுவானாயின் அவ்வெண்ணினவனுக்குக் கேட்டைத் தரும் வினையை அறக்கடவுள் எண்ணுவார்.

67691

## மாணவர்களுக்கு உபயோகமான வேறு தமிழ்ப் புத்தகங்கள்.

---

கா. ஸ்ரீ. அரங்கசாமி நாயுடு எழுதியவை

| | | | |
|---|---|---|---|
| * உத்தரகுமாரன் | 0 | 8 | 0 |
| * மனுச்சோழன் | 0 | 8 | 0 |
| * தசமுகன் | 0 | 8 | 0 |
| சூரபதுமன் | 0 | 8 | 0 |

ம. க. ஜயராம் நாயுடு எழுதியது

| | | | |
|---|---|---|---|
| * ஜீமூதவாகனன் | 0 | 8 | 0 |

எஸ். எஸ். அருணகிரிநாதன் எழுதியவை

| | | | |
|---|---|---|---|
| முப்பெருந்தொண்டர் | 0 | 8 | 0 |
| முத்துக்குமாரன் | 0 | 6 | 0 |

---

* இக்குறியுள்ளவை துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பெற்றன.